
# கல்கி




KALKI அக்டோபர் 21, 1951 4 அணா

# இச்சிறு கைகள் விளையாடுகின்றன, ஆனால்...



# ...விளையாடும் கைகளும் அழுக்கடைகின்றன!




அழுக்கடைந்த கைகள்

## மறைந்திருக்கும் அபாயத்தைத் தாங்குகின்றன!

அழுக்கில் கண்களுக்கு
புலப்படாத கிருமிகள் இருப்பதால்!

லைப்பாயினால் அடிக்கடி கழுவுங்கள்

# லைப்பாய் சோப்

அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து
உங்களை காப்பாற்றுகிறது!

L. 181-50 TM

# பொருள் அடக்கம்

கல்கி

மலர் 11
இதழ் 12

1951 அக்டோபர் 21

கர ஐப்பசி 4வ


| | | | |
|---|---|---|---|
| சத்தியவதி நகரிலே ...... | (தலையங்கம்) | ... | 3 |
| "கூட்டுத் தள்ள வேண்டும்!" | ... | ... | 4 |
| வேதாளம் முருங்கை மரத்தின்மேல்...... | சாஸ்திரி | ... | 5 |
| சங்கீத பீதி தீர்ந்தது! | ... | ... | 5 |
| அட்டைப்பட விளக்கம் | —போட்டோ : ஏ. எம். உஸேன் | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 8 |
| கோமளம் கோலம் போட்டான்! | பூவாளூர் சுந்தரராமன் | ... | 18 |
| ஆரோக்கிய ரகசியம் | வி. என். குமாரசாமி | ... | 23 |
| ஜாலபுரி இளவரசன் (பாப்பா மலர்) | கமலா | ... | 26 |
| ஐந்து நிமிஷம் போதும்! | விஜயம் | ... | 28 |
| கார் செய்தார்? | சாமா | ... | 29 |
| வீடு காலியா? | மாஜு | ... | 30 |
| தீபாவளிப் பரிசு | வி. ரங்கராஜன் | ... | 31 |
| கடவுளின் குற்றம் | ஆர். ராஜகோபாலன் | ... | 34 |
| மத்திய கேந்திரம் | ஜெயமணி | ... | 37 |
| வாழ்க குடியாட்சி! | ஸ்ரீ குனிலால் மதியா—பி. எஸ். மணி | ... | 39 |
| மனம் தெளிந்தது! | கே. ஆர். கௌசல்யா | ... | 43 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

தீபாவளியை முன்னிட்டு கவர்ச்சிகரமான அசல் கோள்ளே காலம் பட்டு புடவைகள், உறுதியான நெசவு, நவநாகரீகமான டிசைன்கள், மற்றும் வேஷ்டிகள், அங்க வஸ்திரங்கள் ஏராளமாக குவிந்துள்ளன. அதி நூதனமான டான்சிங் பார்டர் முதலிய நூதன டிசைன் உடன் கூடிய மைசூர் கிரேப் சில்க் சேலைகளும், ஜார்ஜெட் சேலைகளும் தீபாவளிக்கென்றே வந்துள்ளன.

நாணயம், நம்பிக்கை, நயம் ஒருங்கே அமைந்த சிறந்த இடம்.

## ஆரணி ஸில்க் ஹவுஸ்

சன்னதி தெருவு :: மைலாப்பூர் :: மதராஸ்

★

எங்கள் கோள்ளேகாலம் சேலைகள் கீழ்க்கண்ட இடங்களில் மதராஸ் விலைக்குக் கிடைக்கும்

நியூ டெல்லி

தி சௌத் இந்தியன் கிளப் கோ-ஆபரேடிவ் சப்ளை சோஸைடி லிமிடெட்
9, ஜந்தர் மந்தர் ரோடு

கல்கத்தா

மெஸர்ஸ். சுதர்சன் & பிரதர்ஸ், 1/4, பிரின்ஸ்குலாம் முகமத் ரோட், காளிகாட் போஸ்ட்


அக்டோபர்
29
முதல்
சென்னை
பிரபாத்
வெலிங்டன்
இரு தியேட்டர்களிலும்
மற்றும் தமிழ்நாடெங்கும்
வெளிவருகிறது...
சம்சாரம்
தமிழ்
பல உருக்கமான
சம்பவங்கள் நிறைந்த
உன்னதச் சித்திரம்
ஜெமினி தயாரிப்பு...

கல்கி

மலர் 11 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 12

# சத்தியவதி நகரிலே....

பாரத நாட்டின் சரித்திரத்திலே புகழ் பெற்று, அமர வாழ்வு எய்திய வீரப் பெண்மணி சத்தியவதி தேவியின் திருநாமத்தை இவ்வாரத்தில் பாரத மக்கள் யாவரும் உச்சரிக்கும்படியான அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

அவ்வாறு உச்சரிப்பதன் பயனாக, சோர்ந்த உள்ளங்களுக்கு உற்சாகம் ஏற்படலாம்; அவநம்பிக்கையாகிற இருள் அகன்று நம்பிக்கை ஒளி வீசலாம்; பாரத மக்களின் மூச்சிலே ஒரு புதிய சக்தி பிறக்கலாம்

ஏனெனில் அந்தக் காலத்திலே நம்பிக்கையிழந்து, சோர்ந்து கிடந்த மேவார் மன்னர்களின் மனதில் உற்சாகத்தை ஊட்டி, அவர்களை வீர திலகங்களாக மாற்றி, மேவார் சாம்ராஜ்யத்தின் மானத்தைக் காப்பாற்றிய பெருமை சத்தியவதி அம்மையாருக்கு உரியது அல்லவா?

அத்தகைய பெண்ணரசியின் பெயர் பூண்டு சிருஷ்டிக்கப்பட்டுள்ள நகரில்தான் இந்திய தேசிய மகாசபையின் விசேஷக் கூட்டம் இப்போது நடைபெற்றது.

பாரத நாட்டின் நெருக்கடியான கட்டங்களில்தான் தேசிய காங்கிரஸ் மகாசபையின் விசேஷக் கூட்டங்கள் நடைபெறுவது வழக்கம்.

தற்போது நமது தாய்த் திருநாடு மிகவும் நெருக்கடியான ஒரு கட்டத்தை அடைந்திருக்கிறது

இந்தியா பெற்ற சுதந்திரம் நிரந்தரமாக நிலைப்பதும், அதன் பூரண பலனை மக்கள் அடைந்து சுபிட்சமாக வாழ்வதும், வரப்போகும் பொதுத் தேர்தலில் அவர்கள் செய்யும் முடிவையே பொறுத்திருக்கிறது.

சுதந்திரப் போராட்டம் நடந்தபோது காங்கிரஸ் மகாசபை ஜனங்களுக்கு வழி காட்டியாக இருந்து வந்தது அல்லவா? அது போலவே பெற்ற சுதந்திரத்தைப் பேணும் விஷயத்திலும் காங்கிரஸ்தான் வழிகாட்டியாக இருந்து வரவேண்டும்.

காங்கிரஸ் மகாசபையில் சமீப காலத்தில் பல ஊழல்கள் புகுந்து விட்டபடியால் அம் மகாசபை ஓரளவு பலவீன முற்றிருப்பது உண்மைதான். என்றாலும், இன்னும் ஐந்து அல்லது பத்து வருஷங்களுக்குக் காங்கிரசின் உயர்ந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளும் சக்தி வேறு எந்தக் கட்சிக்கும் ஏற்படுவது முடியாத காரியம்.

* * * *

காங்கிரஸ் மறுபடியும் பழைய அந்தஸ்தையும் கௌரவத்தையும் சக்தியையும் பெறுவதற்காகப் பண்டித ஜவஹர்லால் நேரு பெரு முயற்சி செய்து வருகிறார்; பல முறைகளைக் கைக் கொண்டு வருகிறார்.

புதுடில்லி சத்தியவதி நகரில் காங்கிரசின் விசேஷக் கூட்டம் நடைபெறுவதற்கு வழிகோலியதும் அவர் கைக் கொண்ட முறைகளில் ஒன்றாகும்.

இனி காங்கிரஸ் மகாசபையில் மீண்டும் சேருவதில்லை என்று சத்தியம் செய்துவிட்டுக் கோபத்துடன் வெளியேறியவர்கள் கூட, ஜவஹர்லால்ஜியின் முயற்சியின் பெருமையை நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள் புதிய கட்சியை விட்டுவிட்டு மறுபடியும் காங்கிரஸில் சேருவதற்கு ஓடோடியும் வருகிறார்கள்.

எனவே, ஜவாஹர்லால்ஜியின் தலைமையில் காங்கிரஸ் மீண்டும் தூய்மையடைந்து, சக்தியுடனும் செல்வாக்குடனும் விளங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

நமது தலைமுறையில், அதாவது இருபத்திரண்டு வருஷங்களுக்கு முன் லாகூர் காங்கிரசில் முதன் முதலாகச் சுதந்திரத் தீர்மானம் வந்தது. சரித்திரப் பிரசித்தி பெற்ற அந்தக் கூட்டத்துக்குப் பண்டித ஜவாஹர்லால் நேருவே தலைமை வகித்தார்.

அந்தக் கூட்டத்தில் நிறைவேறிய மேற்படி சுதந்திரத் தீர்மானம் ஏட்டுத் தீர்மானமாகி விடாமல் நமது கண் முன்னிலையிலேயே அமு லுக்கு வந்து பாரதநாடு பெறுதற்கரிய சுதந் திரத்தைப் பெற்றது.

பெற்ற சுதந்திரத்தை நிலைநிறுத்திக் கொள் வதற்காக இப்போது டில்லியில் நடைபெறும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்கும் ஜவாஹர் லால்ஜியே தலைமை வகிப்பது பாரத மக்களின் பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே சத்தியமூர்த்தி நகர் காங்கிரஸ் கூட்டத் தில் நிறைவேறும் தீர்மானங்களும் ஏட்டுத் தீர் மானமாக இருந்து விடாமல் அனுஷ்டானத் துக்கு வருமாக! பாரத நாட்டை உள்ளும் புறமும் சூழ்ந்து நிற்கும் இன்னல்களும் இடையூறு களும் ஒழிந்து நன்மைகள் வளர்ந்தோங்குமாக!

# "சுட்டுத்தள்ள வேண்டும்!"


மோட்டார் பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டிய இடத்தில் சிலர் நின்று கொண்டிருந் தார்கள். அவர்களில் ஒருவர் பார்ப்பதற்கு நல்ல அந்தஸ்திலுள்ள படித்த மனிதராகக் காணப் பட்டார். நாகரிகமாக உடை தரித்திருந்தார். ஆனால் அவர் பேசிய வார்த்தைகள் இரத்தக் கொதிப்புள்ள பயங்கரப் புரட்சிக்காரரின் பேச் சைப்போல் இருந்தன.

"நான் என்ன சொல்கிறேன், தெரியுமா! கம்யூனிஸ்ட் புரட்சி உடனே வந்துவிட வேண்டு மென்கிறேன். கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துக்கு வந்தால் எல்லாரையும் ஒரேயடியாகச் சுட்டுத் தள்ளி விடுவார்கள் பாருங்கள்! பணக்காரன்—ஏழை, முதலாளி—தொழிலாளி, உத்தியோகஸ் தன்—குடித்தனக்காரன்—எல்லாரையும் வரிசை யாக நிறுத்திச் சுட்டு விடுவார்கள் பாருங்கள்! அப்படிச் செய்தால்தான் நம் தேசத்தார்களுக்குப் புத்தி வரும்! வித்தியாசமே பார்க்கக் கூடாது! எல்லாரையும் சுட்டுத் தள்ளிவிட வேண்டும்!" என்று அந்த மனிதர் ஒரேயடியாக இரைச்சல் போட்டுப் பேசுவதைக் கேட்டு ஒரு பெரிய கூட்டம் அந்த இடத்தில் சேர்ந்து விட்டது.

நல்லவேளையாக அச்சமயம் மோட்டார் பஸ் ஒன்று வரவே, அந்த மனிதர் அதே ஆத்திரத் துடன் பாய்ந்து பஸ்ஸில் ஏறிப்போய் விட்டார்.

பிறகு விசாரித்ததில், அந்த மனிதர் அப்போது தான் இன்கம்டாக்ஸ் ஆபீஸிலிருந்து திரும்பி வந்தார் என்று தெரிந்தது. அங்கே அவரை வரு மான வரி இலாகா அதிகாரிகள் அப்படியும் இப் படியும் போட்டு வறுத்து எடுத்ததின் காரண மாகவே, அந்தக் கௌரவ அந்தஸ்து வாய்ந்த மனிதர் சில நிமிஷ நேரத்துக்கு அவ்வளவு பயங் கரப் புரட்சிக்காரராக மாறிப் போயிருந்தார்!

இவ்விதம் மனிதர்களை வறுத்து எடுப்பதற்கும் மரியாதைக் குறைவாக நடத்துவதற்கும் பெயர் போன வருமான வரி இலாகாவில் உதவிப் பொக் கிஷ மந்திரியான ஸ்ரீ தியாகி என்பவர் ஒரு பெரும் புரட்சியை உண்டு பண்ணி வருவதாகச் சில காலமாய்ச் செய்திகள் வெளியாகி வருகின்றன. வரி கொடுப்பவர்களை அநாவசியமான தொல்லை களுக்கு ஆளாக்கக் கூடாது, மரியாதைக் குறை வாக நடத்தக் கூடாது என்றெல்லாம் அநேக மான விதிகளை ஸ்ரீ தியாகி மேற்படி இலாகா உத்தியோகஸ்தர்களுக்குள்ளே புகுத்துவதற்கு




மத்திய கேந்திர நாடுகள் ஒவ்வொன்றுகப் பிரிட்டனுக்குத் தொல்லை விளைவிக்க முற்பட்டிருக்கின்றன




வேதாளம் முருங்கை மரத்தின்மேல் ஏறிக்கொண்டது!

முயன்றார். அது மட்டுமா! வரி கொடுக்காமல் வருமானத்தை மறைத்து வைத்த பெரிய மனிதர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டவும் முன் வந்தார். "கணக்கில் விட்டுப்போன வருமானங்களைக் குறிப்பிட்ட தேதிக்குள் ஒப்புக் கொள்கிறவர்களுக்குத் தண்டவரி கிடையாது; தண்டனையும் கிடையாது!" என்று சொன்னார். இதற்கு மூன்று, நான்கு தவணைகளும் கொடுத்தார். இப்படியெல்லாம் செய்ததின் பயனாக ஒளிக்கப்பட்ட வருமான இனங்களைச் சம்பந்தப்பட்டவர்கள் முன் வந்து ஒப்புக் கொண்டார்கள். அதன் பேரில் இந்திய சர்க்காருக்கு ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் வருமானமும் கிட்டி யிருக்கிறது.

ஸ்ரீ தியாகி காட்டிய வழி சிறந்த பலன் தந்திருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது வரையில் ரொம்பப் பெரிய மனிதர்கள் விஷயத்திலேதான் அந்த வழியை அனுசரித்துப் பார்க்கிறார்கள். வரி கொடுக்கிறவர்களை மரியாதையாக நடத்த வேண்டும், வீண் தொல்லைக்கு ஆளாக்கக் கூடாது என்ற முறை வருமான வரி இலாகா முழுவதிலும் அமுலுக்கு வந்தால் எவ்வளவோ நன்றாயிருக்கும். நாம் ஆரம்பத்தில் குறிப்பிட்ட பஸ் ஸ்டாண்டு புரட்சிக்காரர்களைப் போன்றவர்கள் தோன்ற மாட்டார்கள்.

ஏன்! வருமான வரி இலாகா மட்டும் என்ன! வரி வசூல் செய்யும் பொறுப்புடைய எல்லா இலாகாக்களுமே மரியாதையைக் கைக் கொள்வது மிக்க பயன் அளிக்கும்.

நில வரி, விற்பனை வரி, வியாபார வரி முதலிய வரிகளை விதிக்கும் உத்தியோகஸ்தர்களும் வசூலிக்கும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் கடமையைச் சரிவரச் செய்ய வேண்டும். அதே சமயத்தில் வரி கொடுப்பவர்களைக் கஷ்டப்படுத்துவதற்காகவே தங்களுக்குச் சர்க்கார் சம்பளம் கொடுக்கப்படுகிறது என்ற எண்ணத்தையும் விட்டுவிட வேண்டும். ஸ்ரீ தியாகி அவர்களைப் போல் மற்ற வரி இலாகா மந்திரிகளும் இது விஷயத்தில் கவனம் செலுத்தினால் தற்சமயம் பொது ஜனங்களிடையே குடி கொண்டிருக்கும் அதிருப்தியில் சரி பாதியைப் போக்கி விடலாம்.

# சங்கீத பீதி தீர்ந்தது!

சொந்த வியாபாரம், சொந்தத் தொழில் முதலியவை சம்பந்தமாக வரி வசூல் அதிகாரிகளிடம் படும் தொந்தரவே ஒரு மனிதனைப் பயங்கரப் புரட்சி வாதியாக்கி விடக் கூடும் என்றால், பொது நலக் காரியங்களில் ஈடுபட்டவர்களை அத்தகைய தொல்லைகள் என்ன பாடு படுத்திவிடும் என்று சொல்லவும் வேண்டுமா!

சங்கீதக் கலையில் ஒருவனுக்குப் பிரியம் இருந்தால், அது ஒரு ஆபத்தான குற்றம் என்று சொல்லும்படியான அவல நிலைமை இந்த மாகாணத்தில் இருந்து வந்தது.

திருவல்லிக்கேணியில் ஸ்ரீ பார்த்தசாரதி சபை நெடுங் காலமாகச் சங்கீதக் கலையை வளர்ப்பதற்குப் பாடுபட்டு வருகிறது. அச்சபையின் தலைவ

ரான அட்வகேட் ஸ்ரீ சீனிவாச அய்யங்கார் சென்ற விஜயதசமியன்று நடந்த இசை நிகழ்ச்சியின் போது கூறினர் :—" தினம் பொழுது விடிந்தால் 'உம்மை ஏன் கைது செய்யக் கூடாது என்பதற்குக் காரணம் காட்டவும்' என்று எனக்கு ஒரு நோட்டீஸ் வந்து கொண்டிருக்கும். சங்கீத சபை நடத்திய குற்றத்துக்காக என்றைய தினம் என்னைச் சிறையிலே தள்ளுகிறார்களோ என்ற பீதியுடனேயே காலங் கழித்து வந்தேன். தமாஷாவரி சம்பந்தமான சட்ட திட்டங்கள் அப்படி எங்களைப் பாடாய்ப் படுத்தி வந்தன. அத்தகைய பீதியை நிவர்த்திப்பதற்குச் சென்னை சர்க்கார் முன் வந்ததற்காக மிக மிக வந்தனம்!"

ஸ்ரீ சீனிவாசய்யங்கார் அவர்களுடைய அநுபவந்தான் இந்த மாகாணத்திலுள்ள எல்லாச் சங்கீத சபைகளின் அநுபவமுமாகும். தமாஷா வரியினால் ஏற்பட்ட பொருளாதாரக் கஷ்டம் ஒரு புறமிருக்க, அந்த வரி கொடுப்பது பற்றிய சட்ட நட்டங்கள் சங்கீத சபை நிர்வாகிகளைப் பாடாய்ப் படுத்தி வந்தன. அந்தத் தொல்லைகளின் காரணமாகவே சில சங்கீத சபைகளை மூடும்படியான நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

* * *

இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷியா முதலிய சுதந்திர நாடுகளின் அரசாங்கத்தார் தத்தம் நாட்டுக் கலாசாரங்களை வெளிநாடுகளில் பரப்புவதற்காக எவ்வளவு கோடிக்கணக்கில் வருஷந்தோறும் பணம் செலவு செய்கிறார்கள் என்று அறிந்தால் நாம் பிரமித்துப் போவோம். அந்தந்த நாட்டுக் கலைகளை வளர்ப்பதும் அவற்றை உலகமறியச் செய்வதும் சுதந்திர அரசாங்கங்களின் இன்றியமையாத கடமைகளில் மிகவும் முக்கியமாகக் கருதப்பட்டு வருகின்றன.

காங்கிரஸ் மகாசபையின் தேர்தல் திட்டம் பங்களூரில் நடந்த அ. இ. கா. கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப்பட்டதல்லவா! அதில் பாரத நாட்டின் இலக்கியம், சங்கீதம், நாடகம், நடனம் முதலிய கலைகளை வளர்த்தல் ஒரு முக்கிய அரசாங்க வேலையாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கலைகளை வளர்ப்பதற்கு உதவி செய்வது ஒரு புறமிருக்க, முதலில் அரசாங்கத்தார் கலை வளர்ச்சிக்கு இடையூறு செய்யாமலாவது இருக்க வேண்டும் அல்லவா! இதைச் சென்னை சர்க்கார் உணர்ந்து சங்கீத சபைகள் நடத்தும் சங்கீத நாட்டியக் கச்சேரிகளுக்குத் தமாஷா வரியை நீக்க முன் வந்திருப்பது குறித்து மகிழ்கிறோம்.

மேற்கூறிய முறையில் சர்க்காருக்குக் கிடைத்து வந்த வருமானம் மிகச் சொற்பம். அதை எடுத்து விட்டதனால் சர்க்காருக்கு நஷ்டம் ஒன்றுமில்லை.

ஆனால் சங்கீத சபைகளுக்கு மிக்க அநுகூலம் உண்டு. வருமான அநுகூலம் சொற்பந்தான்; ஆனால் நிர்வாக முறையில் அநுகூலம் மிக அதிகம்.

தென்னாட்டில் சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாகச் சங்கீத சபைகள்தான் கர்நாடக சங்கீதத்தை நல்ல முறையில் வளர்த்து வந்திருக்கின்றன. பல புதிய சங்கீத வித்வான்கள் பிரபலமடைந்ததற்குச் சங்கீத சபைகளே காரணங்களாயிருந்தன. ஆனால் சென்ற சில வருஷங்களாகச் சங்கீத சபைகள் நாளுக்கு நாள் தேய்ந்து வந்து கொண்டிருந்தன. இதற்கு ஒரு முக்கிய காரணம் தமாஷா வரிதான்.

சென்னை சர்க்கார் தமாஷா வரியை எடுப்பதற்கு முன் வந்தது நம் சங்கீத சபைகள் புத்துயிர் பெற்று வளருவதற்கு ஒரு நல்ல தூண்டுதலாயிருக்குமென்று நம்புகிறோம்.

## அட்டைப்பட விளக்கம்

இதோ இந்த இதழ் அட்டையில் வயலில் உழுது கொண்டிருக்கும் விவசாயிகளுக்கு, அவர்கள் மனைவிமார் மத்தியான உணவு எடுத்துச் செல்கிறார்கள். போகும்போது சும்மாப் போகவில்லை.

"நெல்லா விளைய வேணும்; நெடுங்களங்கள் ஏறவேணும்
கதிரா விளையவேணும்; களஞ்சியங்கள் ரொம்ப வேணும்"

என்று பாடிக்கொண்டே போகிறார்கள். இவர்களுடைய பிரார்த்தனையில் நாமும் சேர்ந்துகொள்கிறோம்.

# பாகிஸ்தான் விபரீதம்

பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனாப் லியாகத் அலிகான் ராவல்பிண்டியில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேச ஆரம்பித்த போது சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தியைக் கேட்டுத் திடுக்கிடாதவர்கள் இருக்க முடியாது. பாகிஸ்தான் அரசியல் நிலைமை பல மாதங்களாகவே கொந்தளிப்பாக இருந்து வந்தது. சில வாரங்களுக்கு முன் பாகிஸ்தான் சர்க்காரைக் கவிழ்த்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காகச் சதி செய்ததாய் மேஜர் ஜெனரல் அக்பர்கான் முதலிய இராணுவத் தலைவர்கள் கைதியானார்கள். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் நிலைமை கொந்தளித்து வருகிறது என்றும் அடிக்கடி செய்திகள் வெளியாயின. எனினும் பாகிஸ்தான் பிரதம மந்திரியின் உயிருக்கே உலை வைக்கும்படியான பயங்கரச் சம்பவம் நடைபெறும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அரசியல் கொலைகள் முட்டாள்தனமானவை, பயங்கரமானவை. அவற்றால் எந்தப் பிரச்னையும் தீராது. அரசியல் கொலைகளில் ஈடுபடும் தேசத்துக்குக் கதிமோட்சமே கிடையாது என்று சொல்லலாம்.

பாகிஸ்தான் சர்க்கார் சென்ற மூன்று வருஷங்களுக்கு மேலாகக் கான் சகோதரர்களான அப்துல் கபார்கானையும் கான் சாகேபையும் சிறையில் வைத்திருக்கிறார்கள். அஹிம்சா மார்க்கத்தில் பூரண நம்பிக்கை கொண்டு பிரசாரம் செய்து வந்த அச் சகோதரர்கள் வெளியில் இருந்திருப்பார்களாயின், இத்தகைய விபரீதம் நடந்திராது என்று சொல்லலாம்.

லியாகத் அலிகான் கொலையுண்டதைக் குறித்து இந்திய ஜனாதிபதி ராஜேந்திரப் பிரசாத், பிரதம மந்திரி ஜவாஹர்லால்ஜி, உள் நாட்டு மந்திரி ராஜாஜி முதலிய தலைவர்கள் பயங்கரத்தையும் வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். நாமும் நமது பரிபூர்ண அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# கல்கி தீபாவளி மலர்

பிரபல எழுத்தாளர்கள், தலைவர்கள், கவிஞர்கள், பிரபல சித்திரக்காரர்கள் முதலியவர்களின் அருமையான கதைகள், கட்டுரைகள், கவிதைகள், கண் கவரும் வர்ணச் சித்திரங்கள், ஹாஸ்ய சித்திரங்களுடன் கல்கி தீபாவளி மலர் அக்டோபர் மாதம் 29-ந் தேதி தீபாவளித் திருநாளில் தமிழ் நாடெங்கும் மணம் வீசித் திகழும். சுமார் இருநூறு பக்கங்கள் கொண்ட இம்மலர் முழுவதும் ஆர்ட் காகிதத்தில் அச்சாகிறது.

**விலை ரூ. 5-0-0.**

உங்கள் உள்ளூர் ஏஜண்டுகளிடம் தேவைக்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளக் கோருகிறோம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் ரிஜிஸ்தர் சார்ஜ் உள்பட கீழ்க்கண்ட விகிதப்படி அனுப்ப வேண்டுகிறோம். வி. பி. பி. மூலம் அனுப்ப இயலாது.

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு சிலோன் ... ... | ரூ. | 5 | 8 | 0 |
| பர்மா, மலேயா, இதர வெளிநாடுகள் ... | ரூ. | 5 | 12 | 0 |

*மானேஜர் :* கல்கி காரியாலயம், கீழ்ப்பாக்கம், சென்னை

## தீபாவளி விசேஷ விற்பனை !

**R. S. E.**

வழக்கம்போல் இதுவரை தங்களுக்குத் திருப்திகரமாக தீபாவளிப் பட்டுச் சேலைகள் தயார் செய்து அளித்ததுபோல் இந்த தீபாவளிக்கும் மிகவும் உயர்ந்த வேலைப்பாடுகள் கூடிய அசல் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள், பல நூதன டிசைன்களில் தயார் செய்து தருவித்துள்ளோம். இன்றே விஜயம் செய்து தங்களுக்குத் தேவையானதை பொறுக்கி எடுத்துச் செல்லக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

விலை சகாயத்திற்கும் நம்பிக்கைக்கும் உகந்த ஜவுளி வியாபாரிகள்

## ராதா ஸில்க் எம்போரியம்

14, சன்னதி தெரு, மயிலாப்பூர், சென்னை - போன். 84188

## ருக்மணி ஸில்க் எம்போரியம்

போன் : 58 - 48-49, பெரிய தெரு, கும்பகோணம்




## அத்தியாயம் 39

# "இதோ யுத்தம்!"

வந்தியத் தேவன், "உறையிலிருந்து கத்தியை எடுங்கள்!" என்று சொன்ன உடனே, இளவரசர் "இதோ எடுத்து விட்டேன்!" என்று பட்டாக் கத்தியை உருவி எடுத்தார். அதே சமயத்தில் வந்தியத்தேவனும் உறையிலிருந்து கத்தியை எடுத்தான். அவை பிரம்மாண்டமான ராட்சதக் கத்திகள். அநுராதபுரத்துப் போதி விருட்சத்தின் அருகில் குதிரைகளுடன் வந்து நின்றவர்கள் அந்தக் கத்திகளையும் கொடுத்து விட்டுச் சென்றார்கள்.

இளவரசர் குதிரையிலிருந்து கீழே குதித்து "வா இறங்கி! உன்னுடைய அதிகப் பிரசங்கத்தை என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது! இங்கேயே ஒருகை பார்த்துவிட்டுத் தான் போகவேண்டும்!" என்று கடுமையாகக் கூறியதும், வந்தியத்தேவன் திகைத்துப் போனான். இது விளையாட்டா, வினையா என்று அவனுக்குத் தெரியவில்லை. எனினும், இளவரசர் குதிரையிலிருந்து பூமியில் இறங்கி விட்டபடியால் அவனும் இறங்க வேண்டியதாயிற்று.

"என்ன ஐயா! ஏன் தயங்குகிறீர்? நேற்றிரவு என்னை நீர் அவமானப் படுத்தப் பார்த்தீர் அல்லவா? உம்முடைய பாட்டன் வீட்டு அரண்மனை முற்றத்தில் என் பாட்டன்மார்கள் வந்து காத்திருந்தார்கள் என்று சொல்லவில்லையா? அவர்களுடைய குடை, சிவிகை ஆகியவற்றை புலவர்கள் தட்டிக் கொண்டு போவதைப் பார்த்துப் பொருமினார்கள் என்று கூறவில்லையா? அதை நினைத்துப் பார்க்கப் பார்க்க எனக்குப் பொறுக்க முடியவில்லை. இரண்டில் ஒன்று தீர்த்துக் கட்டிவிட்டுத் தான் இங்கிருந்து புறப்பட வேண்டும்!" என்று சொல்லிக் கொண்டு இளவரசர் இரண்டு கையினாலும் தமது பட்டாக் கத்தியின் அடியைப் பிடித்துச் சுழற்றிக் கொண்டே வந்தியத் தேவனிடம் அணுகினார்.

ஆம்; அது சாதாரண கத்தி அன்று என்பதாகச் சொன்னோமே? எவ்வளவு பலசாலியானாலும் அதை ஒரு கையினால் தூக்கி நிறுத்துவதே பெரிய காரியம். இரண்டு கையினாலும் பிடித்துக் கொண்டால்தான் கத்தியைச் சுழற்றவும் எதிரியைத் தாக்கவும் முடியும்.

இளவரசர் அவ்விதம் இரு கையினாலும் கத்தியைச் சுழற்றியபோது அவரைப் பார்த்தால் அரண்மனையில் சுக போகங்களில் வளர்ந்த கோமள சுபாவம் படைத்த இராஜ குமாரனாகத் தோன்றவில்லை. பழைய காலத்து வீராதி வீரர்களான பீமனையும் அர்ச்சுனனையும் அரவானையும் அபிமன்யுவையும் போல் விளங்கினார். இன்னும், திருமேனியில் தொண்ணூற்றாறு புண் சுமந்த விஜயாலய சோழரையும் யானைமேல் துஞ்சியவரான இராஜாதித்த தேவரையும் ஒத்து, அவர்களுடைய வழியில் வந்தவர் தாம் என்பதை ஞாபகப் படுத்துமாறு வீர கம்பீரத் தோற்றத்துடன் திகழ்ந்தார்.

வந்தியத்தேவனும் இரண்டு கையினாலும் கத்தியைப் பிடித்துச் சுழற்றத் தொடங்கினான். ஆரம்பத்தில் அவனுடைய மனதில் குழப்பமும் தயக்கமும் குடிகொண்டிருந்தன. போகப் போக,

மனம் திடப்பட்டது. வீர வெறி மிகுந்தது. எதிரி தன் போற்றுதலுக்கு உரிய இளவரசர் என்பது மறந்தது. எதற்காக இந்தச் சண்டை என்னும் எண்ணமும் மறைந்தது. எதிரியின் கையில் சுழலும் கத்தி ஒன்றே அவனது கண் முன் நின்றது. அக் கத்தியினால் தாக்கப்படாமல் தான் தப்புவது எப்படி, அதைத் தட்டி எறிந்துவிட்டு எதிரியைக் காயப்படுத்துவது எப்படி என்ற ஓரே விஷயத்தில் அவன் கவனமெல்லாம் பதிந்திருந்தது.

கத்திகள் சுழலும் வேகமும் அவை ஒன்றின் மேல் ஒன்று மோதி 'டணார்' 'டணார்' என்ற ஒலியை எழுப்பும் வேகமும் முதலில் சவுக்க காலத்தில் தொடங்கி, மத்தியம காலத்தைத் தாண்டி, துரித காலத்துக்கு வந்தன.

இளவரசருடைய காரியம் முதலில் ஆழ்வார்க்கடியானுக்கும் விளங்கவில்லை. ஆனாலும், அதில் ஏதோ ஒரு நோக்கம் இருக்க வேண்டும் என்று அவன் கருதினான். வருகிறவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், அவர்கள் இன்னார் என்று தெரிந்து கொண்டு அதற்கேற்ப நாம் செய்ய வேண்டியதை நிர்ணயிப்பதற்கும் அது ஓர் உபாயமா யிருக்கலாம். ஆகவே அந்த இரு வீரர்களுடைய குதிரைகளையும் சாலை மத்தியில் குறுக்கே நிற்கும்படி விட்டு அவற்றின் தலைக் கயிறுகளைப் பிடித்துக் கொண்டு ஆழ்வார்க்கடியான் காத்திருந்தான்.

சாலையில் எதிர்ப்புறமிருந்து வந்து கொண்டிருந்த குதிரை வீரர்கள் நெருங்கி வந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் புலிக்கொடி பறந்து கொண்டிருந்ததைப் பார்த்ததும் ஆழ்வார்க் கடியானுடைய கவலை நீங்கியது. வருகிறவர்கள் நம்மவர்கள் தான். ஆனால் யாரா யிருக்கும்?

அவர்களில் முன்னால் வந்த கட்டியக்காரர்கள் அந்த விஷயத்தைப் பறை யறைந்து அறிவித்தார்கள்.

"ஈழத்துப் போரில் மகிந்தனைப் புறங் கண்ட இலங்கைப் படைகளின் சேநாதிபதி — வைகையாற்றுப் போரில் வீர பாண்டியன் தலை கொண்ட கொடும்பாளூர்ப் பெரிய வேளார்—பூதி விக்கிரம கேசரி மகாராஜா விஜயமாகிறார்! பராக்!" என்று ஒரு இடி முழக்கக் குரல் ஒலித்தது.

"பல்லவ குலத் தோன்றல்—வைகைப் போரில் வீர பாண்டியன் தலைகொண்ட வீராதி வீரர்—வடபெண்ணைப் போரில் வேங்கிப் படையை முறியடித்த பராக்கிரம பூபதி — பார்த்திபேந்திர வர்மர் விஜயமாகிறார்! பராக்!" என்று இன்னொரு இடி முழக்கக் குரல் ஒலித்தது.

இப்படிக் கட்டியம் கூறியவர்களுக்குப் பின்னால் சுமார் முப்பது குதிரை வீரர்கள் வந்தார்கள். அவர்களுள் நடுநாயகமாகக் கம்பீரமான வெள்ளைப் புரவிகளின் மீது சேநாதிபதி பெரிய வேளாரும் பார்த்திபேந்திரனும் வீற்றிருந்தார்கள்.

குதிரை வீரர்களைத் தொடர்ந்து அம்பாரியுடன் ஒரு பெரிய யானை வந்தது.

இன்னும் சிறிது தூரத்துக்குப் பின்னால் வந்த காலாட்படை புழுதிப் படலத்தில் மங்கலடைந்து காணப்பட்டது.

முன்னால் வந்த குதிரை வீரர்கள் வழியில் ஏற்பட்ட தடையினால் அதிருப்தி அடைந்தவர்களாகத் தோன்றினார்கள்.

"யார் அது?" "விலகு!" "வழி விடு!" என்ற சில குரல்களும் கேட்டன.

பின்னர் அக்கூட்டத்தில் 'கசமுச கசமுச' என்ற இரகசியப் பேச்சு வார்த்தைகளும் "ஓஹோ!" "ஆஹா!" என்ற வியப்பொலிகளும் எழுந்தன.

வீரர்கள் குதிரைகள் மீதிருந்து குதித்தார்கள். கத்திச் சண்டை போட்டவர்களைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனுங்கூடக் குதிரை மீதிருந்து பூமியில் இறங்கி விட்டார்கள். வீரர்களின் முன்னணியில் வந்து நின்றார்கள்.

பார்த்திபேந்திரன் பட படத்தான். விக்கிரம கேசரியிடம் "பார்த்தீர்களா? வல்லத்தானைப் பற்றி நான் சொன்னது உண்மையா, இல்லையா? சுத்த அதிகப் பிரசங்கி! இளவரசரிடமே தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கி விட்டான். இதை நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதா?......" என்று தன் கையிலிருந்த கத்தியை ஓங்கினான்.

பூதி விக்கிரம கேசரி அவனுடைய கையைப் பிடித்துத் தடுத்தார்.

"கொஞ்சம் பொறுங்கள், பார்க்கலாம்! என்ன அற்புதமான கத்திப் போர்! இந்தமாதிரி பார்த்து எத்தனையோ நாள் ஆயிற்று!" என்றார்.

சற்றுப் பின்னால் வந்த காலாள் வீரர்கள்—சுமார் மூந்நூறு பேர்—அவர்களும் வந்து சேர்ந்தார்கள். வட்ட வடிவமாக நின்று வேடிக்கை பார்க்கலானார்கள்.

இதற்குள் யானைமேல் அம்பாரியிலிருந்து ஒரு பெண் கீழே இறங்கினாள். குதிரைகளுக்கும் வீரர்களுக்கும் இடையிடையே புகுந்து வந்து அவள்

வேடிக்கை பார்த்த வட்டத்தின் முன்னணியில் நின்று கொண்டாள்.

அவளுடைய முகத்தில் அச்சமயம் குடிகொண்டிருந்த கிளர்ச்சியை இப்படியென்று சொல்ல முடியாது. கத்திகள் அங்கு மிங்கும் பாய்ந்தபோது அவளுடைய கண் விழிகளும் பாய்ந்தன. போரிட்டவர்கள் அப்படியும் இப்படியும் குதித்தபோது அவளையறியாமல் அவளுடைய இடை துவண்டு அப்படியும் இப்படியும் ஆடியது. சிறிது நேரத்துக்கெல்லாம் அவள் தன் கூந்தலில் செருகியிருந்த காம்புடன் கூடிய நீலோத்பல மலரை எடுத்துக் கொண்டாள். அதை இப்படியும் அப்படியும் சுற்றிச் சுழற்றத் தொடங்கினாள். கத்திகள் சுழன்ற தாளத்துக்கு இசைய அவளுடைய கையிலிருந்த பூவின் தண்டு சுழன்றது.—இந்தப் பெண் யார் என்று வாசகர்களுக்கு நாம் சொல்ல வேண்டியதில்லை. ஆம்; பூங்குழலியை அவர்கள் மறந்திருக்க முடியாதல்லவா?

சிறிது நேரம் வரையில் அவளுடைய முகத்துக்கு எதிரே இளவரசர் முகம் தெரியும்படியாக அவ்வீரர்கள் நின்று போரிட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக நகர்ந்து பாதி வட்டம் சுற்றி வந்தனர். கடைசியில் வந்தியத் தேவனுடைய முகம் பூங்குழலியின் முகத்துக்கு எதிராக வந்தது. இடையிடையே வந்தியத் தேவனுடைய கண்கள் சுற்றிலும் பெருகி வந்த வீரர் கூட்டத்தைக் கவனித்து வந்தன. அப்போது பூங்குழலியையும் பார்த்து விட்டன. திடீரென்று அந்தப் பெண்ணைப் பார்த்த வியப்பினால் ஒரு கணம் அவன் கவனம் சிதறியது. அந்த ஒரு கண நேரமே இளவரசருக்குப் போதுமாயிருந்தது. வந்தியத் தேவனுடைய கத்தியின் மீது தேவேந்திரனுடைய வஜ்ராயுதத்தைப் போல் இளவரசரின் கத்தி தாக்கியது. வாணர்குல வீரன் தடுமாறினான். அவனுடைய கைப்பிடியிலிருந்து நழுவிப் பட்டாக் கத்தி கீழே விழுந்தது.

சுற்றிலும் கூடியிருந்தவர்கள் அச்சமயம் எழுப்பிய ஆரவாரம் அலை கடலின் ஓசையை ஒத்திருந்தது. அவ்வளவு ஆரவாரத்தையும் மீறிக்கொண்டு ஓர் இளம் பெண்ணின் உற்சாகமான சிரிப்பொலி கேட்டது.

வந்தியத் தேவன் கீழே விழுந்த கத்தியை மீண்டும் எடுப்பதற்குப் பிரயத்தனம் செய்தான்.

இதற்குள் இளவரசர் பாய்ந்து சென்று அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார்.

"நீர் என்னுடைய வாளுக்குத் தோற்கவில்லை. வாளுக்கு வாள் சமமான லாகவத்துடன் போரிட்டீர். ஆனால் ஒரு பெண்ணின் கண் வாளுக்குத் தோற்றீர்! இதில் அவமானம் ஒன்றுமில்லை. எல்லாருக்கும் நேரக் கூடியதுதான்!" என்றார்.

வந்தியத்தேவன் அதற்கு ஏதோ சமாதானம் சொல்ல ஆரம்பித்தான். அதற்குள் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரியும் பார்த்திபேந்திரனும் அவர்களை நெருங்கி வந்து விட்டார்கள்.

"இளவரசே! இந்தப் பிள்ளையை நான்தான் தங்களிடம் அனுப்பினேன்! இவன் ஏதாவது தவறாக நடந்துகொண்டு விட்டானா? கொஞ்ச நேரம் கதி கலங்கிப் போய் விட்டோம்!" என்றார்.

"ஆம், தளபதி! இவருடைய ஏச்சை என்னால் பொறுக்க முடியவில்லை. 'இலங்கையில் யுத்தம் நடக்கிறது என்றார்களே, யுத்தம் எங்கே? யுத்தம் எங்கே?' என்று கேட்டு என்னைத் துளைத்து விட்டார். 'இதோ யுத்தம்!' என்று காட்டினேன்!"

இவ்வாறு இளவரசர் கூறியதும் சுற்றியிருந்தவர்கள் அனைவரும் மறுபடியும் ஆரவாரம் செய்தார்கள்.

சேனாதிபதி வந்தியத் தேவனுடைய அருகில் வந்து அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். "அப்பனே! இந்தமாதிரி கத்திச் சண்டை பார்த்து எத்தனையோ நாள் ஆயிற்று! இளவரசருக்குச் சரியான துணைவன் நீ! சிலசமயம் அவருக்கு இப்படித்தான் திடீர் திடீர் என்று தோள் தினவு எடுக்கும்! 'குஞ்சர மல்லன்' என்று பெயர்பெற்ற பராந்தக சக்கரவர்த்தியின் வம்சத்தில் பிறந்தவர் அல்லவா? அவருடன் நேருக்கு நேர் நின்று சண்டை பிடிக்க முடியாதவர்கள் அவருடன் நெடுநாள் சிநேகமாயிருக்க முடியாது!" என்றார்.

இதற்குள் இளவரசர் பார்த்திபேந்திர பல்லவரின் சமீபமாகச் சென்று, "ஐயா! தாங்கள் என்னைத் தேடி வந்திருக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். தங்களைச் சந்திப்பதற்காகவே விரைந்து வந்தேன். காஞ்சியில் தமையனார் சௌக்கியமா? என் பாட்டனார் எப்படியிருக்கிறார்?" என்று கேட்டார்.

"தமையனாரும் பாட்டனாரும் தங்களுக்கு மிகவும் முக்கியமான செய்தி

அனுப்பி யிருக்கிறார்கள். இலங்கைக்கு வந்து தங்களைக் கண்டு பிடிப்பதற்கே நாலைந்து தினங்கள் ஆகிவிட்டன. இனி ஒரு கணமும் தாமதிப்பதற்கில்லை......'' என்று பார்த்திபேந்திரன் கூறுவதற்குள், இளவரசர்,

''முக்கிய காரியமாக இல்லாவிட்டால் தாங்களே புறப்பட்டு வருவீர்களா? இனி ஒருகணமும் தாமதிக்க வேண்டிய தில்லை. இப்போதே செய்தியைத் தெரிவிக்க வேணும்!'' என்றார்.

இச்சமயம் அவர்கள் சமீபத்தில் வந்த சேனாதிபதி பெரிய வேளார் ''நடுச்சாலையில் இத்தனை பேருக்கு நடுவிலே ஒன்றும் பேச முடியாது. அதோ ஒரு பாழும் மண்டபம் தெரிகிறதே! அங்கே போகலாம்! நல்ல வேளையாக இந்த இலங்கையில் பாழும் மண்டபத்துக்குக் குறைவு கிடையாது!'' என்றார்.

சாலைக்கு அப்பால் கொஞ்ச தூரத்திலிருந்த பாழும் மண்டபத்தை நோக்கி அனைவரும் போனார்கள்.

## அத்தியாயம் 40

# மந்திராலோசனை

போகும்போது வந்தியத் தேவன் ஆழ்வார்க்கடியானை நெருங்கி, ''இது என்ன, இளவரசர் இப்படிச் செய்கிறார்? அன்று திடீர் என்று குத்துச் சண்டை போட்டார்; இன்று கத்திச் சண்டையில் இறங்கினார். சொல்லி விட்டாவது சண்டையை ஆரம்பிக்கக் கூடாதா! இளவரசருடைய சிநேகம் மிகவும் ஆபத்தா யிருக்கும் போலிருக்கிறதே!'' என்றான்.

இளவரசர் இதைக் கேட்டுக்கொண்டே அவர்கள் பக்கத்தில் வந்து விட்டார்.

'ஆம், ஐயா! என்னுடைய சிநேகம் மிகவும் ஆபத்தானதுதான். நேற்றிரவே அது உமக்குத் தெரிந்திருக்குமே! ஆபத்துக்கு உள்ளாகாமல் இருக்க வேண்டுமானால் நான் இருக்குமிடத்திலிருந்து குறைந்தது பத்து காத தூரத்தில் இருக்க வேண்டும்!'' என்றார்.

''இளவரசே! அதற்காக நான் சொல்லவில்லை. தங்கள் பக்கத்திலிருந்து எந்த வித ஆபத்துக்கும் உட்படுவதற்கு நான் சித்தம். ஆனால் இப்படி நீங்கள் திடீர் திடீர் என்று......''

இப்போது வீர வைஷ்ணவன் குறுக்கிட்டு, ''இது தெரியவில்லையா தம்பி உனக்கு? எதிரே வருகிறவர்கள் யார் என்று தெரிந்து அதற்குத் தக்கபடி காரியம் செய்வதற்காக இளவரசர் இந்த உபாயத்தைக் கையாண்டார்! வருகிறவர்கள் யாரா யிருந்தாலும் கத்திச் சண்டையைக் கண்டால் கொஞ்சம் நின்று பார்ப்பார்கள் அல்லவா?'' என்றான்.

இளவரசர், ''திருமலை சொல்வதும் சரிதான். என்னுடைய ஜாதக விசேஷமும் ஒன்று இருக்கிறது. என்னுடன் யாராவது சிநேகமாயிருந்தால் அவர்களுக்கு மற்றவர்களின் அசூயையும் பகைமையும் நிச்சயம் சித்திக்கும். அதற்காக, நான் யாருடைய சிநேகத்தையாவது விரும்பினால் அவர்களுடன் அடிக்கடி சண்டை பிடிப்பது வழக்கம். இதைப் பொருட் படுத்தாதவர்கள்தான் என்னுடைய சிநேகிதர்களா யிருக்க முடியும்!'' என்றார்.

''அப்படியானால் சரி! இனிமேல் தாங்கள் சண்டையை ஆரம்பிப்பதற்குக் காத்திராமல் நானே ஆரம்பித்து விடுகிறேன். இளவரசே! தங்களுக்குச் செய்தி கொண்டுவந்த நான் ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல மறந்து விட்டேன். அதை இப்போது சொல்லி விட விரும்புகிறேன்! சொல்லியே ஆக வேண்டும். தாங்கள் கேட்க விரும்பா விட்டால், மறுபடியும் கத்தியை எடுங்கள்!'' என்றான் வந்தியத்தேவன்.

''வேண்டாம்! செய்தியைச் சொல்லுங்கள், கேட்கிறேன்.''

''நம்மைச் சுற்றி நின்ற கூட்டத்தில் ஒரு பெண் கையில் காம்புள்ள குமுத மலருடன் நின்று கொண்டிருந்தாளே, அவளுடைய கண் வீச்சுக்கு நான் தோற்று விட்டேன் என்று கூடத் தாங்கள் சொல்லவில்லையா? அந்தப் பெண் யார் தெரியுமா?''

''தெரியாது; அவளை நான் நன்றாய்ப் பார்க்க வில்லை. பார்க்கும் வழக்கமும் எனக்குக் கிடையாது.''

''இளவரசே! அவள்தான் தங்களுக்கு ஒரு செய்தி சொல்லி அனுப்பினாள். சொல்லத் தவறி விட்டேன். எப்படிச் சொல்வது? தங்களைச் சந்தித்ததிலிருந்து தங்களுடன் துவந்த யுத்தம் செய்வதற்கும் தலையில் வீடு இடிந்து விழாமல் தப்புவதற்கும் சரியாயிருக்கிறதே! ஆகை

யால் சொல்லச் சரியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. திடீரென்று அந்தப் பெண்ணைப் பார்த்தபோது அவள் கூறிய செய்தியைச் சொல்ல வில்லையே என்ற நினைவு வந்தது. அப்போது சிறிது அசந்து விட்டேன். அந்தச் சமயம் பார்த்து என் கத்தியைத் தட்டி விட்டீர்கள்......"

"போகட்டும்; அந்தப் பெண் யார்? அவள் எதற்காக எனக்குச் செய்தி அனுப்ப வேண்டும்?"

"ஐயா! அவள்தான் பூங்குழலி."



"அழகான பெயர்; ஆனால் நான் கேள்விப்பட்டதில்லை."

"ஐயா! 'சமுத்திர குமாரி' என்ற பெயர் நினைவிருக்கிறதா?"

"சமுத்திர குமாரி—சமுத்திர குமாரி—அப்படி ஒரு பெயரும் எனக்கு நினைவில் இல்லையே! அவளைப் பார்த்ததாகக் கூட ஞாபகம் இல்லையே!"

"தயவுசெய்து கொஞ்சம் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். தங்களுக்கு நினைவில்லையென்றால் அந்தப் பெண்ணின் நெஞ்சு உடைந்துவிடும். கோடிக் கரையில் தாங்கள் மரக்கலம் சேருவதற்காகப் படகில் ஏறச் சித்தமாயிருந்தீர்கள். அச்சமயம் ஒரு பெண் தன்னந் தனியாகப் படகு விட்டுக் கொண்டு கடலிலிருந்து கரைக்கு வந்தாள். தாங்கள் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தீர்கள். அவளும் நீங்கள் எல்லாரும் யார் என்று தெரிந்து கொள்வதற்காக நீங்கள் நின்ற இடத்துக்குச் சமீபமாக வந்தாள். 'இந்தப் பெண் யார்?' என்று தாங்கள் கலங்கரை விளக்கத் தலைவரைக் கேட்டீர்கள். அவர் 'இவள் என் குமாரி' என்றார். தாங்கள் உடனே 'ஓகோ! இவள் உமது குமாரியா? சமுத்திர குமாரி என்றல்லவா நினைத்தேன்?' என்றீர்கள். அதை அந்தப் பெண் மறக்காமல் நினைவு வைத்துக் கொண்டிருக்கிறாள். அந்தப் பெண்ணின் உதவியினால்தான் நான் கடல் கடந்து இலங்கைக்கு வர முடிந்தது..."




"நீர் சொன்ன பிறகு எனக்கும் இலேசாகக் கொஞ்சம் நினைவுக்கு வருகிறது. ஆனால் கோடிக்கரை சமுத்திர குமாரிக்கு இங்கே அநுராத புரத்துக்குச் சமீபத்தில் என்ன வேலை? இவர்களுடன் எதற்காக வந்திருக்கிறாள்? ஒருவேளை உம்மைத் தேடிக் கொண்டா?..."

"இல்லை; அப்படி ஒரு நாளுமிராது. என்னைத்

தேடிவர நியாயம் இல்லை. யாரையாவது தேடி வந்திருந்தால் அது தங்களைத் தேடித்தான் இருக்க வேண்டும். எதற்காக என்று எனக்குத் தெரியாது!"

இப்படிச் சொல்லிக்கொண்டே வந்தியத் தேவன் சற்றுத் தூரத்தில் சேநாதிபதியின் பக்கத்தில் வந்து கொண்டிருந்த பூங்குழலியைப் பார்த்தான். அவள் தலை குனிந்த வண்ணம் நடந்தாள். ஆயினும் அவளுடைய கவனம் கருத்து எல்லாம் இளவரசரிடமே இருக்கின்றன என்பதை உணர்ந்து கொண்டான். சிறிது நேரத்துக்கொரு தடவை அவளுடைய கடைக்கண் இளவரசரை நோக்குவதையும் அறிந்தான். அச்சமயம் அவனைப் பற்றித் தாங்கள் பேசுகிறோம் என்பதும் உள்ளுணர்வினால் அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிடில் அப்படி அவள் குனிந்த தலை நிமிராமல் நடப்பதற்கு யாதொரு அவசியமும் இல்லையே! அம்மம்மா! ஒரு கணமும் பார்த்த திசையைப் பாராமல் ஓயாமல் சலித்துக் கொண்டிருக்கும் கண்கள் அல்லவா அவளுடைய கண்கள்!

மேற் கூரையில்லாமல் வேலைப்பாடான கருங்கல் தூண்கள் மட்டும் நின்ற மண்டபத்தை அவர்கள் அடைந்தார்கள். சுற்றிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் அந்த மண்டபத்துக்கு ஓரளவு நிழலை அளித்தன. மண்டபத்தின் மத்தியில் ஒரு மேடான பீடமும் இருந்தது. அங்கே சென்று இளவரசரும் சேநாதிபதியும் பார்த்திபேந்திரனும் அமர்ந்தார்கள்.

வந்தியத்தேவனும் ஆழ்வார்க்கடியானும் சற்றுத் தள்ளி நின்றார்கள்.

இன்னொரு பக்கத்தில் ஒரு தூணின் மறைவில் பூங்குழலி நின்று கொண்டிருந்தாள். அங்கிருந்தபடி அவள் இளவரசரையும் வந்தியத் தேவனையும் பார்க்கக் கூடியதாயிருந்தது.

அந்தக் கூரையில்லாத மண்டபத்தைச் சுற்றிலும் வீரர்கள் வியூகம் வகுத்தது போல் இரண்டு வரிசையாக நின்றார்கள்.

இன்னும் சற்றுத் தூரத்தில் குதிரைகளும் யானையும் நிறுத்தப்பட்டிருந்தன.

இளவரசர் பார்த்திபேந்திரனைப் பார்த்து "என் தமையனும் பாட்டனும் என்ன செய்தி சொல்லி அனுப்பியிருக்கிறார்கள்? கேட்க ஆவலாயிருக்கிறேன்!" என்றார் இளவரசர்.

"இளவரசே! சோழ ராஜ்யம் பெரிய அபாயத்துக்குள்ளாகியிருக்கிறது. இது தங்களுக்குத் தெரிந்திருக்கும்......"

"ஆம், ஐயா! சக்கரவர்த்தி நெடுநாளாக நோய்ப்பட்டிருக்கிறார்......"

"அபாயம் அது மட்டுமல்ல; சாம்ராஜ்யத்துக்கே பேரபாயம் நேர்ந்திருக்கிறது. பெரிய அதிகாரங்களில் உள்ளவர்கள் துரோகிகளாகி விட்டார்கள். சக்கரவர்த்திக்கும் பட்டத்து இளவரசருக்கும் தங்களுக்கும் விரோதமாகச் சதி செய்யத் தொடங்கி விட்டார்கள். தங்கள் தமையனாருக்குப் பட்டம் இல்லை என்று சொல்லி விட்டுச் சிவபக்தி வேஷதாரியான உருத்திராட்சப் பூனை மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டுவது என்றும் தீர்மானித்திருக்கிறார்கள். பழுவேட்டரையர்களும், சம்புவரையர்களும், இரட்டைக் குடை இராஜாளியாரும், மழபாடி மழவரையரும், மற்றும் இவர்களைப் போன்ற வேறு பல துரோகிகளும் இந்தக் கூட்டுச் சதியில் சேர்ந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முயற்சி பற்றி நாம் சிறிதும் கவலைப்பட வேண்டியதில்லை. வடதிசை சைன்யமும் தென்திசை சைன்யமும் நம் வசத்தில் இருக்கின்றன. திருக்கோவலூர் மிலாடுடையாரும் கொடும்பாளூர்ப் பெரிய வேளாரும் நம் பக்கம் இருக்கிறார்கள். இவர்களுடைய உதவிகளைக் கொண்டும் சைன்யத்தின் துணை கொண்டும் துரோகிகளின் சதியை ஒரு நொடியில் சின்னாபின்னப் படுத்திவிடலாம். ஆனால் எதிரிகளுக்கு அதிக காலம் இடங்கொடுத்து விடக் கூடாது. துரோகிகளின் சூழ்ச்சியை முளையிலேயே கிள்ளி எறிந்து விடவேண்டும். இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதை முன்னிட்டுத் தங்களை உடனே காஞ்சிக்கு அழைத்து வரும்படியாகத் தங்கள் தமையனாரும் பாட்டனாரும் என்னை அனுப்பி வைத்திருக்கிறார்கள். இச் சமயத்தில் நீங்கள் சகோதரர்கள் இருவரும் பிரிந்திருக்கலாகாது என்றும் ஒரே இடத்தில் இருப்பது மிக அவசியம் என்றும் தங்கள் பாட்டனார் கருதுகிறார். இன்னும், தங்கள் தமையனாரின் உள்ளத்தில் இருப்பதையும் சொல்லிவிட விரும்புகிறேன். அவருக்கு ஒரே இடத்தில் இருந்து இராஜ்யம் ஆளுவதில் விருப்பம் இல்லை. கடல் கடந்த நாடுகளுக்கெல்லாம் கப்பலேறிச் செல்ல வேண்டுமென்றும் அந்த நாடுகளையெல்லாம் வென்று சோழர் புலிக் கொடியைப் பறக்கவிட வேண்டுமென்றும் அவர் துடிதுடித்துக் கொண்டிருக்கிறார். வடநாட்டுப் படையெடுப்புக்குப் பழுவேட்டரையர்கள் முட்டுக் கட்டை போட்டதிலிருந்து அவரு

டைய போர் வெறி ஒன்றுக்குப் பத்து மடங்கு ஆகியிருக்கிறது. ஆகையால் தாங்கள் காஞ்சி வந்து சேர்ந்ததும் தஞ்சைக்குப் படை எடுத்துச் சென்று சதிகாரர்களை யெல்லாம் அதம் செய்து ஒழித்து விட்டுச் சோழ சிம்மாசனத்தில் தங்களை அமர்த்தி முடிசூட்டி விட்டு..."

இத்தனை நேரம் கவனத்துடனும் மரியாதையுடனும் கேட்டு வந்த இளவரசர் இப்போது தன் செவிகளைக் கையினால் மூடிக் கொண்டு, "வேண்டாம்! அந்த மைய விபரீத வார்த்தைகளைச் சொல்லாதீர்கள். சோழ சிம்மாதனத்துக்கும் எனக்கும் வெகு தூரம்!" என்றார்.

"தங்களுக்குப் பிடிக்க வில்லை என்றால் நான் சொல்ல வில்லை. அது தங்களுடைய தமையனார் இஷ்டம்; தங்கள் இஷ்டம். நீங்கள் சகோதரர்கள் விவாதித்துத் தீர்த்துக் கொள்ள வேண்டியது. ஆனால் சதிகாரர்களை ஒழிப்பதில் இரண்டு பேரும் ஒன்றுபட வேண்டியது அவசியம். உடனே தாங்கள் காஞ்சிக்குப் புறப்பட்டு வாருங்கள். பழுவேட்டரையர்களையும் சம்புவரையர்களையும் பூண்டோடு அழிப்போம். சிவபக்தி வேஷதாரியான மதுராந்தகனைச் சிவலோகத்துக்கே அனுப்பி வைப்போம். பிறகு தாங்களும் தங்கள் தமையனாரும் யோசித்து உசிதம்போல் முடிவு செய்யுங்கள்!" என்றான் பார்த்திபேந்திரன்.

"ஐயா! எல்லாம் நாமே முடிவு செய்ய வேண்டியதுதானே? என் தந்தை —சக்கரவர்த்தி— அவருடைய விருப்பம் இன்னதென்று நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? ஒரு வேளை தாங்கள் தெரிந்து கொண்டிருக்கிறீர்களா? என் தமையனுருக்குத் தந்தையிட மிருந்து ஏதேனும் அந்தரங்கச் செய்தி வந்ததா......?"

"இளவரசே! இந்தச் சந்தர்ப்பத்தில் உண்மையைச் சொல்ல வேண்டியது அவசியம். மூடி மறைப்பதில் பயனில்லை. தங்கள் தந்தையின் விருப்பத்தை இச் சமயம் அறிந்து கொள்வது இயலாத காரியம். சக்கரவர்த்தி இப்போது சுதந்திர புருஷராயில்லை. பழுவேட்டரையர்களின் சிறையில் இருக்கிறார். அவர்களுடைய அநுமதியின்றி யாரும் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது; பேசவும் முடியாது. அவருடைய விருப்பத்தைத் தெரிந்து கொள்வது எங்ஙனம்? தந்தையைக் காஞ்சிக்கு வரச் சொல்வதற்காகத் தங்கள் தமையனார் பெரு முயற்சி செய்தார். காஞ்சியில் பொன் மாளிகை கட்டினார். சக்கரவர்த்தி விஜயம் செய்து கிரகப்பிரவேசம் செய்யவேண்டும் என்று அழைப்பு அனுப்பினார். ஆனால் சக்கரவர்த்தியிடமிருந்து மறுஓலை வரவில்லை..."

"என் தந்தை நோய்ப்பட்டிருப்பதும் நடக்க முடியாதவரா யிருப்பதும் தெரிந்த விஷயந்தானே?"

"இளவரசே! தங்கள் தந்தை—மூன்று உலகங்களின் சக்கரவர்த்தி—காஞ்சிக்குக் காலால் நடந்து வரவேண்டுமா? யானைகள் குதிரைகள இல்லையா? வண்டி வாகனங்கள் இல்லையா? தங்க ரதங்களும் முத்துச் சிவிகைகளும் இல்லையா? தலையால் சுமந்து கொண்டு வருவதற்கு முடிசூடிய சிற்றரசர்கள் ஆயிரம் பதினாயிரம் பேர் போட்டி போட்டுக்கொண்டு வர மாட்டார்களா? காரணம் அது வன்று. பழுவேட்டரையர்களின் துரோகந்தான் காரணம். தஞ்சை அரண்மனை இப்போது சக்கரவர்த்தியின் சிறையாக மாறிவிட்டது... இளவரசே! தங்கள் தந்தையின் உயிரைக் காப்பாற்ற விரும்பினால் உடனே புறப்பட்டு வாருங்கள்!"

இந்த வார்த்தைகள் இளவரசரின் உள்ளத்தைக் கலக்கி விட்டன என்பது நன்றாகத் தெரிந்தது. அவருடைய களை பொருந்திய முகத்தில் முதன் முதலாகக் கவலைக் குறி தென்பட்டது.


ஸ்ரீ ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தின் உதவிக்காக
ஸ்ரீ ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர்கள் நடிக்கும்
கல்கியின்

# சிவகாமியின் சபதம்

1951ஞு அக்டோபர்மீ 20உ சனிக்கிழமை மாலை 6 மணிக்கு
சென்னை வால்டாக்ஸ் தியேட்டரில்
டிக்கெட்டு விவரம்: ரூ. 10, 5, 3 & 2.

இளவரசர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டுச் சேனாதிபதியின் முகத்தை ஏறிட்டுப் பார்த்தார்.

"தளபதி! தங்களுடைய யோசனை என்ன? சிலநாளைக்கு முன்பு முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் வந்திருந்தார். அவர் என் தந்தையின் மதிப்புக்கும் அந்தரங்க அபிமானத்துக்கும் உரியவர். அவர் என்னை இலங்கையிலேயே சிலகாலம் இருக்கும்படி யோசனை சொன்னார். தாங்களும் அதை ஆமோதித்தீர்கள். 'இங்கே சண்டை ஒன்றும் நடக்கவில்லையே, நான் எதற்கு இருக்க வேண்டும்?' என்று கேட்டதற்குச் சமாதானம் சொன்னீர்கள். முதன் மந்திரி இதோ நிற்கும் வைஷ்ணவரிடம் அதே யோசனையைத் திரும்பச் சொல்லி அனுப்பியிருக்கிறார். என் தமக்கை இளைய பிராட்டியிடம் எனக்கு எவ்வளவு மதிப்பு உண்டு என்பது தங்களுக்குத் தெரியும் அவர் இட்ட கோட்டை நான் தாண்ட மாட்டேன். இலங்கைக்கு அவர் வரச் சொல்லித்தான் வந்தேன். இளைய பிராட்டி இதோ இந்த வாணர் குலத்து வீரனிடம் ஓலை அனுப்பியிருக்கிறார். ஒருவிதத்தில் என் தமக்கையின் செய்தியும் பார்த்திபேந்திரர் கூறியதை ஒட்டியிருக்கிறது. ஆனால் உடனே புறப்பட்டுப் பழையாறைக்கு வரும்படி எழுதி அனுப்பியிருக்கிறார். என் தமையனாரோ காஞ்சிக்கு வரும்படி இவரிடம் கூறி அனுப்பியுள்ளார். சேனாபதி! தங்களுடைய கருத்து என்ன?" என்றார்.

"இளவரசே! இன்று காலை வரையில் தாங்கள் இந்த இலங்கைத் தீவிலேயே இருக்க வேண்டும் என்ற கருத்துடனேயே நான் இருந்தேன். நேற்றிரவு கூட இவருடன் நெடுநேரம் விவாதித்துக் கொண்டிருந்தேன். இவர் வெகு நேரம் வாதித்தும் நான் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால் இன்று அதிகாலையில், அதோ நிற்கிறாளே, அந்தப் பெண் வந்து ஒரு செய்தி சொன்னாள். அதைக் கேட்டதும் என் கருத்தை மாற்றிக் கொண்டேன். தாங்கள் உடனே காஞ்சிக்குப் போக வேண்டியது அவசியம் என்று இப்போது எனக்குத் தோன்றுகிறது!" என்றார் இலங்கைச் சேனாதிபதி.

தூண் மறைவிலே நின்று தன்னைக் கடைக்கண்ணால் பார்த்துக் கொண்டிருந்த பூங்குழலியின் மீது இளவரசர் தன் பார்வையைச் செலுத்தினார்.

"அபிமன்யுவை நாலாபுறமும் பகைவர்கள் தாக்கிக் கொன்றதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். என்னை 'நாலாபுறமிருந்து வரும் செய்திகளே தாக்கிக் கொன்றுவிடும் போலிருக்கிறது!" என்று இளவரசர் சொல்லிக் கொண்டார்.

"அந்தப் பெண் என்னதான் செய்தி கொண்டு வந்திருக்கிறாள்?" என்றார்.

"அவளே சொல்லட்டும்!" என்றார் பெரிய வேளார்.

பூங்குழலி தயங்கித் தயங்கி நடந்து வந்தாள். இளவரசர் முன்னால் வந்து நின்றாள். நாலு பக்கமும் திரும்பிப் பார்த்தாள். சேனாதிபதியைப் பார்த்தாள்; பார்த்திபேந்திரனைப் பார்த்தாள்; சற்றுத் தூரத்தில் நின்ற வந்தியத்தேவனையும் ஆழ்வார்க்கடியானையும் பார்த்தாள். இளவரசர் முகத்தை மட்டும் அவளால் ஏறிட்டுப் பார்க்க முடியவில்லை.

"பெண்ணே! சொல், சீக்கிரம்!" என்றார் சேனாதிபதி.

பூங்குழலி ஏதோ சொல்ல முயற்சித்தாள். ஆனால் வார்த்தைகள் ஒன்றும் வரவில்லை.

"ஆகா! இந்த உலகமே ஊமை மயமாகிவிட்டது போல் காண்கிறது!" என்றார் அருள்மொழிவர்மர்.

அவ்வளவுதான். பூங்குழலி தன் கண்ணிமைகளை உயர்த்தி ஒரு தடவை, ஒரு கணத்திலும் சிறிய நேரம், இளவரசரை நோக்கினாள். அதற்குள் அக்கண்களில் கண்ணீர் ததும்பி வழிய ஆரம்பித்து விட்டது. உடனே அங்கிருந்து ஓட்டம் பிடித்தாள். ஓடிப் போய்த் தூரத்தில் அடர்ந்து வளர்ந்திருந்த மரங்களுக்கிடையில் மறைந்தாள்.

எல்லாரும் வியப்புடன் அதைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள்.

வந்தியத்தேவன் முன் வந்து "ஐயா! இவன் முன்னொருதடவை இப்படித்தான் ஓடினான். நான் தொடர்ந்து போய்ப் பிடித்து விட்டேன். அனுமதி கொடுத்தால் இப்போதும் சென்று பிடித்துக் கொண்டு வருகிறேன்!" என்றான்.

"அப்படியே செய்! ஆனால் அதற்குள் அவன் கொண்டு வந்த செய்தி என்ன என்பதைச் சேனாபதி சொல்லட்டும்!" என்றார் இளவரசர்.

அதற்குச் சேனாதிபதி, "அதை இரண்டே வார்த்தைகளில் சொல்லி விடலாம். இளவரசே! தங்களைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்காகப் பழுவேட்டரையர்கள் இரண்டு பெரிய மரக்கலங்களையும் அவை நிறையப் போர் வீரர்களையும் அனுப்பியிருக்கிறார்கள். மரக்கலங்கள் தொண்டைமான் ஆற்றுக் கால் வாயில் புகுந்து மறைவான இடத்திலே வந்து நிற்கின்றன!" என்றார்.

(தொடரும்)


எனக்கு மொறுமொறுப்பே பிடிக்கும்
எல்லோருடைய
எனக்கு உப்பானதே இஷ்டம்
விருப்பத்திற்கேற்ற
எனக்கு தித்திப்பே வேண்டும்
பிஸ்கோத்துகள்
எனக்கு எல்லாமே பிடிக்கும்
சிறந்த பிஸ்கோத்து
பிரிட்டானியா
FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA



# கோமளம் கோலம் போட்டாள்!

"அப்பா ரகு! மறந்தே போயிட்டேன் வேலை அவசரத்திலே. இதோ பார், இந்தக் 'கடுதாசி' நேத்திக்கே வந்தது!" என்று அம்மா என் கையில் 'கவரை'க் கொடுத்தாள். குரலில் தொனித்த பரிவு முகத்தில் இல்லை; உள்ளத்துக் கசப்பு, முகத்தின் களிப்பில் தெரிந்தது. அது என் மனைவியிடமிருந்து வந்திருக்கிறது என்ற அளவு கூடத் தெரியாத முட்டாள் இல்லை அவள்! ஏதோ அவளுடைய மனம், மனக் குரங்கு அப்படிப்பட்டது!

கடிதத்தில் கோமளம் என்னைப் பார்க்கவேணும் போல இருப்பதாகவும் உடனே புறப்பட்டு வரும் படியும் எழுதியிருந்தாள்.

"அவதான் எழுதியிருக்கிறா!" என்று சொன்னேன், என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்த அம்மாவிடம்.

"என்ன எழுதி யிருக்கிறா!" அம்மாவின் குரலில் வெறுப்பும், அருவருப்பும்தான் புரை யோடிற்று. அதைக் கவனிக்காதவன் போல் "என்னைப் பார்க்க வேண்டுமாம்; வரச் சொல்லி எழுதியிருக்கிறா!" என்றேன்.

"உம்! போய்ப் பார்த்துவிட்டு மறு காரியம் செய்!" என்று முகத்தை ஒரு திருப்புத் திருப்பிக் கொண்டு உள்ளே போனாள்.

அம்மாவுக்குக் கோமளத்தின் பேரில் கோபம் இருக்கத்தான் செய்தது; பாறைகளினிடையே, அடித்தலத்தில் ஓடியிருக்கும் புரைசல்போல அவள் மனத்தில் வெறுப்பு வேர் விட்டுப் புரையோடி யிருந்தது. அது இருக்கத்தான் இருக்கும்; காரணம் இல்லாமலும் இல்லை; தன் ஒரே புத்திரனைச் சுற்றி எவ்வளவோ இன்பக் கோட்டைகள் கட்டியிருந்தாள் அல்லவா? அவ்வளவும் வீணாக, அந்தக் கோட்டையில் இந்த அன்னியள்—எதிர்பாராத வண்ணம்—வந்து நுழைந்ததை அவள் மனம் கலபத்தில் மறக்குமா? பெண் பெற்றவர்கள் எல்லாம் 'மீனுவா, அடேயப்பா! அவளுடைய பையனைப் போய் நாம் எப்படிக் கேட்பது?' என்று தயங்கும்படி அட்டகாசம் பண்ணிக் கொண்டு, வந்த பெண்களுக்கெல்லாம் நெட்டாரூம். கொடிப்பும் சொன்னவளைப் பார்த்து இன்று ஊராரே பரிகாசம் பண்ணும்படி அல்லவா கோமளம் அவளுக்கு மாட்டுப் பெண்ணாக வந்து சேர்ந்தாள்! அவளுக்கு ஏற்பட்ட அந்தத் தலை யிறக்கத்துக்கு வட்டியும் முதலுமாகக் கோபமும் ஆத்திரமும் வருவதில் என்ன தவறு காண முடியும்!

எனக்குப் பெண் கொடுக்க எத்தனையோ வரன்கள் வந்தன. அம்மா ஒன்றில் குறை சொன்னால் நான் ஒன்றில் குறை சொல்லுவேன். அம்மாவுக்குச் சீர், செனத்தி கணக்காக வேண்டும்; பெண்ணின் பிறந்தகத்து மனிதர்கள் 'பெரிய இடமாக' இருக்க வேண்டும்; பெண்ணும் சுத்த 'பத்தாம் பசலி' யாகவோ, முற்றிலும் நவ நாகரிக நங்கையாகவோ இல்லாமல் இருக்க வேண்டும். காதுகளில் லோலாக்குகள் போட்டுக் கொண்டிருந்தாலும் மன்னிப்பாள்; மூக்குக் குத்திக் கொள்ளாமல் இருப்பதை மன்னிக்க மாட்டாள். ஆறு கெஜப் புடவை கட்டிக் கொண்டாலும் 'இறங்கின கழுத்து' ஜாக்கெட்டுகள் அணிவதை ஒப்புக்கொள்ள மாட்டாள். அந்தச் சமயத்தில் நானும் என் பங்குக்குச் சோடை போகாமல் 'தலையில் மயிரே இல்லை!' என்பேன்; 'பெயர் அழகாக இல்லை' என்று இன்னொன்றைத் தள்ளிவிடுவேன். இப்படியெல்லாம் செய்து பெண் பெற்றவர்களின் மனம் புண்ணாகி, வயிறு எரிந்து சபித்தது பலித்தது போல, கோமளம் வந்து சேர்ந்தாள்! ஆனால் கோமளம் என் ஹிருதயத்தை எந்த அளவில் வியாபித்துக் கொண்டிருக்கிறாள் என்பதை என்னுடன், என் வீட்டிலேயே, கண்முன் பார்த்து வரும் என் தாயாரே அறியாதபொழுது ஊராரின் ஏச்சும் பேச்சும் எதில் சேர்த்தி!

*

வாசு புஸ்தகத்தின் முன் உட்கார்ந்து படிக்க ஆரம்பித்தான். "கோ—ம—ள—ம்......கோமளம், கோ—ல—ம்......கோலம். போ—ட்—டா—ள்... போட்டாள்......கோமளம் கோலம் போட்டாள்" என்று படித்து நிறுத்தினான். என்னை ஏற இறங்க ஒரு தடவை பார்த்தான். அவனுக்கு என்ன தோன்றிற்றோ, "ஸார், உங்களுக்குக் கோமளத்தை தெரியுமோ!" என்று கேட்டான்.

"எந்தக் கோமளத்தையடா!"

"எங்க அக்காளை, ஸார்! கமலாபுரத்தில் இருக்கிறாளே, உங்களுக்குத் தெரியாது!" அவன் கண்களில் 'அட, அவளைக் கூடவா உங்களுக்குத் தெரியாது!' என்று கூறுவதைப் போன்ற ஆச்சரியம்! நான் பதில் சொல்லாமல் சிரித்தேன்.

"என்ன ஸார், சிரிக்கிறேள்! நீங்க பார்த்திருக்க மாட்டேள் போல இருக்கிறது; நல்ல அழகா இருப்பாளே......!"

"அப்படீன்னு யார் சொன்னா!"

"அவளே சொன்னா, ஸார்......"

"சரிதான். நீ மேலே படி!" என் குரலில் தொனித்த அஸ்வாரஸ்யத்தைத் தெரிந்து கொண்டவன்போல, "நானே பார்த்து இருக்கேன், ஸார்!" என்றான்.

"உம். உங்க அக்கா பத்மினி போல இருப்பாளா!"

"ஐயையே! பத்மினி ஒன்றும் அழகேயில்லே; கோமளக்கா ரொம்ப அழகு, ஸார்!" அதை அவன் சொன்ன பாணி என் மனத்தில் ஒரு குதூகலத்தைத் தோன்றத்தான் செய்தது. பத்மினியே நல்ல அழகி; அவளைவிட அழகு என்றால்......!

என் மனக் குழப்பத்தை அறிந்து கொண்டவன் போல "பத்மினி கை நகத்திலே எல்லாம் சிவப்பா எதை எதையோ தீத்திக்கிறாளே! கோமளக்கா அப்படியெல்லாம் இல்லை. அவள் விரல் நுனி

அதை யெல்லாம் நிந்திக்காமலே, எப்போதும் சிவப்பா, அழுபாமலே இருக்கே!" என்றான்.

எனக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதை விட இந்தச் சிறுவனின் வர்ணனையைக் கேட்பதில் ஆவல் பிறந்தது.

"அப்புறம், பத்மினி மாதிரி தலைமயிரை 'பாப்' பண்ணிக்கொண்டு இருப்பாளா?"

"சேச்சே......,நீளமா பின்னல் போட்டுக் கொண்டிருப்பாளே! ஆனால் பின்னல் நுனியில் கிப்பல், கிப்பன் ஒண்ணும் வைத்துக் கொள்ள மாட்டாள்; உல்லன் நூல் இருக்கு பாருங்கோ, உல்லன் நூல்; அதைத்தான் வைத்துக் கொண்டிருப்பாள்......மறந்துட்டேனே, தலை நிறைய மல்லிகைப் பூவை வச்சிண்டிருப்பா, ஸார்......"

"பாடுவாளா?"

"ஓ, பாடுவாளே......எனக்கு அவள்தான், 'டான்ஸ் பேபி டான்ஸ்' பாட்டைச் சொல்லிக் கொடுத்தாள்."

"அந்தப் பாட்டை நான் கேட்கவில்லை! உங்க பத்மினி பாட்டு வாத்தியாரிடத்திலே கற்றுக் கொள்ளுகிறாளே, அது மாதிரி......"

"அதுவும் தெரியும், ஸார்! பத்மினிக்கு ஒரு கதை கூடச் சொல்லத் தெரியாதே! கோமளக்கா நிதம் கதை சொல்லுவா; சாயந்திரம் ஆனா ஒரு கிண்ணத்திலே எண்ணெயை எடுத்துண்டு கோவிலுக்கு என்னையும் கூட்டிண்டு போவா; நவக்கிரகத்தை யெல்லாம் சுத்துவோம்; பிறகு வீட்டுக்கு வருவோம்; வாசல்லே வாதா மரம் இருக்கே, தெரியுமா! அதன் கீழே மணல் கொட்டியிருக்கு; அங்கே உட்கார்ந்திண்டு கதை கதையாகச் சொல்லுவா......"

அவன் வர்ணிக்க வர்ணிக்கக் கேட்டுக் கொண்டிருந்ததில் நேரம் போனதே தெரியவில்லை.

அன்று இரவு படுக்கையில் படுத்ததும் வாசுவினுடைய கோமளத்தைப் பற்றித்தான் நினைக்க ஆரம்பித்தேன். அழகான சிறு கிராமம்; ஊரைச் சுற்றி மரகதப் போர்வை சாத்தினாற்போல நெல் வயல்கள், வாழைத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள்; ஊரை இரண்டாக்கிக் கொண்டு செல்லும் ஆறு; ஆற்றின் கரையில் கோயில்; கோயிலை அடுத்த தேரோடும் சந்நிதித் தெரு; அதோ தெரிகிறதே வாதாமரம்; அந்த மரத்தின் கீழ், வெள்ளி மணலில் அப்ஸரஸ் மாதிரி உட்கார்ந்து கொண்டு இருக்கிறாளே, ஆம்...கோமளம் அவளாகத்தான் இருக்க வேண்டும்! இல்லாவிட்டால் எதிர் வீட்டுத் திண்ணையில் அவ்வளவு புருஷப் பையன்களுக்கு என்ன வேலை! எவ்வளவு உரக்கப் பேச்சு...! இதோ 'காலரை' இழுத்து விட்டுக்கொண்டு பேசுகிறானே, சௌரி, அவனுடைய கண்கள் எங்கே இருக்கின்றன! ராகவன் மாத்திரம் ஏன் அடிக்கடி சிரிக்க வேண்டும்! போக்கிரிப் பயல்கள்! அவளுடைய கவனத்தைத் திருப்பத்தான் இப்படிக் கூத்தடிக்கிறான்......! கனவுகள் கலையவும் பொழுதும் விடிந்திருந்தது.



மறுநாள் என் மனத்தைத் தெரிந்துகொண்டவன்போல வாசு அதே பாடத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்தான்; திரும்பவும் கோமளம் கோலம் போட்டாள் என்ற இடத்தில் பாடம் நின்றது.

"ஸார், இந்தப் புஸ்தகக் காரனுக்குத் தெரியுமா, ஸார்!"

"யாரை?"

"எங்க கோமளத்தை ......கோமளக்காவை!"

"ஏன்!......"

"பின்ன இவனுக்கு எப்படித் தெரியும், கோமளம் நன்னா கோலம் போடுவான்னு......!"

"நிஜமாகவே நன்னா கோலம் போடுவாளா!"


"ரொம்ப ஜோரா போடுவா, ஸார்! பெரிய பெரிய கோலமாகக்கூட போடுவா; ஏதாவது பண்டிகை கிண்டிகை வராது!......உம்...... ஆவணி அவிட்டம், நவராத்திரி அப்பெல்லாம் வீடு பூராவும் மாக்கோலம் போட்டு வாசத்தெருவிலே ரொம்பப் பெரிசா...இந்த 'ரூம்' அத்தனை பெரிசா, தெருவையே அடைச்சிண்டாப்போல போடுவா! அப்புறம் தேரன்னிக்குத் தேர்போலவே கோலம் போடுவா! திருநாள் பத்து நாளும் சாயந்திரம் தெரு வாசல்லே புள்ளிவச்சுக் கோலம் போடுவா......மணிக் கணக்கா! யாராவது ஒரு புள்ளியை மிதிச் சுட்டா, அப்பா, எவ்வளவு கோபம் வரும், தெரியுமா, அவளுக்கு!"

"அதெல்லாம் இருக்கட்டும், வாசு! இங்கே பார். உன் கோமளக்கா யாரைப்போல இருப்பாள்!"

வாசு கொஞ்ச நேரம் யோசனை செய்வதுபோல இருந்துவிட்டு, "அவளைப்போல இங்கே யாரும் இல்லை, ஸார்!" என்றான்.

அன்று வரை படுத்துக் கொண்டால் எதை எதைப்பற்றியோ—என் பள்ளிக்கூட நாட்களில் நடந்த சம்பவங்கள் என் உறவினர்களுடைய போக்குகள், இஷ்டப்பட்டு இன்னும் ஒரு வருஷம் காலேஜில் படித்து டிகிரி வாங்கி இருந்தால் வந்திருக்க வேண்டிய அதிர்ஷ்டங்கள் இவைகளைப் பற்றித்தான் மனத்தில் சிந்தனை ஓடும். கனவுகள் காண்பேன். ஆனால் இரண்டு நாட்களாக, ஒரு சிறு பையன், எழெட்டு வயதுகூட நிரம்பாதவன், வர்ணித்திருந்த—கண்களில் காணாத ஒரு பெண்ணைப்பற்றி என் மனம் ஏன் இவ்வளவு சிந்திக்க வேண்டும்!

எங்கு என்று தெளிவாகத் தெரியவில்லை; ஒரு கல்யாணம் நடக்கிறது; கல்யாணப் பையன் எனக்குத் தெரிந்தவன் போலத்தான் காணப்படுகிறான்; என் சிநேகிதன் தான்; அந்தக் கல்யாணத்தில் என்னை உற்று உற்றுப் பார்த்துக் கொண்டே சுற்றிச் சுற்றி ஒரு பெண் வளைய வருகிறாளே! அது யாராக இருக்க முடியும்! அவளுடைய நீண்ட சாட்டை போன்ற பின்னல் அவள் தலையைத் திருப்பிக் கொண்டு ஓடும்போதெல்லாம்



சாப்பிடுபவர் :—என்ன ஸார்! ஒரு தடவைக்கு மேலே கறி குழம்பு எது கேட்டாலும் மறுபடியும் போடமாட்டேன்கிறீங்க. நான் முதலாளி கிட்டே போய்ப் புகார் செய்கிறேன்!

ஸர்வர் :—நல்லா புகார் செய்யுங்க, ஸார்! உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு. இங்கே சாப்பிடுபவர்களுக்கெல்லாம் நிறையக் கறி குழம்பு போட்டுடறேன்னு எனக்குச் சம்பளத்தை உயர்த்துவதில்லை. நீங்கள் சொன்னால் என் மேலே முதலாளி சந்தோஷப்பட்டுக் கொள்ளுவார்!

---

ஊஞ்சல் ஆடுகிறதே! அவளுடைய மஞ்சள் குருத்துப் போன்ற பொன்னிறக் கைவிரல்களிலும் கால்களிலும் நலங்குபோல இட்டுக் கொண்டிருக்கும் மருதோன்றியின் செம்மை படர்ந்த அழகும்......கோமளமாகத்தான் இருக்க வேண்டும்! ஆம், இதோ வாசலில் அவளேதானே மாக்கோலம் இட்டுக் கொண்டிருக்கிறாள்! க்ஷணத்துக்கு ஒரு தடவை அவள் ஏன் என்னைப் பார்க்க வேண்டும்! அந்த உதட்டில் வெளியும் புன்சிரிப்புக்கும் கண்களில் மின்னிடும் ஒளிக்கும் என்ன அர்த்தம்!...இந்த வாசுவாவது கண்களில் தென்பட்டால் அந்த மோஹினி யார் என்று கேட்டுச் சந்தேகம் தீர்த்துக் கொள்வேன்...வாசு, வாசு...!

"அப்பா, ரகு, யாரைக் கூப்பிடுகிறாய்! பால்காரனையா! அவன் வந்து போய்விட்டானே! டிகாக்ஷன் கூடப் போட்டாய் விட்டது! எழுந்திரு; பல்லைத் தேய்த்துக் கொண்டுவா; காப்பி சாப்பிடலாம்!" என்று என் தாயார் கூப்பிட்டதும், அந்தக் கல்யாண வீட்டு இன்பக் கனவு கலைந்துபோய், நான் எழுந்தேன்.

★

மறுநாளும் நான் நானாகவே, "கோவில் பாடம் படிடா! வாசு!" என்றேன். அதில்தான் 'கோமளம் கோலம் போட்டாள்' என்ற தொடர் வருகிறது. அதைப் படித்ததும் வாசு சிறுத்தினான்.

"கோமளக்காவுக்குக் கலியாணம் நடக்கப்போகிறது, ஸார், இந்தத் தை மாதத்திலே..." என்றான்.

எந்த ஒரு பெரிய விஷயத்தைக் கேட்க - அவளுக்குக் கல்யாணம் ஆகிவிட்டதா, இல்லையா என்று கேட்க — நினைத்திருந்தேனோ, அதை வாசு அவனாகவே சொல்லி என் சந்தேகத்தைத் தீர்த்து வைத்து விட்டான்.

"அப்படின்னு உனக்கு யார் சொன்னா!"

"வீட்டிலே எல்லாரும் பேசிக்கிறா, ஸார்..."

"அவளை யாருக்குக் கொடுக்கப் போகிறார்களாம்!"

"இன்னும் நிச்சயம் ஆகல்லே, ஸார்!"

"பின்னே அதற்குள் கலியாணம்னு சொல்லுகிறாயே!"

"அவளுக்கு ரொம்ப வயசு ஆயிடுத்தாம்! அவ அம்மாவை விடக்கூட ஒசரமா வளர்ந்துட்டா, ஸார்......!"

இந்தக் கபடமற்ற வர்ணனையைக் கேட்டதும் கிராமாந்திரத்தின் செழுமையை என் மனம் எண்ணிற்று. பட்டணத்துப் பெண்ணு என்ன! படிப்பு, பாட்டு, சினிமா என்று ஒவ்வொன்றிற்கும் தங்களுடைய சக்தியையும் சௌந்தர்யத்தையும் பலி கொடுத்து விட்டு, இளைத்து உருகி நிற்பதற்கு! கொடிக்கால் வாழையைப் போல, கல்சட்டி பழையதில் எருமைத் தயிர் போட்டு வடுமாங்காய் ஊறுகாய் வைத்துக் கொண்டு வக்கணையாகச் சாப்பிட்டுத் தள தளவென்று வஞ்சனையே இல்லாமல் வளர்ந்திருக்கும் நாட்டுப்புற பெண்தானே அவள்! நின்றால் வாசல் நிலைப்படிகூட இடிக்கத்தான் செய்யும்! அதனால் கலியாணம் செய்ய வேண்டியது அவசியம்தான்!

அன்றுமுதல் வாசு கோமளத்தைப் பற்றி எனக்கு ஞாபகப்படுத்தாமல் இருந்த நாளே கிடையாது. ஒவ்வொரு நாளும், பாடங்களுக்கு நடுவில் சொல்லி விருந்ததையே திரும்பச் சொல்லுவான். ஆனாலும் கேட்பதில் எனக்கு ஏனோ அலுப்புத் தோன்றவில்லை. எனக்கும் வாசுவைப் பார்க்கும் போதெல்லாம் கோமளத்தின் நினைவு வரத்தான் செய்தது. சின்னஞ் சிறிய ஆலம் விதையிலிருந்து நாளடைவில் கப்பும் கிளையுமாகப் பிரம்மாண்டமாக வியாபித்து ஓங்கி வளரும் ஆலமரம் போல வாசுவினுடைய கொஞ்ச வார்த்தைகளையே கொண்ட வர்ணனை என் உள்ளத்தில் ஒரு பெரிய சிரந்தரமான, ஸ்தரமான ஸ்தானத்தை ஆக்ரமித்துக் கொண்டிருந்தது. பஸ்ஸில், டிராமில், வளையல் கடையில், ஸில்க் எம்போரியத்தில், பீச்சில் அல்லது கோவிலில், எந்த இடத்திலும் என் கண்களுக்குத் தென்படும் அழகான பெண்களை 'இவளைப் போலவா கோமளம் இருப்பாள்!' என்று ஒப்பு நோக்கும் என் மனமும் கண்களும். அப்படி ஒப்பிடும்போது, 'சே, இந்தப் பெண்ணின் கண்களைவிட 'அவளுக்கு' அழகாகத்தான் இருக்கும்' என்று நிச்சயித்துக் கொள்வேன். இன்னொரு பெண்ணை நோக்கும்போது, 'சிவப்புத்தான்; ஆனால் ஒரே குள்ளம்; கத்தரிக்காய்க்குக் கையும் காலும் முளைத்ததுபோல இருக்கிறது! கோமளியினுடைய ஒய்யாரமும் ஒயிலும், பந்தயக் குதிரை போன்ற காம்பீர்யமும் எவருக்கு வரும்!' என்று சமாதானம் செய்து கொள்வேன்.

★

நவராத்திரிக்கு முதல் நாள் வழக்கம்போல வாசுவின் வீட்டுக்கு 'ட்யூஷனு'க்குப் போயிருந்தேன். வாசு தஞ்சாவூர் வீடுக்குக் கமலாபுரம் போயிருப்பதாகச் சொன்னார்கள். அதைக் கேட்டதும் எனக்கு ஒரு உலுக்கு உலுக்கிப் போட்டது. போனவன் ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயிருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! இதுதான் குழந்தைகளை நம்பி நாம் ஒன்றிலும் தலையிடக்கூடாது என்கிறது!

சிறிது சுதாரித்துக் கொண்டு "என்றைக்கு வாசு வருவான் !" என்று கேட்டேன்.

"விஜயதசமிக்கு அடுத்த நாள் நிச்சயமாக வந்துவிடுவான்" என்று சொன்னார்கள், அவனுடைய வீட்டில். தலைநாளைக் கழிக்க மிகவும் கஷ்டப்படவேண்டி யிருந்தது.

விஜயதசமிக்கு மறுநாள் போயிருந்தேன். வாசு ஊரிலிருந்து வந்து இருந்தான்.

"ஏண்டா, வாசு, எங்கேடா போயிருந்தாய் !"

"கமலாபுரத்துக்கு, ஸார்......!" சிரித்தான்; அவனுடைய சின்னஞ்சிறு உதட்டில் விஷமப் புன்னகை நெளிந்தது.

"ஏண்டா என்னிடம் சொல்லிக் கொள்ள வில்லை !"

"அவசரமாய்ப் போயிட்டேன், ஸார் !"

"ஆமாம் இப்படி லீவிலே ஊரை யெல்லாம் சுத்தி விட்டு, படிச்சதை யெல்லாம் மறந்து கொண்டே வந்தால்..."

"ஊரை யெல்லாம் சுத்தவில்லை, ஸார்! கோமளக்கா தினம் இரண்டு பக்கம் 'காப்பி' எழுதச் சொன்னா; இதோ பாருங்கோ ஸார், காப்பி நோட்டை" என்று மேஜை மீது போட்டான்.

நோட்டில் ஒரு பக்கத்தில் 'கோமளம் கோலம் போட்டாள்' என்றும் அதற்கு எதிர்ப்பக்கத்தில் 'ரகு சூரிய வம்சத்து அரசர்' என்றும் 'காப்பி' வைக்கப் பட்டு, பக்கம் முழுவதும் எழுதப் பட்டிருந்தது. அடுத்த காகிதத்தைத் திருப்பினேன்; அதே வாக்கியங்கள் தான் காணப்பட்டன. அந்தப் பத்து தாட்களிலும் அதே வாக்கியங்கள் தான் ! அதைக் கண்டதும் மயிர்க் கூச்சல் எடுத்தது !

"ஏண்டா வாசு என்ன இதே இரண்டு வாக்கியங்களையும் மாற்றி மாற்றி எழுதி வந்திருக்கிறாய் !" என்று கேட்டேன். உண்மை தெரிந்திருந்தும் நம்முடைய உள்ளக் கருத்தைப் பிறர் வாயிலிருந்து வெளிப் படுத்த இந்த மனசுதான் என்ன பாடுபடுகிறது !

"கோமளக்காதான் 'காப்பிபாரம்' வைச்சுக் கொடுத்தாள். வேறு எதையாவது வைக்கச் சொன்னால் அதெல்லாம் உங்களுக்குப் பிடிக்காது என்று சொல்றா, ஸார்."

"அவளுக்கு எப்படியடா தெரியும் என்னைப் பற்றி ! அவள் என்னை எங்கேடா பார்த்திருக்கிறாள் !" என்று கேட்டேன்.

"அவளுக்கு உங்களை நன்றாகத் தெரியுமாம், ஸார்! உங்க கதை யெல்லாம் படிச்சிருக்காளாம்; உங்களைப் போல அழகான கதைகளை யாருமே எழுதமாட்டார்களாம் ஸார்! உங்க கதைன்னா அவளுக்கு உயிராம், ஸார்."

எனக்கு அடக்க முடியாத சிரிப்பு வந்தது.

"அப்புறம் !"

"உங்க கதைக்கு நீங்கபோடுகிற படங்கள் கூட நன்னாயிருக்காம், ஸார்..."

"அப்புறம் !"

"இதோ பாருங்கோ, ஸார்..." என்று புஸ்தகத்தைத் திறந்து 'கோமளம் கோலம் போட்டாள்' என்ற வாக்கியம் வரும் பக்கத்தை எடுத்துக் காட்டினான். அதில் ஒரு அழகான சிறிய கோலம் பென்சிலால் போடப் பட்டிருந்தது. நடுவில் கோமளம் என்று எழுதியிருந்தாள்.

"இந்தக் கோலம் உங்களுக்குப் பிடித்திருக்கிறதா ஸார் ! பார்த்துச் சொல்லுங்கோ, ஸார் !"



"டாக்டர் ஸார், எனக்கு வயது நாற்பதாகிறது. இதுவரையில் உடம்புக்குத் தலைவலி, ஜுரம், கிரம் ஒன்றும் வந்ததில்லை. எனக்கு வர வரப் பயமா யிருக்கிறது, உடம்புக்கு ஏதாவது கெடுதல் ஏற்பட்டிருக்குமோ என்று !"

"ஏன் !"

"கோமளக்கா கேட்டாள், ஸார் ; கிறிஸ்துமஸ் லீவுக்குப் போகும்போது ஞாபகமா, மறக்காமல் சொல்லணும், ஸார் !"

"பிடித்திருக்கிறது என்று சொல்லு."

"உங்களைப் பத்தி ஒவ்வொண்ணாக் கேட்டுத் தெரிஞ்சிண்டிருக்கா, ஸார்."

"என்னென்ன தெரிஞ்சிண்டிருக்கா !"

"உங்களுக்கு என்னென்ன பிடிக்கும் ! எது எது பிடிக்காதுன்னு எல்லாம் என்னைக் கேட்டுத் தெரிஞ்சுண்டிருக்கா, ஸார் !"

*

திடீரென்று ஒரு நாள் வாசுவின் தாயார், "வாசு இந்தாடா! இந்தக் காப்பியை எடுத்துக் கொண்டு போய் வாத்தியாருக்குக் கொடடா !" என்று ஒரு வெள்ளித் தம்ளரில் காப்பியை எடுத்துக் கொண்டு வந்தாள்.

காப்பியை வாங்கிக் கொண்டே, "வாசு, என்னடா விசேஷம் !" என்று கேட்டேன்! அவன் பதில் சொல்லாமல் சிரித்தான். அவனுடைய தாயார் கனைத்துக் கொண்டே "உங்க ஜாதகம்... வேணும் !" என்று மெதுவாகக் கேட்டாள்.

"எனக்கு ஜாதகம் குறித்து வைக்கவில்லை" என்றேன். உண்மையில் புளுகினேன் ; அவர்கள் கேட்கும் இலக்கிலிருந்து அநேகமாகக் கோமளத்துக்குத்தான் என்று தெரிந்திருக்கும் போது ஜாதகத்தைக் கொடுத்து, அப்புறம் ஜாதகம் சேராமல் இருந்து விட்டால் என்ன செய்வது என்றுதான் அவ்வாறு சொன்னேன்.

"வந்து...உங்களுக்கு வாசு சொல்லியிருப்பான். அவனுக்கு ஒன்றுவிட்ட அக்கா ஒருத்தி இருக்கா ; அவாளுக்கு இங்கே கொடுக்கணும்னு..."

"கோமளக்காவை ஸார் !" என்று வாசு ஞாபகப்படுத்தினான்.

"அம்மா இருக்கிறாள் ; அவளையும் கலந்து கொள்ளுங்கள் !" என்றேன்.

பிறகு அம்மா கோமளத்தைப் பார்க்கப் போய் வந்தாள். வந்ததும் வராததுமாக, அம்மா என்னுடன் சண்டைக்கு வந்து விட்டாள்.

"ரகு, உனக்குப் புத்தியே இல்லையடா!" என்று ஆரம்பித்தாள்.

"என்ன அம்மா, விஷயத்தைச் சொல்லேன்..."

"விஷயத்தை என்ன சொல்றது! போயும் போயும் அந்தப் பெண்ணைப் போய்ப் பார்க்கச் சொன்னாயே...!"

"என்ன விசேஷம்! சொல்லேன்!"

"சொல்றதா! பெண் அட்டைக் கறுப்பு!"

"அப்புறம்...!"

"தலையிலே மயிரே இல்லை; ஒரு பெரிய சவுரியை வைத்துண்டு, காடகக்காரி மாதிரி பெரிய பின்னலா பின்னி விட்டிண்டிருக்கா..."

"சரி. இன்னும்...!"

"இன்னும் என்ன சொல்ல வேணும்! எனக்குப் பிடிக்கவேயில்லை!"

"அம்மா, அவளைத்தான் எனக்குப் பிடித்திருக்கிறது!" என்றேன்.

"ரகு, நீ பார்த்தாயா, பெண்ணை!"

"பார்க்கவே வேண்டாம், அம்மா!"

"அப்படின்னா...!"

"என்னைக் கல்யாண கோலத்தில் பார்க்கவேண்டும் என்று நீ இஷ்டப் பட்டால், அவள்தான் என் பக்கத்தில் நிற்பாள்!"

அன்று முதல் ஆரம்பித்த இந்த 'ஷஷ்டாஷ்டகம்' வளர்ந்து கொண்டே போயிற்று. என் தாயாரின் பலத்த எதிர்ப்புக்கும் அழுகைக்கும் அஞ்சாமல் கோமளத்தை மணந்து கொண்டேன். என் தாயார் முதல் ஊரார் வரையில் கோமளத்தை நல்ல கறுப்பு என்றுதான் சொல்லிப் பரிகாசம் செய்தார்கள். அவளுடைய ஒவ்வொரு அங்கத்தையும், ஒவ்வொரு நடத்தையையும் பரிகாசம் செய்யத் தவறவில்லை. ஆனால் அவற்றால் மனம் மாறவோ, வருத்தமோ—ஐயோ, நாம் ஏமாந்து போய் இப்படி அழகில்லாதவனை மணம் செய்து கொண்டோமே என்ற கழிவிரக்கமோ கொள்ளவில்லை. அதே மாதிரி ஊராரின் பரிகாசத்துக்கும், என் தாயாரின் வெறுப்புக்கும் ஆளாகியிருந்தும் கோமளம் அதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் இருந்தாள்.

என் கல்யாணம் ஆகி ஆண்டுகள் இரண்டாகியும் என் தாயாரின் மனத்தில் கோமளத்தின் மீது கொண்ட காப்பு மாறவில்லை. கோமளம் உண்டாகியிருந்த போது வீட்டு வழக்கப்படி நடத்த வேண்டியிருந்த சீமந்தத்தையும் என் தாயார் நடத்துவதற்கு அனுமதிக்கவில்லை. கோமளம் வளைகாப்புக்குப் போனவள் தாயார் வீட்டிலேயே இருந்தாள்.

★

இந்த எண்ண அலைகள் மனத்திரையில் முட்டிக் கொண்டு இருக்கும்போது வாசலில் தந்திச் சேவகன் 'தந்தி ஸார்' என்று கூப்பிடும் சத்தம் கேட்க, நான் முன்னால் ஓட, பின்னாலேயே அம்மாவும் பரக்கப் பரக்க ஓடி வந்தாள்.

தந்தியை உடைத்துப் பார்த்தேன். அதற்குள் அம்மா, "என்னடா, அவளுக்கு உடம்புக்கு ஒன்றும் இல்லையேடா!..." என்று கேட்டாள்.

"இல்லை, அம்மா! உனக்குப் பேரன் பிறந்திருக்கிறான்!" என்றேன். அதைக் கேட்டதும் அம்மாவின் முகம் மலர்ந்து விட்டது. "ரகு, ஓடிப் போய் ஒரு வீசை சீனிக் கல்கண்டு வாங்கிக்கொண்டு வா! ஓடு; எவ்வளவு விலை யிருந்தாலும் வாங்கிக் கொண்டு வா!" என்றாள்.

நானும் அவசரமாக ஓடினேன்.


# தீபாவளி விசேஷ விற்பனை!

தீபாவளிக்கு வேண்டிய ஜவுளிகள் வாங்கியாச்சோ?

வழக்கம்போல் இவ்வாண்டிலும் கொள்ளேகாலம் பட்டுச் சேலைகள், தாவணிகள், பாவாடைகள் முதலியனவும் நூல் ரகங்களும் ஏராளமாக உங்களுக்கென்றே வரவழைத்திருக்கிறோம்.

அனைவரும் தங்களுக்குப் பிடித்தமானதை முன்னதாகவே தேர்ந்தெடுத்துக்கொள்ள முந்துங்கள். விலைகள் யாவும் மிக மலிவு. தரத்திற்கும் உத்தரவாதத்திற்கும் நற்பெயர் பெற்ற இடம்.

○●○

## P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

109, ஐயா முதலித் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2

போன்: 86966

நமது பிராஞ்சு

P. B. லக்ஷ்மண ஸா & பிரதர்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

C/o V. R. எழுதச்சன், ஷாப் நெ. 1, தேவ்ஜீ மேக்ஜீ பில்டிங்ஸ்

பந்தர்கார் ரோடு, மதுங்கா (G. I. P.) :: பம்பாய் - 19

# ஆரோக்கிய ரகசியம்

**வி. என். குமாரசாமி**

## 54. சில சந்தேக விளக்கம்

சுமார் ஒரு வருஷமாக ஆரோக்கிய ரகஸ்யக் கட்டுரைகளைப் படித்து வரும் அன்பர்கள், இது வரை வெளிவந்த ஆசனங்களை வெகு ஆர்வத்துடன் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். அதோடு மட்டு மல்லாமல் அநேக பேயர்கள் இதுவரை ஆசனங்களால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள நன்மைகளைக் குறித்தும் பல நோய்கள் நீங்கின விதத்தைக் குறித்தும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கடிதங்கள் எழுதியிருக்கிறார்கள்.

எல்லோரும் தாங்கள் அடைந்த ஆனந்தத்தை எழுதும்போது, ஒரு சில அன்பர்கள் தாங்கள் ஆசனங்களினால் இதுவரை ஏதும் எதிர்பார்த்த பலன் அடையவில்லை என்றும் எழுதுகிறார்கள். ஒரு அன்பரின் கடிதத்தை மட்டும் விளக்கி, அதற்குப் பரிகாரம் கூறுகிறேன்.

**கேள்வி :**—நான் கடந்த ஆறுமாதங்களாகச் சில ஆசனங்களைச் செய்து வருகிறேன். நான் ஏற்கனவே நரம்பு பலஹீனமானவன். அதைப் போக்கவே ஆசனங்களைச் செய்ய ஆரம்பித்தேன். ஆனால் இதுவரை நீங்கள் சொல்லுவது போல் பலன் ஒன்றையும் காணோம். நரம்பு பலவீனம் நீங்கவில்லை. நான் செய்துவரும் ஆசனங்கள்: புஜங்காசனம் ஐந்து நிமிஷம், சலபாசனம் ஒரு நிமிஷம், தனுராசனம் மூன்று நிமிஷம், பஸ்சிமோத்தானாசனம் ஐந்து நிமிஷம், ஹலாசனம் பத்து நிமிஷம், மயூராசனம் ஒரு நிமிஷம், சர்வாங்காசனம் பத்து நிமிஷம். இத்தனை ஆசனங்களையும் இவ்வளவு நேரம் செய்தும் என் குறை அகலாததற்குக் காரணமென்ன ?


**பதில்** :—நியாயமான கேள்விதான். பச்சாதாபப் படுகிறேன். நீண்ட நாளாகச் சர்வாங்காசன மகிமையை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறேன். எதை அதிக நேரம் அப்பியஸிக்க வேண்டும் என்றும் சொல்லி வந்திருக்கிறேன். எவ்வளவு முடியுமோ அவ்வளவு நேரம் சர்வாங்காசனத்தைச் செய்யும்படி வற்புறுத்தப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த அன்பர் சர்வாங்காசனத்தைப் போலவே மற்ற ஆசனங்களையும் அதிக நேரம் செய்தால், அந்த ஆசனங்களால் ஏற்படக் கூடிய பலன்களை இன்னும் அதிகமாக அடையலாம் என்று நினைத்துக் கொண்டார் போலும். அது தான் அவர் செய்த முக்கிய தவறு. அதனால்தான் அவர் எதிர் பார்த்த பலன் கிட்டவில்லை. புஜங்காசனம், சலபாசனம், தனுராசனம், பஸ்சிமோத்தானாசனம், ஹலாசனம், மயூராசனம் போன்றவைகள் எல்லாம் மூன்று முதல் ஆறு தடவை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறதே தவிர, நிமிஷக் கணக்காய் அப்படியே எந்த ஆசனத்திலும் நிலைத்து நிற்க வேண்டுமென்று சொல்லவில்லை.

சர்வாங்காசனம் மட்டும் 5, 10, 15, 20, 30 நிமிஷம் வரை அவரவர்களால் முடிந்த அளவு செய்யலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிலும், சர்வாங்காசனத்தைக் கூட நீண்ட நேரம் மேற் சொன்னபடி ஒரே தடவையாக நிறுத்த முடியாதவர்கள், முடிந்த அளவு இரண்டு, மூன்று நிமிஷம் நிறுத்தி, பிறகு இறங்கிப் படுத்து இரண்டு மூன்று நிமிஷம் உடலைத் தளர்த்தி இளைப்பாற்றிக் கொண்டு மறுபடியும் இரண்டு மூன்று நிமிஷம் செய்யலா மென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி மூன்று தடவைகள் பத்து அல்லது பதினைந்து நிமிஷங்கள் நிறுத்தலாம். நாள் ஆக ஆக ஒவ்வொரு தடவையிலும் நாலு, ஐந்து, பத்து நிமிஷங்கள் வீதம் நிறுத்தி அதையே மூன்று தடவை செய்வதால் முறையே பன்னிரண்டு, பதினைந்து, முப்பது நிமிஷங்கள் செய்ததாக ஆகும். சிலருக்கு ஒரே தடவையில் பதினைந்து முதல் முப்பது நிமிஷம் வரை நிற்க வரும். அவர்கள் பாக்கியசாலிகளே. சர்வாங்காசனம் மட்டும் அரை மணி நேரம் வரை செய்யலாம். அதனால் நன்மையே தவிரத் தீமை ஒருபோதும் ஏற்படாது. அதற்கு மேல் அதிக நேரம் செய்ய வேண்டிய அவசியமில்லை. இல்லறத்தார்கள் செய்யவும் கூடாது. இப்படி இருக்க, ஒரு சில விநாடிகளே செய்யவேண்டிய ஆசனங்களை ஐந்து, பத்து நிமிஷங்கள் செய்வது என்றால் நியாயமா ? எதிர்பார்த்த பலன் எப்படிக் கிட்டும் ?

ஹலாசனத்தில் ஐந்து நிமிஷம் பத்து நிமிஷம் நின்றால், நரம்புகள் என்ன ஆவது ? முதலில் ஒவ்வொரு ஆசனத்தின் முக்கிய நோக்க மென்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஹலாசனம் முதுகுத் தண்டைப் படிப்படியாய் வளைத்து இளமையை உண்டாக்கவும், அதன் வழியாய் வரும் நரம்புக் கூட்டங்களை இழுத்து மாலிஷ் கொடுப்பது போல் சுறுசுறுப் பேற்றவும் செய்யும். அதைப் போல ஒவ்வொரு ஆசனமும் ஒவ்வொரு பாகத்திற்கு விழிப்பு ஏற்படச் செய்வதாகும். ஹலாசனத்தில் ஐந்து, பத்து நிமிஷம் அப்படியே நரம்புகள் இழுத்து வைத்துக் கொண்டே இருந்தால் நரம்புகள் என்னாகும் ? எதிர் பார்த்த பலன் கிடைக்காது. நரம்பு பலவீனம் போவதற்குப் பதில் அதிகமானால் ஆச்சரியப் படுவதற்கில்லை. அதைப் போலத்தான் மற்ற ஒவ்வொரு ஆசனமும்.

அன்பர்கள் ஆசனப் பயிற்சி செய்வதற்கு முன், செய்ய வேண்டிய முறைகளை, ஒவ்வொரு ஆசனத்தைப் பற்றி எழுதி யிருப்பவைகளை பன்முறை வாசித்துத் தெரிந்து, இப்படித்தான் செய்ய வேண்டும் என்று தீர்மானித்துச் செய்யத் தொடங்க வேண்டும். சர்வாங்காசனத்தை எவ்வளவு செய்தாலும் அவ்வளவு பலன் உண்டு என்று சொல்லுகிறார்களே என்று எண்ணி, மற்ற ஆசனங்களையும் நீண்ட நேரம் செய்தால் அதிக பலன் சீக்கிரம் அடைந்துவிடலாமென்று தப்பர்த்தம் செய்து கொள்ளாதீர்கள்.

உதாரணமாகப் புஜங்காசனம் செய்ய வேண்டுமானால் தரையிலிருந்து தலையைத் தூக்கி வளைத்து புஜங்காசன நிலைக்கு வந்த பின் ஒன்று, இரண்டு என்று ஏழு எண்ணும் வரை அப்படியே நிறுத்தலாம். பிறகு தலையைக் கீழே இறக்கிச் சாதாரண நிலைக்கு வந்து, இரண்டு, மூன்று தடவை மூச்சு வாங்கிவிடும் வரைக்குமோ அல்லது ஏழு எண்ணும் வரைக்குமோ இருந்து மறுபடி புஜங்காசன நிலைக்கு வரவேண்டும். பிறகு ஏழு எண்ணும்



இரண்டு மூன்று வயதுள்ள சின்னஞ் சிறு குழந்தைகளைச் சர்வாங்காசனம் செய்யப் பழக்கும் முறை

வரை இருந்து மறுபடி சாதாரண நிலைக்கு வர வேண்டும். இப்படி மூன்று முதல் ஆறு தடவை செய்யலாம். ஒரு தடவை செய்வது என்றால் ஆசன நிலைக்கு வந்து ஏழு எண்ணும்வரை நிறுத்துவது என்று அர்த்தம்.

ஆனால் தனுர் ஆசனத்தில் சில மாறுதல்கள் உண்டு. முதலில் தனுராசன நிலைக்கு வந்து ஏழு எண்ணும் வரை நிறுத்தி அப்படியே முன்னுக்கும், பின்னுக்குமாய் மூன்று தடவை ஆட்டியும், பக்கங்களில் புரள்வது மூன்று தடவை செய்தும் முடித்தால்தான் ஒரு தடவை தனுராசனம் செய்த மாதிரி. இவ்வாறு இடையில் ஒன்று இரண்டு நிமிஷம் களைப்பை ஆற்றிக்கொண்டு மூன்று முதல் ஆறு தடவைகள் செய்யலாம்.

குறிப்பு :—இந்த தனுர் ஆசனம் சிலருக்கு ஒத்துக் கொள்ளாது. வயிற்றில் புண் இருக்கிறவர்கள் செய்யக் கூடாது. ஹெர்னியா உள்ளவர்கள் இதைக் கட்டாயம் செய்யக் கூடாது. தவிர ஒவ்வொரு ஆசனத்தைப் பற்றிச் சொல்லும் போது எந்த எந்த நோய்க்கு எடுத்தது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர மற்றும் சில ஆசனங்களும் அந்தந்த நோய்க்குச் செய்ய வேண்டியதாய் இருக்கலாம். குறிப்பாக எந்த நோய்களை எதில் குறிப்பிடப் படவில்லையோ அதை மற்றவர்கள் செய்யக் கூடாது. பொதுவாக ஆசன நிபுணர்களைக் கலந்து அவர்களுடைய யோசனையின் பேரில் செய்வது தான் நல்லது.

மேற் கூறியபடி ஆசனங்களைச் செய்வதுடன் 'சாந்தி ஆசனம்' என்று ஒரு ஆசனம் இருக்கிறது. அதையும் செய்தால்தான் பலன் கிடைக்கும். இதற்குச் ' சவாசனம் ' என்ற ஒரு பெயரும் உண்டு.

பெயரைப் பார்த்ததும் பயந்து விடவேண்டாம்! சவாசனம் என்றதும் '' சவம்போல் ஆக வேண்டுமா ! ஏது ! இத்தனை நாள், நாம் வாழப் பிறந்தோம் ; சுகமாய் இருக்கப் பிறந்தோம் ; நோய்களை வெல்லுவோம் ; அதற்காக ஆசனங்களைப் பழகுங்கள் என்று சொல்லி வந்து, கடைசியில் சவம்போல உணர்ச்சியில்லாக் கட்டையாகுங்கள் என்று சொல்லுகிறாரே '' என்று நினைக்க வேண்டாம். பெயரைப் பார்த்தால் சற்று அருவருப்பாகத்தான் இருக்கிறது. அதனால்தான் சவாசனம் என்ற பெயரை மாற்றி நான் சாந்தி ஆசனம் என்று நாமகரணம் செய்திருக்கிறேன்.


சாந்தி ஆசனத்தைப் பற்றிக் கடைசியில் எழுத வேண்டுமானால் குறைந்தது இன்னும் சுமார் ஒரு வருஷமாவது ஆகலாம். அது வரை ஆசனங்களை ஆர்வமுடன் பழகும் அன்பர்களை அந்தகாரத்தில் வைப்பது சரியல்ல என்றே இப்பொழுது சொல்லுகிறேன். சாந்தி ஆசனத்தைச் செய்ய வேண்டிய ஆசனங்கள் எல்லாம் செய்து முடித்த பின், ஓய்வுக்காக, சாந்திக்காக ஆசனங்களினால் பெற்ற பலனைப் பூரணமாய் அனுபவிப்பதற்காகச் செய்ய வேண்டும். இந்த ஆசனத்தைக் கட்டாயம் கடைசியில் செய்தே ஆக வேண்டும். ஒரு ஆசனத்தைச் செய்தாலும், இரண்டு ஆசனங்கள் செய்தாலும், பத்து பதினொரு ஆசனங்களைச் செய்தாலும் கடைசியில் இதைச் செய்யத்தான் வேண்டும். அப்பொழுது தான் ஆசனத்தைப் பூரணமாய்ச் செய்ததாகும். என்ன அவசர காரியமாய் இருந்தாலும் ஆசனமெல்லாம் செய்த பிறகு, இதைக் குறைந்தது ஐந்து நிமிஷமாவது செய்து விட்டுத்தான் வேறு காரியம் பார்க்க வேண்டும்.

ஒரு கலாசாலையில் சில வருடங்களுக்கு முன் ஆசனங்களைச் செய்து காட்டினேன். செய்து முடித்த பின், பிரின்ஸிபால் எழுந்து பையன்களை நோக்கி ''நீங்கள் இவ்வளவு நேரம் ஆசனங்கள் செய்ததைப் பார்த்தீர்களல்லவா ! இது வாலிபர்களாகிய உங்களுக்கு மிக இன்றியமையாதது. உங்களில் யாருக்காவது ஆசனங்கள் செய்யத் தெரியுமா !'' என்று கேட்டார்.

சில மாணவர்கள் அவரவர்களுக்குத் தெரிந்த ஆசனங்களைச் செய்து காட்டிக்கொண்டிருந்தனர். அந்தச் சமயம் ஒரு மாணவன் எழுந்தான். மற்றெல்லா மாணவர்களும் அவனைப் பார்த்துப் பலமாய்ச் சிரித்துக் கைதட்ட ஆரம்பித்தனர். அவனும் சிரித்துக் கொண்டே மேடையின் மேல் வந்தான். ''கொழு கொழு என்று சதை வைத்து புளி மூட்டையைப் போல் இருக்கும் இவன் என்ன ஆசனத்தைப் போடப் போகிறான் '' என்று எல்லோருடைய கண்களும் அவனையே ஆர்வமாய் நோக்கின. மேடை மேல் வந்த மாணவன், நீளப் படுத்து விட்டான். சிறிது நேரமான பின் வீரன் போல் எழுந்து நின்று இது '' சாந்தி ஆசனம் '' என்றான். மற்ற மாணவர்கள் கை தட்டி '' ஓ ! இதுவும் ஒரு ஆசனமா!'' என்று கேலி செய்தனர். ''சந்தேகமிருந்தால் இப்பொழுது செய்து காட்டிய ஆசிரியரிடம் கேளுங்கள்'' என்றான்.

இதைப்போல சிலர் நினைக்கலாம். இது என்ன வெகு சுலபம் தானே ! வெறுமனே படுத்திருப்பது ஒரு கஷ்டமா என்ன என்று நினைக்கலாம். ஆம், பார்க்கச் சுலபம்தான். ஆனால் செய்தால் அப்படிச் சுலபமாய் நினைக்க முடியாது. கை, கால், உடலை மடக்கிச் செய்யும் ஆசனங்களையாவது சில நாளில், சில மாதங்களில் சரியாய்ச் செய்து விடலாம். சாந்தி ஆசனம் அப்படியல்ல. இந்த ஆசனம் சித்தியாகச் சிலருக்கு ஆறு மாதமாவது ஆகும். சிலருக்கு ஒரு வருஷமும் ஆகும், இரண்டு வருஷமும் ஆகும். அவரவர்களின் மனோபலத்தைப் பொறுத்திருக்கிறது. (தொடரும்)

தாய்மார்கள் விரும்பி வாங்கும் அழகிய ஸ்டீல் தொட்டில். கொசு வலை ஸ்டாண்டுடன் கூடியது மலிவான விலை நீடித்த உழைப்பு!



ஸ்டீல் மாஸ்டர் மடக்கும் நாற்காலி. வீடு, ஆபீஸ், ஹோட்டல், சினிமாக் கொட்டகை ஆஸ்பத்திரி, கான்டீன் முதலியவைகளுக்கு இன்றியமை யாதவை. மிகக் குறைந்த விலை. உறுதியான ஸ்டீல் நாற்காலி. ஒன்றின் விலை ரூ. 16—0—0



விவரங்களுக்கு:

**ஸாம்ஸன் & கம்பெனி, லிட்.**

151, பிராட்வே :: மதராஸ் - 1

போன் : 4521 தந்தி : BARAPASH

# தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

## கல்கத்தா

*

அங்கீகாரம் பெற்ற மூலதனம் ... ரூ. 8 கோடி
வாக்களிக்கப்பட்ட மூலதனம் ... ரூ. 4 கோடி
செலுத்தப்பட்ட மூலதனம் .... ரூ. 2 கோடி
ரிஸர்வ் நிதி ... ரூ. 60 லட்சம்

★

போர்ட் ஆப் டைரக்டர்கள் :

**G. D. பிர்லா** (சேர்மன்)

ஈஸ்வரி பிரசாத் கோயங்கா — வைஸ் சேர்மன்
ரமன்லால் G. சரய்யா — வைஸ் சேர்மன்
அனந்த சரண் லா
பைஜ்நாத் ஜலான்
கோபிந்த்லால் பங்கூர்
P. D. ஹிம்மத் சின்கா
ராமேஷ்வர்லால் நோபானி
மகாதேவ் L. தனுகார்
மதன்மோஹன் R. ருயா
மோஹன்லால் L. ஷா
மோதிலால் தபுரியா
நவீன்சந்திர மபத்லால்

ஜெனரல் மானேஜர் :

**B. T. தாகூர்**

*

இந்தியா, பர்மா, பாகிஸ்தான், மலேயா முதலிய தேசங்களின் முக்கிய பட்டணங்களிலும் நகரங்களிலும் இனை ஆபீஸ்களுடன், உலகம் பூராவும் ஏஜன்ஸி ஸ்தாபனங்களுடன் கூடிய நமது பாங்க் சகலவிதமான பாங்க் அலுவல்களையும் முற்றிலும் திறமையாகச் சேவை செய்யுமாறு நிறுவப்பட்டிருக்கிறது.




கூ.ப.லா

## 3. சதிச்செயல்

அடுத்த நாள் பூபதி வண்ணானுடன் மந்திரியின் வீட்டிற்குத் துணிகளைச் சுமந்து சென்றான். வழக்கம்போல் வேலையாள் அழுக்குத் துணிகளைப் போட்டான். துணிகளை வாங்கிக்கொண்ட பூபதி சட்டைப் பைகளைப் பார்த்தான். அதில் ஒரு பவுன் இருந்தது. அதைக் கையில் வைத்து மூடியபடியே, சொக்காய்களைக் கணக்குப் பண்ணிக் கொண்டிருக்கும் வண்ணானிடம் போட்டு விட்டு அறைக்குள்ளிருந்த மந்திரியிடம் சென்று "ஐயா, இது தங்கள் சொக்காய் ஜேபியிலிருந்தது" என்று மிகவும் பணிவோடு சொல்லிக் கொடுத்தான்.

"ஓ, நேற்றுப் போட்டது. மறந்து விட்டேன்" என்று வாங்கிக் கொண்டான் மந்திரி.

பிறகு பூபதி துணிகளைக் கட்டுவதில் ஈடுபட்டான். அப்பொழுது வண்ணான் பூபதியின் பக்கத்தில் வந்து நின்றபடி "டேய், ஜேபியிலிருந்து எடுத்ததை மரியாதையாக என்னிடம் கொடுத்துவிடு" என்றான்.

பூபதி சற்று தைரியமாகவே "ஏன்? அதை உன்னிடம் ஏன் கொடுக்க வேண்டும்? அது என்ன நியாயம்?" என்றான்.

வண்ணானுக்குக் கோபம் வந்து விட்டது.

"பயலே! என்னிடம் வேலை செய்து கொண்டே என்னிடம் வாலாட்டுகிறாயா?" என்று கூறிப் பளார் என்று பூபதியின் கன்னத்தில் அறைந்தான்.

அந்தச் சமயம் வண்ணான் கேட்டதையும் பூபதியின் பதிலையும் கேட்டபடி வந்த மந்திரி பூபதி அடி பட்டதைப் பார்த்ததும் "ஏண்டா அடிக்கிறே அவனை?" என்று அதட்டினான்.

வண்ணான் பயத்துடன் மந்திரியைக் கும்பிட்டுக் குழைந்தபடி "நான் சும்மா அடிப்பேனா? இந்தப் பயல் திருட்டுப்பயல்! ஐயா ஜேபியிலே எதுனா இருந்துதுன்னா எடுத்துக் கொடுத்துடணும்னு சொன்னால் முறைக்கிறானுங்க. இந்த வாண்டுங்களை எல்லாம் நன்றாய் வெளுத்து வாங்கினதைத் தான் ஒழுங்கா நடக்குங்க" என்று சொன்னான்.

"ஓகோ! உன்னிடம் கொடுக்காததால் அடித்தாயாக்கும்! சரி, அவனை உன் வேலையிலிருந்து நீக்கி விடு" என்றான் மந்திரி.

வண்ணான் பூபதியைப் பார்த்து, "ஏய் பயலே! இனி மேல் நீ என்னிடம் வேலைக்கு வரவேண்டாம்!" என்று கூறிவிட்டு மூட்டையைத் தூக்கிக் கொண்டு வேகமாக நடந்தான்.

வண்ணான் போனதும் மந்திரி பூபதியைக் கவனித்துப் பார்த்தான். லக்ஷணம் பொருந்திய அவனது முகம் மிகவும் கவர்ச்சிகரமாயிருந்தது. மந்திரிக்கு வெகு நாட்களாக ஒரு சின்னப் பையனைத் தன்னிடம் வேலைக்கு வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஆசை. பூபதியைப் பார்த்ததும் 'இவனையே நம்மிடம் வேலைக்கு வைத்துக் கொண்டாலென்ன! பார்ப்பதற்கும் நன்றாயிருக்கிறான். மிகவும் உண்மை உள்ளவனாக இருக்கிறான்!' என்று நினைத்தான். உடனே பூபதியை அழைத்தான் மந்திரி.

"நீ உண்மையாக இன்று நடந்து கொண்டதால் உன்னை நானே வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறேன். நான் கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்து என் கையாளாக இருந்து கொண்டிரு. வீட்டோடு இருக்கலாம். நல்ல சாப்பாடு போட்டு உன் கைச்செலவுக்கும் மாதம் ஐந்து ரூபாய் தருகிறேன்" என்று சொன்னான்.

அவ்வளவுதான் பூபதிக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. சம்மதித்து விட்டான்.

மறு தினத்திலிருந்து பூபதி மந்திரியிடம் வேலைக்கு அமர்ந்தான். சுருசுருப்பாகவும், வணக்கமாகவும் நடந்து நாளுக்கு நாள் மந்திரியின் பிரியத்துக்குப் பாத்திரமாகி அந்தரங்க ஆளாகி விட்டான்.

எனினும் அந்த இடத்தில் அவ்வளவு வசதியாக இருந்தும் ஒரே ஒரு விஷயம் மட்டும் பூபதியின் மனதைச் சற்று கலக்கியே வந்தது.

அந்த விஷயம் மந்திரி வீட்டில் ஒரு சமையற்காரனும், வீட்டு வேலை செய்யும் வேலைக்காரி ஒருத்தியும் தோட்டக்காரன் ஒருவனும் பூபதி ஒருவனுமாக நாலு ஆட்களிருந்தனர். இந்த நாலு ஆட்களில் பூபதியைத் தவிர மற்ற மூவரும் இரவு எட்டு மணிக்கெல்லாம் மந்திரி வீட்டை விட்டு, தம் தம் வீட்டிற்குப் போய் விடுவார்கள். பூபதி மட்டும்தான் மந்திரி வீட்டிலேயே படுத்துக்கொண்டான். அத்தனை பெரிய வீட்டில் பூபதி முன்புறமுள்ள ஒரு அறையில் படுத்துக் கொள்ளுவான். சிறிது நேரத்திற்குப் பின் மந்திரி பூபதி படுத்திருக்கும் அறையின் கதவை

வெளியில் பூட்டிக் கொண்டு மாடியில் படுத்துக் கொள்ளச் சென்று விடுவான். ஆகவே பூபதிக்கு ஒண்டியாக அவ்விடம் படுத்திருக்க வேண்டி இருந்தது. அது அவனுக்கு ரொம்பவும் பயமாக இருந்தது. மந்திரி அப்படித் தன்னை நம்பாமல் கதவைப் பூட்டிச் செல்லுவது ஏன் என்று புரியாத இரகசியமாக இருந்தது.

பூபதிக்கு அன்று விடிந்ததிலிருந்தே மனம் ஒரு நிலை கொள்ளாமல் இருந்தது. அன்று மாலை ஏழுமணிக்குத்தான் மேலப் பாலம் புளியமரத்தடியில் அந்த வீரபத்திரன் வந்து சந்திப்பதாக குறிப்பிட்டிருக்தான். பூபதிக்கு அந்தச் சந்திப்பில் ஏதாவது விசேஷம் இருக்க வேண்டும் என்று தோன்றியது. இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு யாருக்கும் தெரியாமல் அங்கே போய் மறைந்திருந்து அவர்களைப் பார்க்கலாம் என்று தீர்மானம் செய்தான்.

மாலை ஐந்து மணிக்கே புறப்பட்டு மேலப் பாலம் அடைந்த பூபதி அங்கு ஒதுப்புறமாய் ஒரு பிரும்மாண்டமான புளிய மரம் இருப்பதைக் கண்டான். ஆனால் 'இவன் ஒளிந்து நிற்கும்படியான செடி கொடிகளோ மற்ற மரங்களோ ஏதுமின்றி அந்த இடம் வெறும் திடல் போலவே காணப்பட்டது. தான் அங்கு நிற்பதை யாரும் வரும்பொழுதே பார்த்து விடலாமே. அப்படி மந்திரியோ, அந்த வீர பத்திரனோ பார்த்ததும் நன்றாகப் பிரப்பம் பழங்களை வழங்கி விட்டால்? என்று நினைத்ததுமே அவனுக்குப் பகீரென்றது. இருந்தாலும் அந்த இரகசியத்தை அறிய வேண்டும் என்னும் ஆவலில் தனக்குத் தானே தைரியமூட்டிக் கொண்டான். அந்தத் தைரியத்தில் பூபதி அங்கிருந்த பெரிய புளிய மரத்தில் ஏறி ஒரு கிளையில் சௌகரியமாக உட்கார்ந்து கொண்டான்.

'அடர்த்தியான இந்தப் பெரியமரம் நீலச்சொக்காயும் நீல நிஜாரும் போட்டிருக்கும் என்னை இருட்டும் சமயத்தில் காட்டிக் கொடுக்காது!, என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான். பிறகு பூபதி முக்கியடித்து மரத்தின்மேல் ஏறிக் கிளைகளும் இலைகளும் அடர்ந்து காணப்பட்ட ஒரு இடத்தில் வசதியாக, கீழிருந்து பார்ப்பவர்களுக்கு லகுவில் தெரியாதபடி, தானும் கீழே விழாதபடி பத்திரமாக உட்கார்ந்து விட்டான்.

பூபதி மரத்தின் மேல் உட்கார்ந்து ஒரு மணி நேரமாகியும் அந்த மரத்தடிக்கு யாருமே வராதபடியால் பூபதிக்கு அலுத்துப் போய்விட்டது. நாம் அந்தக் கடிதத்தை நம்பி இப்படி வந்ததே முட்டாள் தனம் தான். மாலையும் போய் இருளும் வந்து விட்டது. இந்த அத்வான இடத்திலே ஒரு காய்கூட ஓடக் காணோமே. நாம் இறங்கிப் போய் விடலாமா? என்று நாலு ஐந்து தரம் எண்ணியும் சரி, இன்னும் கொஞ்ச நேரம் பார்க்கலாம், இன்னும் ஐந்து நிமிஷம் பார்க்கலாம் என்று உட்கார்ந்திருக்கவே தூரத்தில் சற்றுக் குட்டையும் கட்டையுமான ஒரு மனிதன் வருவதைக் கண்டான். அவன் புளியமரத்தி னருகில் வந்து நின்று சுற்று முற்றும் கவனித்துவிட்டு மெல்ல அப்படியும் இப்படியும் உலாவியபடி இருந்தான்.

அவனை பூபதி நன்றாகக் கவனிக்கமுடிந்தது.

மாநிறமான மனிதன். முகத்தில் அடர்ந்த மீசை. சரிகை வேஷ்டி. மேலே ஒரு சொக்காய். அதற்கு மேல் ஒரு சரிகை அங்கவஸ்திரம். இந்த அலங்காரங்களுட னிருந்தவனை பூபதி மறுமுறை அவனைக் கண்டால் அடையாளம் புரிந்து கொள்ளும்படி நன்கு கவனித்துக் கொண்டான்.

சற்று நேரத்திற்கெல்லாம் கையிலே பிரம்பைச் சுழற்றியபடி பட்டுச் சட்டையும், பட்டு அங்கவஸ்திரமும், காலில் ஜோடும் அணிந்த மந்திரி ஐம்புலிங்கம் வந்து, "என்ன வீர பத்திரா, சுகந்தானே?" என்று கேட்டான்.

உடனே வீரபத்திரன் மந்திரிக்கு ஒரு கும்பிடு போட்டு விட்டு "சுகந்தான். நீங்கள் முக்கிய விஷயம் என்று குறித்திருந்தபடியால் குறித்தபடி வந்து சேர்ந்து விட்டேன். விஷயத்தை நேரிலேயே சொல்லி விட்டால் என்னால் முடியும் முடியாது என்று சொல்லி விடுவேன்" என்றான்.



மரத்தடியில் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் நின்றுபேசினபடியால் பூபதிக்கு அவர்கள் பேசுவது நன்றாகக் கேட்டது.

"விஷயம் உனக்கும் நமக்கும் தான். முதலிலே நீ என்னிடம் ஒரு பொடி கொடுக்க வேண்டும். அதை நான் பாலிலோ பானத்திலோ அந்த ஆளுக்குக் கொடுத்து

விட்டேனானால் அவனது உடம்பில் ஒரு மாதத்திற்கெல்லாம் தீராத நோய் உண்டாக வேணும் தெரிந்ததா? அவ்வளவு தான். அதற்குச் சன்மானம் ரூபாய் ஐயாயிரம் உனக்குத் தரப்படும்! என்ன தெரிந்ததா?"

"ஓ! நன்றாய்ப் புரிகிறது. அரசனுக்கு அல்லவா நான் அந்த மருந்தைத் தரவேண்டும்? இது எவ்வளவு துணிகரமானதும் ஆபத்தானதும் என்பது உங்களுக்கே தெரியும். துளி வெளியில் தெரிந்தாலும் தலை போய் விடுமே!" என்று வீரபத்திரன் சொன்னதும் மந்திரி பரபரப்புடன் அவன் வாயைப் பொத்தினான்.

பிறகு மந்திரி தனது பணப்பையை எடுத்து அதிலிருந்து ஒரு சிறு பையை எடுத்து வீரபத்திரனிடம் கொடுத்து "வீரபத்திரா, இதோ முன்பணம் ஆயிரம் கொடுத்திருக்கிறேன். நீ மருந்து கொண்டு வந்து கொடுத்ததும் ஆயிரம் கொடுப்பேன். அது குணம் தெரிய ஆரம்பித்த மறுதினமே மீதி மூவாயிரமும் கொடுத்து விடுவேன். உன் வேலை திறமையாக இருப்பதுடன் விஷயம் பத்திரமாகவும் இருக்கட்டும்" என்று சொல்லிப் புறப்பட்டான்.

வீரபத்திரன் சென்றவுடன் மந்திரி தங்கள் சம்பாஷணையை ஒருவரும் கவனிக்க வில்லையே என்று சுற்றும் முற்றும் பார்த்துத் திருப்திப்பட்டுக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டான்.

அதைக் கண்ட பூபதிக்குச் சிரிப்பு வந்து விட்டது. சற்று பலக்க சிரித்தும் விட்டான். ஆனால் அந்த முட்டாள் மந்திரியின் காதில் அது விழுந்தால்தானே!

பிறகு, மந்திரி சென்று சிறிது நேரம் ஆன தும் பூபதி மெல்ல அந்த மரத்தை விட்டு இறங்கி, ஓட்டமும் நடையுமாகத் தனது சாப்பாட்டுக் கடையை நோக்கிச் சென்றான்.

பூபதிக்கு மந்திரியின் சூழ்ச்சிகள் ஆச்சரியமாயும் பயங்கரமாயும் மனதில் பட்டிருந்தும் கூட அவன் அவ்விஷயங்களைப் பற்றி, அது பெரிய இடத்து விஷயமானதால் சிறுவனான நாம் அதைக் கண்டபடி வெளியில் அரைகுறையான விஷயத்தைச் சொல்லக்கூடாது என்று நினைத்துத் தனது நண்பனான சோமனிடம்கூடத் தெரிவிக்கவில்லை. (தொடரும்)

# ஐந்து நிமிஷம் போதும்!

விஜயம்

அந்த வீட்டு எஜமானர் நினைத்து நினைத்துச் சமையற்காரருக்கு ஏதாவது உத்தரவு போடுவார். எஜமானியம்மாள் படு சிரத்தையுடன் அதை நிறைவேற்றி வைப்பாள். இப்படி இரண்டு பேருமாகச் சேர்ந்து அந்தச் சமையற்காரரை ஆட்டி வைத்தார்கள்.



அன்றைக்குக் காலையில் ஒரு இருபத்தைந்து பேருக்கு விருந்து. அதுவும் ஆபீஸ் நேரத்துக்குள் ஆக வேண்டும். பறந்து பறந்து, சமையல் செய்து சமையற்காரர் விருந்தினர்களுக்குச் சாப்பாடு போட்டு அனுப்பி வைத்தார். பிறகு சமையலறைத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து சமையற்காரர் வெற்றிலைப் பாக்கை மென்று கொண்டிருந்தார்.

அப்பொழுது அந்த வீட்டு எஜமானியம்மாள் அங்கு பிரசன்னமானாள்.

"இரண்டு பேரைச் சாப்பாட்டுக்கு அழைத்து வருவதாக அவர் இப்பொழுது டெலிபோனில் சொன்னார். என்ன செய்வது? உங்களுக்குத்தான் மறுபடியும் சிரமம் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒன்றும் வேண்டாம்! அடுப்பை மூட்டி, அரைப்படி அரிசியைக் களைந்து போட்டு, ஒரு சாம்பாரைப் பண்ணி, ஒரு ரஸத்தையும் வைத்து விடுங்கள்! உருளைக் கிழங்கைப் பொடிமாஸ் செய்துவிடுங்கள். போதுமானது. கத்தரிக்காயைக் கூட்டாகச் செய்து விடுங்கள். இன்னொன்று; கொஞ்சம் வத்தல் குழம்பும் வைக்க வேண்டும். அத்துடன் கொஞ்சம் தேங்காய்ச்சாதமும் தயார் செய்து விடுங்கள். தயிர்தான் இருக்கிறதே. கொஞ்சம் தயிர்ப் பச்சடியும் செய்யலாம். மறந்து விட்டேனே! இன்னொன்று. மோர் நிறைய இருக்கிறதல்லவா! ஒரு மோர்க்குழம்பு செய்ய வேண்டியது அவசியம். அப்படியே நீங்கள் கொஞ்சம் கடைக்குப் போய் மோர்க் குழம்பில் போடுவதற்குக் காய் ஏதாவது வாங்கி வந்துவிடுங்கள். வாழை இலையும் வேண்டும். இதெல்லாம் ஒரு மணி நேரத்தில் ஆகிவிடாதா? நீங்கள் தயார்தானே?" என்று மூச்சு விடாமல் பேசினாள் எஜமானி.

சமையற்காரர் மிகவும் சாவதானமாகச் சிரித்துக் கொண்டே, "இதற்கு என்னத்துக்கு அம்மா, ஒரு மணி நேரம்? ஐந்தே நிமிஷத்தில் தயார்தான்!" என்றார்.

எஜமானி ஆச்சரியத்துடன், "ஐந்து நிமிஷம் போதுமா? அது எப்படி?" என்று கேட்டாள்.

"பேஷாய்ப் போதும்! நீங்கள் காலையில் இருபத்தைந்து பேருக்குச் சமைக்கச் சொல்லிக் கடுமையாக வேலை வைத்தவுடனேயே, என் மூட்டைகளையெல்லாம் கட்டித் தயாராக எடுத்து வைத்துவிட்டேன். இப்பொழுது என் பாக்கிச் சம்பளத்தைக் கணக்குத் தீர்த்து வாங்கிக் கொண்டு போகவேண்டியதுதான். அதற்கு ஐந்து நிமிஷம் போதாதா!" என்று கேட்டார் சமையற்காரர்.




# கார் 'செய்தார்'?

ராஜுவும் அவன் அப்பாவும் ஒரு நாள் கடைத் தெருப் பக்கம் போனார்கள். அங்கே ஒரு கடையில் ஒரு 'குழந்தை மோட்டார்' இருந்தது. அதைப் பார்த்ததும் ராஜு வாங்கிக் கொடுக்கும்படி அப்பாவை நச்சரித்தான். அப்பா தாமே மோட்டார் செய்து தருவதாகச் சொன்னார். வீட்டில் இருந்த பீப்பாய்களை எடுத்து அவைகளைக் கொண்டு அப்பா ஒரு 'குழந்தை மோட்டார்' செய்தார்.

சந்தோஷத்தோடு அப்பா, "ராஜு, மோட்டார் செய்தாகி விட்டது! உன் மோட்டாரை விட்டுப் பார்க்கப் போகிறேன், பார்!" என்று சொல்லிக் கொண்டே தாம் செய்த மோட்டாரில் ஏறிக் கொண்டு ஓட்ட ஆரம்பித்தார். மோட்டார் நகர்ந்தது.

அவ்வளவுதான். அடுத்த நிமிஷம் வீடெல்லாம் நடுங்க 'டபார்' என்று அதிர்வேட்டுச் சத்தம் மாதிரி கேட்டது. மோட்டார் சுக்குநூறாக உடைந்து நொறுங்கியது!



# வீடு காலியா?

மானு

இந்தக் காலத்தில் வீடு ஒன்று காலியாக இருக்கிறது, என்று கேட்டால் உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

நீண்டநாளாகவே அந்த வீடு காலியாக இருந்தது. வீட்டு வாசலில் கொட்டை எழுத்தில் 'வீடு வாடகைக்கு விடப்படும். ஆனால் குழந்தைகள் இருக்கக்கூடாது' என்று ஒரு பலகை மட்டும் தொங்கிக் கொண்டிருந்தது.

குழந்தைகள் இல்லாதவர்களுக்கு அந்த வீடு வேண்டியதில்லை பெரிய வீடு. அத்துடன் வாடகையும் அதிகம். அது ஒரு ஒதுப்புறமான இடத்தில் வேறு இருந்தது. அந்த வீட்டுக்குச் சொந்தக் காரியோ மிகவும் கண்டிப்பானவள். அவளுடைய கணக்கும் கண்டிப்பும் எவ்வளவு கடுமையானது என்பதைச் சற்று பாருங்கள்.

"யார் அங்கே நிற்கிறது?" என்று கூப்பிட்டாள் அந்த வீட்டின் சொந்தக்காரி.

"நான்தான் வேலைக்காரி" என்றாள்.

"ஓடிப்போய் நம் வீட்டில் எத்தனை மாடுகள் இருக்கின்றன என்று எண்ணிக் கொண்டுவா?" என்றாள் வீட்டுக்காரி.

"சரி" என்று சொல்லிச் சென்றாள்.

சிறிது நேரம் சென்றது.

வேலைக்காரி வந்து நின்றாள்.

"மாடுகளை எண்ணிவிட்டாயா?" என்று கேட்டாள் வீட்டின் சொந்தக்காரி.

"ஓ! எண்ணி விட்டேனே" என்று பணிவுடன் சொன்னாள் வேலைக்காரி.

"நன்றாக எண்ணிப் பார்த்தாயா?"

"ஒரு முறைக்கு மூன்று முறை கவனமாக எண்ணிப் பார்த்தேன்."

"எத்தனை மாடுகள் இருக்கின்றன?"

"ஒன்றே, ஒன்று!" என்றாள் வேலைக்காரி.

"சரி, நீ போ!" என்றாள் வீட்டுக்காரி.

இப்படி ஒரே ஒரு மாட்டைக்கூட ஒரு நாளைக்குப் பல தடவை எண்ணிப் பார்க்கும் சுபாவமுடையவள் அந்த வீட்டின் சொந்தக்காரி. ஆகவே அவள் வீட்டில் யாரும் குடியிருக்க முன் வருவதில்லை. அப்படி வந்தாலும் அதிக நாள் தங்குவதில்லை. அதனால் வீடு காலியாகவே கிடந்தது.

ஒருநாள் அந்த வீட்டைப் பார்ப்பதற்காக நான் போயிருந்தேன். வீட்டுக்காரியுடன் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தேன். "எனக்கு ஒரே ஒரு குழந்தைதான். அதுவும் மிகச் சாதுவான குழந்தை. எனக்கு வீட்டை விட முடியுமா?" என்று கேட்டேன். அவள் கண்டிப்பாக முடியாது என்று மறுத்து விட்டாள்.

நான் அந்த வீட்டுக்கார அம்மாளிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்பினேன்.

அப்பொழுது யாரோ அந்த வீட்டுக்குள் வருவதுபோலச் சத்தம் கேட்டது.

வீட்டுக்காரி வழக்கம்போல "யார் அது?" என்று அதிகாரத்துடன் கேட்டாள். அவள் அதட்டலில் பயந்து அந்த வீடும் ஒரு தடவை "யார் அது?" என்று எதிரொலித்து ஓய்ந்தது.

பத்து வயது உள்ள சிறுவன் உள்ளே வந்தான். முகத்தில் புன்முறுவலை வரவழைத்துக் கொண்டு வீட்டுக்கார அம்மாளுக்கு வணங்கினான்.

"என்ன வேண்டும் தம்பி?" என்று தணிந்த குரலில் கேட்டாள் வீட்டுக்காரி.

"அம்மா! உங்கள் வீடு வாடகைக்கு விடப்படும் என்ற போர்டைப் பார்த்தேன். இன்னும் காலியாகத்தான் இருக்கிறதோ?" என்று கேட்டான் சிறுவன்.

"ஆமாம், காலியாகத்தான் இருக்கிறது" என்றாள் வீட்டுக்கார அம்மாள்.

"அப்படியானால் எனக்கு இந்த வீட்டை விடுவீர்களா? எனக்குக் குழந்தை குட்டி என்று ஒரு பிடுங்கலும் இல்லை. நான் மட்டும்தான் இருக்கிறேன். எனக்கு ஒரே ஒரு தங்கையும் வயது சென்ற என் தாயாரும் தகப்பனாரும்தான் இருக்கிறார்கள்" என்றான்.

எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை.

வீட்டுக்கார அம்மாவுக்குக் கோபம் தாங்க முடியவில்லை. கண்ணகிபோலக் கண்களை அகல விரித்துப் பார்த்தாள். அதில் கோபக் கனல் பறந்தது. பையன் செத்தேன், பிழைத்தேன் என்று ஓடிப்போய் விட்டான். நானும் வாய் பேசாமல் திரும்பிவிட்டேன்.

சில தினங்களுக்குப் பிறகு அந்த வீட்டுப் பக்கம் போனேன். அந்த வீட்டில் இத்தனை நாளாகத் தொங்கிக் கொண்டிருந்த 'வீடு வாடகைக்கு விடப்படும்' என்ற போர்டைக் காணவில்லை. அந்த வீட்டின் பழைய வேலைக்காரி வாசலைப் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

"ஏன், அம்மா! இந்த வீட்டில் யாராவது குடிவந்து விட்டார்களா?" என்று வியப்புடன் கேட்டேன்.

"ஆமாம்......" என்று இழுத்தாள்.

"கடைசியில் அந்த அம்மாள் இந்த வீட்டை விட்டு விட்டார்களா?" என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம், ஐயா, ஆமாம்! தன்னுடைய ஒரே ஒரு வீடு, ஒரே ஒரு மாடு, ஒரே ஒரு வேலைக்காரியாகிய நான் எல்லாவற்றையும் விட்டு விட்டு, இந்த ஒரே ஒரு உலகத்தையும் விட்டு விட்டுப் போய் விட்டார்கள். இப்பொழுது எத்தனையோ பேர் இந்த வீட்டில் குடியிருந்தாலும் வீடு காலியாகவேதான் இருக்கிறது!" என்றாள்.

மனிதர்களுடைய வாழ்க்கையையும் மனப்போக்கையும் என்னவென்று சொல்லுவது? எனக்கும் உண்மையிலேயே அந்த வீடு காலியாக இருப்பதுபோலத் தோன்றியது.



# தீபாவளிப் பரிசு

கி. ரங்கராஜன்

நிர்மலமான ஆகாயத்தில், தாரா கணங்களுக்கு நடுவில், பூரண சந்திரன் தன் அமிர்த மயமான கிரணங்களை அள்ளிச் சொரிந்து கொண்டிருந்தான்.

மாடியின் மூன் பக்கத்துத் தாழ்வாரத்தில் சாய்மான நாற்காலியில் படுத்திருந்த ராமச் சந்திரனுக்கு அந்த இனிய காட்சி,

"சோனப்போர் மத்தியிலே கட்டுவைத்த
தோசையைப் போல்
சூழ்ந்த பல மீன்நடுவே தோன்றும்
இந்தச் சோதி நிலா"

என்ற பாட்டை நினைப்பூட்டியது. மெய் மறந்து அனுபவித்துக் கொண்டிருந்தான்.

அப்பொழுது திடீரென்று எழுந்த மல்லிகைப் பூவின் மெல்லிய கந்தம் அவன் நினைவைத் திருப்பி, திரும்பிப் பார்க்கச் செய்தது. அவன் மனைவி தங்கம்மாள் வெற்றிலைத் தட்டை அவன் முன்பு நீட்டியபடியே, "என்ன பலமான யோசனை?" என்று கேட்டாள்.

"யோசனையா? இந்தப் பூரண சந்திரனைப் பார்க்கும்போது, உன் மதி வதனம் என் நினைவுக்கு வந்தது. அப்படியே மதி மயங்கிப் போனேன்."

"நீங்களே ஒரு சந்திரன். அப்படியிருக்க வேறொரு சந்திரனைக் கண்டு மதி மயங்குவானேன்? அது போகட்டும். இப்பொழுது வேறொன்று என் நினைவுக்கு வருகிறது. சொல்லி விடட்டுமா?"

"சொல்லேன்!" என்று சொல்லி, அவள் தளிர்க்கரங்களைப் பற்றித் தன் நாற்காலியின் சட்டத்தின்மீது அவளை உட்கார வைத்தான் ராமச்சந்திரன்.

"இன்று பௌர்ணமி அல்லவா? இன்னும் பதினைந்து நாள்தானே இருக்கிறது தீபாவளிக்கு? போன வருஷம் தீபாவளிக்குப் புடவை எடுக்கவில்லை. அடுத்த வருஷம் தீபாவளியின் போது நல்ல பட்டுப் புடவையாக வாங்கித் தருகிறேன் என்று சொன்னீர்கள்; ஞாபகம் இல்லையா?" என்று கேட்டாள் தங்கம்.

"ஞாபகம் இருக்கிறது. ஆனால் இப்பொழுதுள்ள பொருளாதாரம், நால் புடவைக்குக் கூட இடங் தருமா என்றல்லவா நினைக்க வேண்டியிருக்கிறது."

"இந்தக் கும்பகோணத்தில் நவராத்திரி எவ்வளவு விசேஷம்? எப்பொழுதோ வாங்கின அந்தச் சந்தனக் கலர் புடவையும் அரக்குக் கரைப் புடவையுந் தானே, பட்டுப் புடவை என்ற பேரைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன? அவற்றை நான் மாற்றி மாற்றிக் கட்டிக்கொண்டு வெளியில் போனபொழுது எவ்வளவு வேதனையாக இருந்தது தெரியுமா? அதோடு இவ்வூர் மாதர் சங்கத்தில் நான் சேர்ந்தது எவ்வளவு பிசகு என்பதை இப்பொழுது அல்லவா நான் உணருகிறேன்? அந்தச் சங்கத்திலே உள்ள அந்தனை பெண்களும் என் புடவைகளைப் பார்த்துப் பார்த்துக் கேலி செய்கிறார்கள். எனக்கு 'நறுக்'கென்று நாலு நல்ல புடவை வேண்டாமா? ஆகையால் இந்தச் சமயத்தில் நீங்கள் அவசியம் ஒரு பட்டுப் புடவை வாங்கித் தரவேண்டும்."

"உத்தரவு கடுமையாக இருக்கிறதே!" என்றான் ராமச்சந்திரன் சிரித்துக்கொண்டு.

"மறந்து விட்டேனே, இந்த மாதம் ஆபீஸில் உங்களுக்குப் போனஸ் பணம் கிடைக்குமே! அவற்றிற்குச் செலவு வேண்டாமா? ஒன்றுக்கு இரண்டாகத்தான் இருக்கட்டுமே, வாங்கி விடுங்கள். சந்திராவைத் தான் தெரியுமே, எங்கள் சங்கத்தின் காரியதரிசி! அவள் வீட்டில் நவராத்திரிக்கென்று ஒன்பது கலரில் ஒன்பது புடவைகள் வைத்திருக்கிறாளாம். நம் வீட்டில் நாலாவது வேண்டாமா?"

"அவசியம் வேண்டியதுதான். அத்துடன் பணமும் வேண்டுமே."

"மனம் இருந்தால் பணமிருக்கும்!" என்றாள் தங்கம். அத்துடன் அந்தப் புடவைப் பேச்சு நின்றது.

மறுநாள் ராமச்சந்திரன் காரியாலயத்திலிருந்து வந்தபோது, மேஜைமீது, அவன் விலாசத்துக்கு ஒரு கவர், அவன் வரவுக்காகக் காத்திருந்தது. கவரைப் பிரித்து உள்ளே இருந்த கடிதத்தைப் படித்தான்.

அவன் தங்கை கல்யாணி எழுதியிருந்தாள். வருகிற புதன்கிழமை கும்பகோணத்துக்கு வருவதாயும், ரயிலடிக்கு வந்து தன்னை அழைத்துப் போக வேண்டும் என்றும் அதில் எழுதியிருந்தாள்.

வெகு நாட்களுக்குப் பிறகு தன் அருமைத் தங்கையைக் காணப் போகிறோம் என்ற நினைவில் ஒரு மகிழ்ச்சியும், அவள் வரவால் நேரிடக்கூடிய செலவில், ஒரு துன்பமும் அவன் உள்ளத்தில் சுழன்றன.

புதன் கிழமை வந்தது. அத்துடன் கல்யாணியும் அவள் குழந்தைகளும் வந்து சேர்ந்தார்கள். கல்யாணியின் அதிகமான அழகும் ஆடம்பரமான ஆடை ஆபரணங்களும், தங்கத்துக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தன.

வந்ததும் வராததுமாக "என்ன அண்ணா! முதன் முதலாக உன் வீட்டிற்கு வருகிறேன். தீபாவளி முடிந்துதான் ஊருக்குப்



போவேன். தீபாவளிக்கு என்ன வேணுமதி வாங்கிக் கொடுக்கப் போகிறாய்?" என்று கேட்டாள் கல்யாணி, சிரித்துக் கொண்டே.

"நீ எது கேட்டாலும் வாங்கித்தரத் தயார்" என்று சொன்னான் ராமச்சந்திரன்.

கல்யாணி வந்த நாள் முதலாக, ராமச்சந்திரன் வீடு, கல்யாண வீடாகத் திகழ்ந்தது. நெய்யை வீசைக் கணக்காக வாங்குவதிலும், பணத்தை நோட்டு நோட்டாக மாற்றி மளிகைச் சாமான்கள் வாங்குவதிலும், ராமச்சந்திரன் பணம் ரயில் வேகத்தில் கரைந்து கொண்டு வந்தது.

கடைசியாக, பணம் எல்லாம் போய், யாரிடம் கைமாற்று வாங்குவது என்ற கட்டத்தில், யோசனையில் மூழ்கியிருந்த ராமச்சந்திரனுக்கு ஒரு தந்தி வந்தது. கல்யாணியின் புருஷன் அடித்திருந்தான். தனக்குச் சில நாட்களாக உடம்பு குணமில்லாமல் இருப்பதால், உடனே மறு ரயிலில் கல்யாணியையும் குழந்தைகளையும் அனுப்பும்படி அதில் கண்டிருந்தது.

நல்ல வேளை, அவளும் அவள் குழந்தைகளும் ஊர் போய்ச் சேரட்டும் என்று நினைத்தவனாய், தன் சகோதரியை 'பாக்' பண்ணி அனுப்புவதில் மும்முரமாய் இருந்தான் ராமச்சந்திரன்.

தன் கணவனைப் பார்க்கும் ஆதங்கத்தில், தங்கம் என்ன வேண்டியும் மறுத்து விட்டு அன்றிரவே கல்யாணி பயணமானாள்.

அவளையும் குழந்தைகளையும் ரயிலேற்றி விட்டு வந்த போதுதான், ராமச்சந்திரனுக்குச் சற்று வேதனையாக இருந்தது. 'தீபாவளிக்கு இருந்து விட்டுப் போவேன்' என்று வந்தவளுக்கு, போகும் போது ஒன்றும் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்று வருந்தினான். ஏதாவது ஒரு நூல் புடவையாவது வாங்கிக் கொடுத்திருக்கலாம். அது கூடச் செய்யாதது எவ்வளவு மதியீனம் என்று வருத்தப்பட்டான்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு கல்யாணியிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது.

அன்புள்ள அண்ணாவுக்கு,

நாங்கள் சௌக்கியமாக வந்து சேர்ந்தோம். உன் மாப்பிள்ளைக்கு உடம்பு சற்று அநுகூலம். கும்பகோணத்துக்கு வந்த போது, பெரிய கடைத்தெருவில், ஜவுளிக்கடை ஒன்றில் புடவை ஒன்றைப் பார்த்தேன். திரும்ப ஊருக்குப் போகும்போது, உன்னை வாங்கித் தரச் சொல்லி அதை வாங்கிக் கொண்டு போக நினைத்தேன். திடீரென்று புறப்பட்டு விட்டபடியால், அந்தப் புடவையை வாங்க முடியவில்லை. அந்தக் குறையைக் கடவுள் வேறொரு விதத்தில் நிறைவேற்றி வைத்து விட்டார் என நினைக்கிறேன்.

வருகிற அவசரத்தில், உன் மனைவியின் பெட்டியை என் பெட்டியாக நினைத்து எடுத்து வந்து விட்டேன். பெட்டியைத் திறந்து பார்த்த போதுதான் இந்தத் தவறுதல் புலப்பட்டது. நான் எந்தப் புடவையில் கருத்தைச் செலுத்தினேனோ, அதே சந்தனக் கலர்ப் புடவையும், வேறு சில சில்லறைச் சாமான்களும் அதில் இருந்தன.

"சந்தனக் கலர்ப் புடவை எனக்குப் பிடித்திருப்பதால், அதைத் திருப்பித்தர உத்தேசமில்லை. அதற்குப் பதிலாக என் பெட்டியிலுள்ள அத்தனை புடவைகளையும் தங்கத்துக்குப் பரிசாகக் கொடுத்து விட்டேன். அவற்றை உபயோகிப்பதில் அவளுக்கு ஆட்சேபம் இராதென்று நினைக்கிறேன். பெட்டியின் சாவி இத்துடன் வருகிறது.

கல்யாணி.

என்று எழுதியிருந்த கடிதத்தைப் படித்து முடித்த ராமச்சந்திரன் தங்கத்தின் கைகளைப் பற்றி, அவளைக் கரகரவென்று இழுத்துக்கொண்டு உள்ளே போய்க் கல்யாணியின் பெட்டியைத் திறந்து பார்த்தான்.

அதில் பல வர்ணங்களில், அடுக்கடுக்காய் ஐந்தாறு பட்டுப் புடவைகள் இருந்தன. மடிப்புப் பிரியாத அவற்றையும் பார்த்து, தங்கத்தையும் பார்த்தான் ராமச்சந்திரன்.

"அடி என் தங்கமே! உன் அதிர்ஷ்டத்தை என்னவென்று சொல்லுவேன்!" என்றான்.

# THE MODERN STORES

## தி மாடர்ன் ஸ்டோர்ஸ்

மில், பட்டு ஜவுளி வியாபாரிகள்

31, பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை - 5

டெலிபோன் : 8247

பூரணமாய் புதுப்பிக்கப்பட்டு யாவருக்கும் திருப்தி அளிக்கும் பல்வேறு தினுசு புதிய ஆடைகள், கண்ணைக்கவரும் டிசைன்கள், கலர் களில் தீபாவளிக்காக ஸ்பெஷலாக வந்துள்ளன.

என்றும்போல் யாவரும் ஆதரிக்கக் கோருகிறோம்.

கிளைகள் :

69-71, வடக்கு ரத வீதி,
திருநெல்வேலி டவுன்.

174/4, S. நெல்லையப்பர் ஹை ரோடு,
திருநெல்வேலி ஜங்ஷன்.




# கடவுளின் குற்றம்

ஆர். ராஜகோபாலன்

"ஐயாவுக்குக் குழந்தை பிறக்கப் போகுது; அம்மாவுக்குப் பிரமோஷன் கிடைக்கப் போகுது" என்று கத்திக் கொண்டிருந்த குடு குடுப்பைக்காரன் தன் தவறை உணர்ந்து. "அம்மாவுக்குப் பிள்ளை பிறக்கப் போகுது. ஐயாவுக்குப் பிரமோஷன் கிடைக்கப் போகுது" என்று திருத்திச் 'சரியாக'ச் சொல்லிக் கொண்டிருந்தான்.

கோயிலில் அன்று விசேஷ நாள். தேங்காய்க் காரனுக்கும் பழவியாபாரிக்கும் அதிக வரும்படி. கோவிலுக்குச் சென்று தங்கள் பாவ மூட்டையைக் கழிக்க வரும் முதியோர் ஒரு புறம்; மாமியார் தொந்தரவு இல்லாமல் கணவனுடன் பேசுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொண்டு வந்த மருமகள், பிள்ளைகள் ஒரு புறம்; காலணா கிடைத்து விட்டால் பரம தரித்திரமும் போய்விடும் என்று நினைக்கும் பிச்சைக்காரர்களும் அவர்களைக் கண்டு குலைக்கும் நாய்களும் ஒரு புறம்; கல்யாணமாவதற்குப் பகவானைத் தோத்திரம் செய்யும் பாவனையில் வரும் அநேக இளவயதினர் ஒரு புறம்—இவர்களை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தால் வேடிக்கையாக இருக்குமே என்று நினைத்துக் கடவுள் ஒரு கடை அருகில் நின்றுகொண்டு உலகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

கோயில் வாசலில் 'இடது புறமாகப் போ' என்ற பலகைகள் தொங்கின. எனவே உள்ளே போவோர் இடது புறத்தின் வழியாகச் சென்று, வலது புறத்தின் வழியாக வெளிவந்து கொண்டிருந்தனர். வலதுபுற வழியின் அருகில் பகவான் நின்று கொண்டிருந்தார். குடை ராட்டினமும், ஐஸ்கிரீமும் கடவுளை ஆகர்ஷிக்க வில்லை. ஆனால் போவோர் வருவோரின் பேச்சுத்தான் அவர் கவனத்தைக் கவர்ந்தது.

"பரீக்ஷையில் பாஸ் பண்ணுவது கடவுள் வேலையா என்ன? பாட்டி சொன்னாளே என்று தேங்காய் உடைக்கிறேனாக்கும். 'பெயி'லானால் இருக்கவே இருக்கிறது, மார்ச், செப்டம்பர், மார்ச்" என்று ஒரு காலேஜ் மாணவன் தன் சகாவிடம் அளந்து கொண்டிருந்தான். "வாடா குடு குடுப்பாண்டியிடம் போய் ஜோசியம் கேட்கலாம்" என்று மற்றவன் அவனை இழுத்துக்கொண்டு சென்றான். 'ஹூம் எனக்குத் தேங்காய் உடைப்பது அவ்வளவு கேவலமா? இருக்கட்டும். உன்னை இந்தத் தடவை பெயிலாக்கி விடுகிறேன்' என்று கடவுள் கருவினார்.

★

"ஏன்னா, பார்த்தேளோன்னோ, உங்கம்மா பாலைக் குடிச்சுட்டு, பூனை குடித்து விட்டது என்கிறாள். நான் சொன்னா உங்களுக்குக் கோவம் தான்......" என்றாள் மாமியார்மீது குற்றப் பத்திரிகை வாசிக்கும் மருமகள்! "உஸ்......போதும்......வேணும்னா வேண்டிக்கோ...'கடவுளே! ஒரு பிள்ளைக் குழந்தையைக் கொடு. அவனுக்குக் கல்யாணமானவுடனே, மருமகள் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்கிறேன்' என்று." இது கணவனின் சாந்தக் குரல். "ஆமாம். குழந்தை யிருக்கிறவனுக்குக் குழந்தை மேல் குழந்தை. ஆனால் குழந்தை வேணுங்கறவாளுக்குக் குழந்தையே கிடையாது. கடவுளுக்கும் மூளை கிடையாது" என்று எவனோ தெருவோடு சொல்லிக்கொண்டு போனான். கடவுளுக்கும் கோபம் வந்தது. "வேண்டுமென்றால் பிரம்மாவை வைவதுதானே. நானா அதற்குப்புணை" என்று கடவுள் நினைத்தார்!

"உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டுமென்றால், முதலில் அரிசி கள்ள மார்க்கெட்டில் அல்லவா வாங்கவேண்டும். ஹூம், இதற்கெல்லாம் நாமா ஜவாப்தாரி. கடவுளுக்கல்லவா கண்ணிருக்க வேண்டும்" இவ்வாறு மணமாகாத ஜோடிகள் பேசிக் கொண்டு போனார்கள். கடவுள் தன் கை விரல்களை மடக்கி நீட்டி, தனக்குக் கண் தெரிகிறதா என்று பரீட்சை செய்து பார்த்துக் கொண்டிருந்தார்!

வசவுமாரிகள் தலையைப் பிளக்க ஆரம்பித்தன. கடவுளுக்குப் பொறுக்க முடியவில்லை. தலைபாரம் அதிகமாகவே, அருகில் ஓரிடத்தில் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார். முகத்தில் கவலையின் ரேகை தென்பட்டது. மோவாக்கட்டையை உயர்த்தி மேலே பார்த்தார். மோட்டு வளையில் கவலையற்ற அப்ஸர ஸ்திரீயின் ஆனந்த நடனம் செய்யும் காட்சி வரையப் பட்டிருந்தது. சாதாரண சமயமாக யிருந்திருந்தால், அவளுடைய கலையைப்பற்றி அங்கம் அங்கமாக வர்ணித்திருப்பார். ஆனால் அச்சமயம் அச்சித்திரம் அவரைப் பரிகசிப்பது போலிருந்தது. 'கடவுள் என்று இருந்து நாம் என்ன சாதித்து விட்டோம்' என்று யோசிக்கலானார் கடவுள். கடைசியில் பொது ஜன சேவைக்குக் கிளம்புவதுதான் சரியான வழி என்று நேரே நகரத்திற்குள் நுழைந்து சென்றார்.

★

சந்து பொந்துகளிலெல்லாம் நுழைந்து வெளிவந்தார்! ஆனால் யாருக்கு எவ்விதம் உதவி புரிவது என்று தெரியவில்லை. தூரத்தில் ஒருவன் வந்து கொண்டிருந்தான்.

"ஐயா, உங்களைத்தானே ஒரு கேள்வி!" இது கடவுளின் குரல்.

அவன் முறைத்துப் பார்த்தான். கடவுளின் வேஷத்தைக் கண்டு கலங்கினானோ என்னவோ!

"உலகத்தில் மக்கள் எல்லோரும் எதனால் கஷ்டப்படுகிறார்கள்?" என்று கடவுள் தம் கேள்வியை அவனிடம் கேட்டு விட்டார்.

"கடவுள் என்று ஒருவர் இருப்பதினால் தான்" என்று காரமாகப் பதில் சொல்லி விட்டு அப்பால் நகர்ந்தான் அவன்!

கடவுளுக்குச் 'சொரேல்' என்றது. மயக்கம் வரும்போலிருந்தது. அதே சமயம் அன்றைய தினசரிப் பத்திரிகை ஒன்று அவரிடம் வந்து விழுந்தது. முதல் பக்கத்தில் எல்லாம் ஒரே யுத்தமயம்! 'இவர்கள் எல்லோரும் ஏன் யுத்தமிட வேண்டும்' என்று கடவுள் தம்மைத் தாமே கேட்டுக் கொண்டிருந்தார். இரண்டாவது பக்கத்தில், "அரிசி இல்லை" என்று கொட்டை எழுத்தில் அச்சிடப் பட்டிருந்தது. அத்துடன் ஆசிரியரின் தலையங்கம், "அரிசிப் பஞ்சம் கடவுளின் அட்டூழியம்" என்று குறிப்பிட்டிருந்தது. இவற்றை யெல்லாம் படித்த கடவுள் மயக்கம் போட்டுக் கீழே விழுந்தார்!


சூரியன் பலபலவென்று உதித்தான். கடவுள் விழுந்தபடியே கிடந்தார். அவசரமாக ஆபீஸ் செல்லும் ஒருவன் அவர்மீது ஒரு பத்திரிகையை எறிந்து எழுப்பிவிட்டுச் சென்றான். கடவுளும் பத்திரிகையைப் பார்த்தார். அதிலும் அரிசியைப் பற்றித்தான் எழுதி யிருந்தது. கடவுள் ஒரு முடிவுக்கு வந்தார். அரிசியை மந்திரத்தில் வரவழைத்து மக்களுக்கு விநியோகம் செய்வதென்று தீர்மானித்தார்!

★

சிறிது நேரத்திற்கெல்லாம் நான்கு வீதிகளிலும் நான்கு சாரியாக ஜனங்கள் 'கியூ' வரிசையில் காத்துக் கொண்டிருந்தார்கள். சின்னப் பை, பெரிய பை, சட்டைப்பை இவைகள்தான் ஜனங்களின் கையிலிருந்தன. வண்டிகளும் சைக்கிள்களும் போவதற்கு வழியின்றி, 'கியூ' வரிசைகளின் மத்தியில் நுழைந்து வட்டமிட்டு வெளியேற வேண்டியிருந்தது. கடவுள் அரிசி விநியோகித்துக் கொண்டிருந்தார். மக்கள் வாழ்த்தினர், "மகராஜனா யிரு" என்று. கடவுளுக்கும் வாழ்த்துக்களும் ஆசீர்வாதங்களும்!

கடவுளுக்கே கை ஓய்ந்து போயிற்று. கூட்டத்தைச் சமாளிக்க முடியவில்லை. மூட்டை மூட்டையாக அரிசி எங்கிருந்தோ வந்து கொண்டிருந்தது. இதன் மர்மம் அருகிலிருந்த போலீஸாருக்குக் கூடத் தெரியவில்லை! ஆனால் கடவுள் தர்மம் செய்து கொண்டே யிருந்தார். பயித்தியக்காரப் பணக்காரனோ என்று பொது ஜனங்கள் சந்தேகித்தனர். ஆனாலும் என்ன? அவர்களுக்கு வேண்டியது அரிசிதானே?





ஐந்து வயது ராமு பந்து விளையாட்டைப் பார்த்துக் கொண்டு, "அப்பா, பாரப்பா அங்கே! ஒரு பந்தைப் பிடிப்பதற்காக எவ்வளவு சண்டை! அவர்களுக் கெல்லாம் தலைக்கு ஒரு பந்தைக் கொடுத்தால் இந்தச் சண்டை இருக்காதில்லையா" என்றான்.

ஆனால் போலீஸ்காரர்கள் விடவில்லை. கள்ள மார்க்கெட்டில் அரிசி வாங்கிக் கள்ள மார்க்கெட்டை ஆதரித்ததினால், கடவுளைக் கைது செய்து கொண்டு போனார்கள்!

போலீஸாரின் உடும்புப் பிடியிலிருந்து மீறுவது பற்றியோ அல்லது கை விலங்குகளை உடைத்தெறிவது பற்றியோ அல்லது ஒரு நர மனிதனால் கைது செய்யப்பட்டதைப் பற்றியோ கடவுள் பிரலாபிக்கவில்லை. ஆனால் மக்களின் சேவை குலைந்து விட்டதைப் பற்றித்தான் அவர் வருத்தப்பட்டார். பொதுஜன சேவை கூடவா இந்தப் பூலோகத்தில் குற்றம்!

"பிரபல கள்ளமார்க்கெட்காரர் கைது" என்று கொட்டை எழுத்தில் முதல் பக்கத்தில் செய்திகள் வெளியாயின. சில பத்திரிகைகளின் விசேஷ 'ஜகப் புளுகு நிருபர்கள்' பத்தி பத்தியாக இதைப் பற்றி எழுதினார்கள். நாடு பூராவும் இச்செய்தியைப் படித்துப் பார்த்து விட்டுச் சிரிப்பதா அழுவதா என்று தெரியாமல், மக்கள் பாதி சிரித்துக் கொண்டும் பாதி அழுதுகொண்டும் இருந்தனர். ஆனால் கடவுள் ஜெயிலில் உட்கார்ந்து கொண்டு வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்!

குறிப்பிட்ட தேதியில் கடவுள் கோர்ட்டில் ஆஜராக வேண்டியிருந்தது. கோர்ட்டில் கூட்டம் நெறித்துக் கொண்டிருந்தது. பத்திரிகை நிருபர்களுக்காகத் தனியான இடம் அமைக்கப்பட்டிருந்தது. பத்திரிகைகளின் புகைப்பட நிபுணர்கள் தங்கள் காமிராவுடன் தயாராக இருந்தனர். கைதி, கூண்டில் அடைக்கப்பட்டார்! அவரிடம் அரிசி வாங்கிக் கொண்ட போலீஸ்காரன்கூட எதிர்க் கட்சி சாட்சியாக இருந்தான்! கடவுளின் தாராள மனதை நினைத்துப் பார்த்து, சில நல்ல ஆத்மாக்கள் 'கடவுளை நம்பினோர் கைவிடப்படார்' என்று சொன்னார்கள். ஆனால் நம் கடவுள் எந்தக் கடவுளை நம்புவது?

"உம் பெயரென்ன?" என்று கேட்டார் நீதிபதி.

"கடவுள்" கைதியின் பதில் இது. (சிரிப்பு)

"உம் தகப்பனார் பெயர் என்ன?" கோர்ட்டிலிருந்து ஒரு குரல்.

"தெரியாது" மற்றொரு குரல்.

"நீர் அரிசி விநியோகம் செய்தது உண்மை தானா?" இது நீதிபதியின் கேள்வி.

"ஆம்!" கைதியின் சரணடைந்த பதில் இது.

"நீர் அரிசியை எங்கிருந்து வாங்கினீர்? உமக்கு அவ்வளவு அரிசி எங்கிருந்து கிடைத்தது?"

"அரிசியை நான் மந்திரத்தால் வரவழைத்தேன்" என்றார் கடவுள். உடனே ஒரு பலத்த சிரிப்பு நாலு திசையிலிருந்தும் வந்தது.

"அரிசியை அப்படி உண்டாக்க நீர் என்ன கடவுளா?" என்று கேட்டார் நீதிபதி.

"ஆம். நான்தான் மூவுலகும் படைத்த கடவுள்!" (பலத்த சிரிப்பு. கரகோஷம்)

நீதிபதி, "அமைதி அமைதி" என்று கத்தினார். பிறகு கள்ள மார்க்கெட்டை ஆதரித்த குற்றத்திற்காகவும், கோர்ட்டை அவமதித்ததற்காகவும் இ. பி. கோவில் குறிப்பிடப்படாத செக்ஷன்படி ஆறு மாத கடுங் காவலும், தவறினால் மூன்று மாத சுக சித்திரையும் உள்ள தண்டனையை விதித்தார் நீதிபதி. ஆனால் கடவுளுக்கோ பிறர் தம்மைக் கடவுள் என்று புரிந்து கொள்ள முடியவே இல்லையே என்ற வருத்தம்தான் இருந்தது. 'கடவுள்' என்று சொன்னால்கூட மக்கள் தம்மைப் பைத்தியம் என்று நினைக்கிறார்களே என்று மனமொடிந்து போனார்! எனினும் சிறைத் தண்டனை அனுபவிக்கத்தான் வேண்டியிருந்தது.

இரண்டாவது நாள் சிறையில் அரசாங்க சேவகன் அவர் எதிரில் வந்துநின்று 'சல்யூட்' அடித்தான். தாமும் அப்படிச் 'சல்யூட்' அடிக்க வேண்டுமா என்று கடவுள் யோசித்தார். அதற்குள்ளாகவே சேவகன் ஒரு கடிதத்தை அவரிடம் கொடுத்தான். அந்தக் கடிதத்தில் கண்டிருந்ததாவது:

"தவறுதலாகக் கள்ளமார்க்கெட்காரர் என்று கருதி உங்களைச் சிறையிட்டதற்காக அரசாங்கத்தின் சார்பில் மன்னிப்புக் கோருகிறேன். தவிர உலகிலேயே இல்லாத அவ்வளவு அரிசி விளைச்சலைக் காண்பித்ததற்காக ரூபாய் 5000த்தை முதல் பரிசாக உங்களுக்கு அளிப்பதோடு, உங்களுக்குக் "கடவுள்" என்ற பட்டப் பெயரையும் கொடுக்கிறோம். தவிர உங்களை விடுதலை செய்து, உங்களைச் சிறைக்கனுப்பிய நீதிபதியை ஜெயிலுக் கனுப்புகிறோம். இப்படிக்கு,

.........................

விடுதலையான கடவுள் நேராகத் தம் கோவிலுக்குப் போய்ச் சரணமடைந்தார். பரிசையும் வாங்க வரவில்லை. சில பத்திரிகைகள் 'கடவுளுக்கு முதற் பரிசு' என்று எகத்தாளமாகக் குறிப்பிட்டன. ஆனால் கடவுள் தாம் திரும்பி வந்ததைப் பற்றிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார். சில தினப் பத்திரிகைகள் கடவுளை வாழ்த்தின. ஆனால் கடவுள் தாம் இழைத்த தவறின்மீது வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார்.

# மத்திய கேந்திரம்

ஜெயமணி

## பாலஸ்தீனம்

மத்திய கேந்திர நாடுகளுக்குள் பாலஸ்தீனம் உருவத்தில் மிகச் சிறியதுதான். இருந்தாலும் அதன் கீர்த்தி பெரியது; அதன் சரித்திரம் மிகவும் பழமையானது.

பாலஸ்தீனத்துக்குப் "புண்ணிய பூமி" என்ற ஒரு பெயரும் வழங்கப்படுகிறது. யூதர்கள், கிறிஸ்துவர்கள், முஸ்லிம்கள் இந்த மூன்று மதத்தினரும் பாலஸ்தீனத்தைப் புனித ஸ்தலமாகக் கருதுவதே அந்தப் பெயர் ஏற்பட்டதற்குக் காரணம்.

கிறிஸ்துவ சகாப்தம் ஆரம்பமாவதற்கு ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்து பாலஸ்தீனம் யூதர்களுக்குத் தாய் நாடாக இருந்தது. கிறிஸ்து பிறந்த எழுபது வருஷங்களுக்குப் பின் ரோமியர்கள் பாலஸ்தீனத்தின் மீது படையெடுத்தார்கள். யூதர்கள் ராஜ்யத்தை அழித்து விட்டுப் பாலஸ்தீனத்தைத் தங்களுடைய சாம்ராஜ்யத்தின் ஒரு மாகாணமாகச் செய்தார்கள்.

பிறகு ஆறாவது நூற்றாண்டில் பாலஸ்தீனத்தில் ரோமியர் ஆதிக்கம் மறைந்து முஸ்லிம்களின் ஆதிக்கம் ஏற்பட்டது.

பாலஸ்தீனம் முஸ்லிம்களின் ஆதிக்கத்தில் இருந்தபோதுதான் அங்கு உலகமே கண்டும் கேட்டும் இராத மதப்போர் நிகழ்ந்தது. ஆயிரத்து நூறாம் ஆண்டிலிருந்து ஆயிரத்து முன்னூறாம் ஆண்டு வரையில், அதாவது இருநூறு வருஷ காலம் மேற்படி மதப்போர் நடந்ததெனில் அதன் உக்கிரத்தை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம்.

எந்தப் பிரதேசத்தில் ஏசுநாதர் பிறந்தாரோ, எந்தப் பிரதேசத்தில் அவர் மறைந்தாரோ, அந்த இடத்தில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துவதைக் கிறிஸ்துவர்களால் சகிக்க முடியவில்லை. அங்கு உலக சரித்திரத்திலேயே மிகவும் கோரமான மதப்போர் ஆரம்பமானதற்குக் காரணம் அதுதான்.

ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த கிறிஸ்துவ நாடுகள் எல்லாம் அந்தப் போரில் கலந்து கொண்டன.

அந்தப் போர் மத யுத்தம் என்றே குறிப்பிடப்படுகிறதெனினும், அதில் கலந்து கொண்டவர்கள் எல்லோரும் மத வெறி காரணமாகவே கலந்து கொண்டார்கள் என்று சொல்லுவதற்கில்லை. சிலர் மண்ணாசை காரணமாக அந்தப் போரில் ஈடுபட்டார்கள்; வேறு சிலர் போர்க்களத்தில் தங்களுடைய வீர பராக்கிரமங்களைக் காட்டிப் புகழ் பெற வேண்டும் என்று அதில் கலந்து கொண்டார்கள்; மற்றும் சிலர் தங்களுக்குப் புதிய பிரதேசங்கள் கிடைத்தால் அதன் பயனாகத் தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்ளலாம் என்று நினைத்தார்கள்; தண்டனைக்குப் பயந்து கொண்டு அந்தப் போரில் ஈடுபட்ட குற்றவாளிகளும் உண்டு!

இவ்வாறாக, பல்வேறு நோக்கம் கொண்டவர்கள் தாங்கள் மதப்போரில் ஈடுபட்டவர்கள் என்பதற்கு அடையாளமாகச் சிலுவையைப் பட்டயமாகச் சூட்டிக் கொண்டு போர் புரிந்தார்கள்.

மத வெறி உபதேசம் காரணமாகக் குழந்தைகள் கூட அந்தப் போரில் கலந்து கொண்டதாகக் கதைகள் வெளியாயின.

இருநூறு வருஷங்கள் வரையில் நடந்த மேற்படி மதப் போரினால் ஐரோப்பியர்கள் யுத்தத்தின் நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டார்கள். ஆனால் இறுதியில் அவர்கள் வெற்றி பெறவில்லை. அவர்களால் பாலஸ்தீனத்திலிருந்து முஸ்லிம்களின் ஆதிக்கத்தைச் சிதைக்க முடியவில்லை.

* *

பின்னர் 1516-ம் வருஷத்திலிருந்து 1917 வரையில் பாலஸ்தீனம் துருக்கி சாம்ராஜ்யத்தின் ஒரு பாகமாக இருந்து வந்தது.

முதலாவது உலக மகாயுத்தத்தின் போது பிரிட்டிஷ் துருப்புகள் பாலஸ்தீனத்திலிருந்து துருக்கியர்களை விரட்டி விட்டன.

1922-ம் ஆண்டில் பிரிட்டன் பாலஸ்தீனத்தின் நிர்வாகத்தைத் தன் வசம் எடுத்துக் கொண்டது. பாலஸ்தீனம் பிரிட்டனின் மேற்பார்வையில் இருந்து வர வேண்டும் என்பதை அப்போது சர்வதேச சங்கமும் அங்கீகரித்தது.

அதற்கிணங்க பாலஸ்தீன சர்க்கார் தலைவராக ஒரு பிரிட்டிஷ் ஹை கமிஷனர் நியமிக்கப் பட்டார். எனினும் பாலஸ்தீனத்தில் இருந்த யூதர்கள் மாத்திரம் மேற்படி சர்க்காருடன் ஒத்துழைக்க மறுத்து, தங்கள் சமூகத்துக்கு மாத்திரம் ஒரு தனி 'சர்க்காரை' அமைத்துக் கொண்டார்கள்.


எனவே யூதர்களைச் சமாதானப் படுத்துவதற்காக அப்போது பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரியாக இருந்த ஆர்தர் ஜேம்ஸ் பால்பர் பிரிட்டிஷ் சர்க்கார் சார்பில் ஒரு பிரகடனம் விடுத்தார். 'பாலஸ்தீனம் யூதர்களின் தாயகமாக இருக்க வேண்டும்' என்பதுதான் அவர் விடுத்த பிரகடனமாகும்.

தங்களுக்கென்று சொந்த நாடு எதுவுமின்றிப் பல நூற்றாண்டுகளாகப் பரிதவித்துக் கொண்டிருந்த யூதர்களுக்கு, பால்பர் பிரகடனம் ஒரு வரப்பிரசாதமாகத் தோன்றியது. உடனே உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்தும் லட்சக்கணக்கான யூதர்கள் பாலஸ்தீனத்தில் வந்து குடியேறினார்கள்.

யூதர்கள் கஷ்டம் அத்துடன் தீர்ந்து விடவில்லை. அந்தப் பிரகடனத்தை மத்திய கேந்திரத்தைச் சேர்ந்த அரபு நாடுகள் எல்லாம் வெகு கடுமையாக எதிர்த்தன. மிகுந்த செல்வாக்குள்ள அரபுத் தலைவர்களும் எதிர்த்தார்கள். யூதர்கள் அடங்கிய பாலஸ்தீனம் அராபியர்களின் சுதந்திரத்துக்கு ஆபத்தை விளைவிக்கும் என்று அவர்கள் வாதித்தார்கள்.

பால்பர் பிரகடனம் பொய்த்துப் போகும்படி செய்வதற்காக அராபியர்களின் சங்கமும் தேசிய இயக்கமும் ஆரம்பமாயின. பாலஸ்தீனத்தில் அராபியர்களுக்கும் யூதர்களுக்கும் அடிக்கடி கோரமான கலகங்கள் ஏற்பட்டன. 1936 லிருந்து 1939-ம் வருஷம் வரையில் அந்த நாட்டில் கொடிய உள் நாட்டுச் சண்டைகள் நடக்கலாயின.

இச்சந்தர்ப்பத்தில் இரண்டாவது உலக மகா யுத்தம் மூண்டதால் அராபியர்களும், யூதர்களும் தங்களிடையே உள்ள பகையை மறந்து, பொதுவான எதிரியான நாஜியர்களின் படையெடுப்பைத் தடுத்து நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.




அப்போதும்கூட, பல அராபியத் தலைவர்கள் ஜெர்மனி, இத்தாலியிடமே அநுதாபம் கொண்டனர். யுத்தத்தில் அந்த நாடுகளே வெற்றிபெறும் என்று நினைத்தனர்.

* * *

இரண்டாவது உலக மகாயுத்தம் முடிந்தது. எனினும் யூதர்களுக்குப் பிரிட்டிஷ் சர்க்கார் அளித்த வாக்குறுதி நிறைவேறவில்லை. மேற்படி மகாயுத்தம் காரணமாக யூதர்கள் விஷயத்தில் பிரிட்டிஷாரின் கொள்கையும் மாறியது. மத்திய கேந்திரத்தில் சக்தியும் செல்வாக்கும் உள்ள அரபு நாடுகளை விரோதித்துக்கொள்ள பிரிட்டன் விரும்பவில்லை.

எனவே, யூதர்கள் பாலஸ்தீனத்திலே கூட்டம் கூட்டமாக வந்து குடியேறுவதைப் பிரிட்டிஷார் கட்டுப்படுத்த முற்பட்டார்கள். எனினும் இரகசியமாக யூதர்கள் குடியேறுவதைத் தடுப்பது பிரிட்டிஷாருக்கு மிகவும் கஷ்டமாகி விட்டது.

அதன் விளைவாகப் பெரும் கலகங்கள் ஏற்பட்டன. பாலஸ்தீனத் தெருக்களில் உதிர வெள்ளம் ஓடியது. ஏராளமான பிரிட்டிஷாரும் பலியாயினர். இரகசியமாகக் குடியேறிய நூற்றுக் கணக்கான யூதர்களைப் பிரிட்டிஷார் கைது செய்தார்கள்.

ஏற்கெனவே பாலஸ்தீனத்தில் அராபியர்களும் யூதர்களும் அடித்துக் கொண்டார்கள். ஆனால் இரண்டாவது மகா யுத்தத்துக்குப் பின் பிரிட்டிஷாரும் யூதர்களும் அடித்துக் கொள்ள முற்பட்டனர்.

இறுதியில், யூதர்கள் விஷயத்தில் தங்களுடைய கொள்கையை மறுபடியும் மாற்றிக் கொண்டாலன்றி, பாலஸ்தீனத்தில் அமைதி ஏற்படுவதற்கு வழியில்லை என்பதைப் பிரிட்டிஷார் உணர்ந்தனர். அவர்களின் கொள்கை யூதர்களுக்குச் சாதகமாக இருக்குமாயின், பிரிட்டனுக்கு அரபு நாடுகளின் விரோதம் ஏற்பட்டுவிடும் அல்லவா?

இந்தத் தர்மசங்கடமான நிலைமையிலிருந்து தப்புவதற்குக் கடைசியாக பிரிட்டிஷார் ஒரு வழியைக் கண்டு பிடித்தனர். பாலஸ்தீன சர்க்கார் நிர்வாக அதிகாரத்தைக் கைவிட்டு அந்த நாட்டிலிருந்து வெளியேறி விடுவது என்பதுதான் பிரிட்டிஷார் கண்டுபிடித்த அற்புதமான வழியாகும்.

அதற்கிணங்க, 1947-ம் வருஷம் பிரிட்டிஷார் பாலஸ்தீனப் பிரச்னையை ஐக்கிய நாடுகள் சபையின் பொறுப்பில் ஒப்படைத்து விட்டு. அந்த நாட்டிலிருந்து வெளியேறினார்கள்.

பாலஸ்தீனத்தை யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் பிரித்துக் கொடுக்கும் விஷயமாக அந்தச் சபையில் பல மாதங்கள் வரையில் வாய்ப்போர் நடந்தது. பாலஸ்தீனப் பிரிவினையை அராபியர்கள் வெகு கடுமையாக எதிர்த்தார்கள். ஆயினும், கடைசியில் பாலஸ்தீனத்தைப் பிரித்தே தீருவது என்று ஐக்கிய நாடுகள் சபை முடிவு செய்தது.

# வாழ்க குடியாட்சி!

மூலக் கதை: குஜராத்தி

எழுதியவர்: ஸ்ரீ சூனிலால் மதியா :: மொழிபெயர்ப்பு: பி. எஸ். மணி

அன்றிரவு யாதேயக் குடியரசின் தலைநகரமான புரு கிராமத்திலுள்ள அன்ன மாளிகை அமர்க்களப் பட்டது. அழகிய அன்னத்தின் வடிவிலே அம் மாளிகை நிர்மாணிக்கப் பட்டதால் அதற்கு அன்ன மாளிகை என்ற பெயர் வந்தது போலும்! யமுனை நதிக்கும் சாம்பல் நதிக்கும் நடுவே கம்பீரமாக எழுந்து நிற்கும் அம்மாளிகைக்கு ஈடு இணையான மாளிகை யாதேய நாட்டிலேயே கிடையாது.

அன்ன மாளிகையின் அரங்க மேடையில் சித்திராங்கத நாடகம் சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. நாடகத்தை ரசிக்க விரும்பாத மக்களில் சிலர் மாளிகையின் மற்றொரு மண்டபத்திலுள்ள நாட்டிய அரங்கில் கூடி நடனம் ஆடத் தொடங்கினார்கள். அவர்களுடைய ஆடலும் பாடலும் அரங்க மேடையின் அற்புதத் தோற்றமும் கண்களைப் பறித்தன. அந்த நாட்டிய மண்டபம் முழுதும் பெரிய பெரிய விளக்குகள் அலங்கரித்து அம் மண்டபத்தையே ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கச் செய்தன. அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த அந்த மண்டபத்தின் நெடிதுயர்ந்த சுவர்களிலே பல அழகிய வர்ணங்களில் காதல் காட்சிகள் பெரிய அளவில் தீட்டப்பட்டிருந்தன.

கண்ணைக் கவரும்படி ஜோடித்திருந்த அரங்க மேடையும், அரங்கில் ஆடிய ஆட்டக்காரர்களின் தோற்றமும் அன்றிரவு தனிச் சோபையுடன் விளங்கியதற்குக் காரணம் இருந்தது. யாதேய குடியரசின் பிரதம தளபதியும், அந் நாட்டின் தலைவருடைய புதல்வனுமான சுபாஹுவுக்கும் புருகிராம் நகரத்துப் பிரபல வணிகரின் புதல்வியான ஜயனந்தாவுக்கும் கோலாகலமாகத் திருமணம் நடந்தது. திருமணத்தை யொட்டிப் புருகிராம் நகர மக்கள் ஏற்படுத்திய நாட்டியத் திருவிழாதான் அப்படி அமர்க்களப்பட்டது.

அணங்குகளின் நாட்டியத்திலோ அரங்க மேடையில் நிகழ்ந்த நாடகத்திலோ சிறிதும் சிரத்தையில்லாதவர்கள் அம்மாளிகையின் பலகணிகளில் அமர்ந்து பானங்கள் அருந்துவதிலும் வேடிக்கையாகப் பேசுவதிலும் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களோடு கலந்து கொண்டு களிப்படைய விரும்பாத மற்றவர்கள் அன்ன மாளிகையின் தலை வாசலில் அங்கு மிங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள்.

மாளிகையின் தலை வாசலில் உலாவிக் கொண்டிருந்தவர்களே அந்தச் செய்தியை உரக்கக் கத்தி அறிவித்தார்கள்.

"நம் குடியரசுத் தலைவர் பத்ரஸ்வா வருகிறார்!"

பலகணிகளில் அமர்ந்து பானங்களருந்துவதிலும் வேடிக்கைப் பேச்சிலும் மூழ்கியிருந்தவர்கள் அந்தச் செய்தியைச் சிறிதும் நம்பவேயில்லை.

"அப்படி யொன்றும் இருக்காது. நமது நாட்டின் தலைவர் ஒன்றும் இந்த வேளையில் இங்கே வர மாட்டார்" என்றார்கள்.

"வேறு யாராவது இருக்கும்!" என்றார்கள் அங்கு கூடியிருந்தவர்களில் இன்னும் சிலர்.

தலைவாசலில் நின்று கொண்டிருந்தவர்கள் மறுபடியும் அந்தச் செய்தியை ஊர்ஜிதம் செய்தார்கள்.

"இல்லை, இல்லை! நமது நாட்டின் தலைவரே வருகிறார். இதோ பாருங்கள், அவருடைய மயில் பல்லக்கு வருவதை!" என்று அவர்கள் கூவி அறிவித்தார்கள்.

யாதேய நாட்டில் ஜனாதிபதி பத்ரஸ்வாவைத் தவிர வேறு யாரும் மயில் வடிவான பல்லக்கை உபயோகிப்பதில்லை. ஏன் லட்சாதிபதிகளும், வியாபாரிகளும், இளவரசர்களுங்கூட மயில் பல்லக்கை உபயோகிக்கத் தயங்குவார்கள்.

"ஒரு வேளை அவர் தவளகிரி மலையிலுள்ள மேக புத்தரைத் தரிசிப்பதற்குச் செல்லுகிறாரோ, என்னமோ!" என்று கூட்டத்தில் ஒருவன் தன் எண்ணத்தை வெளியிட்டான்.

"இல்லவே இல்லை! பல்லக்குத் தாங்கிகள் அன்ன மாளிகையை நோக்கித் தங்கள் மயில் பல்லக்கைத் திருப்பி விட்டார்கள். இதோ பாருங்கள்! பல்லக்கும் மாளிகையின் தலைவாசலுக்கு வந்துவிட்டது......!"

"'இதோ நம் மதிப்புக்குரிய தலைவர் வருகிறார்!' 'தலைவர் பத்ரஸ்வா இதோ வருகிறார்'" என்ற கோஷம் அன்ன மாளிகை முழுதும் எதிரொலித்து, நாட்டிய மேடையையும், நாடக அரங்கையும் சென்றடைந்தது.

அரங்க மேடையில் நடந்து கொண்டிருந்த நாடகம் அப்படியே பாதியில் நின்றுவிட்டது. இசைக் கருவிகள் எழுப்பிய இன்னிசைகள் ஓய்ந்தன. மங்கையர் பாடிய மதுர கீதங்கள் நின்றன. ஆடலும் பாடலும், கேளியும், சிரிப்பும் சடக்கென்று நின்று ஆழ்ந்த நிசப்தம் நிலவத் தொடங்கியது. ஆம்! அன்ன மாளிகைக்குக் குடியரசின் தலைவர் பத்ரஸ்வா வருவது மிகவும் அரிய நிகழ்ச்சியல்லவா! இருபது வருஷங்களுக்கு முன்பு ஒரு நாள் நடு இரவில் பக்தா நாட்டிலிருந்து யாரோ ஒரு ஒற்றன் அந்த மாளிகையில் நுழைந்து விட்டான் என்ற செய்தியறிந்து அதை விசாரிப்பதற்காக வந்தார். அதற்குப் பிறகு அவர் அந்த அன்ன மாளிகையினுள் அடியெடுத்து வைக்கவில்லை. பல வருஷங்களுக்குப் பிறகு திடீரென்று அவர் இன்று வந்தது பலவகைக் குழப்பங்களுக்கும் காரணமாயிருந்தது.

அன்றைய நாட்டியத் திருவிழாவுக்குக் காரணஸ்தர்களான சுபாஹுவும் ஜயனந்தாவும் மதிப்புக்குரிய தந்தை வந்திருக்கிறார் என்ற செய்தியைக் கேட்டறிந்து அவரை வரவேற்பதற்காக வெளியே வந்தார்கள்.

மயில் பல்லக்கு அன்ன மாளிகையின் முன் வாசலில் வந்து இறங்கியது. அடுத்த கணம் பத்ரஸ்வாவின் வெள்ளிப் பாதரக்ஷைகள் அவர் சலவைப் படிகளில் ஏறும் பொழுது ஒலிப்பது கேட்கத் தொடங்கியது. நூற்றுக் கணக்கான வாலிபர்களும் இளம் பெண்களும் நிறைந்த அம்மாளிகையில் ஆழ்ந்த நிச்சப்தம் நிலவியது. அந்த ஆழ்ந்த அமைதியில் அங்கு நின்ற ஒவ்வொருவருடைய



இருதயத்திலும் படியேறி வரும் பாதரக்ஷைகளின் 'டக் டக்' என்ற ஒலி எதிரொலித்தது.

வனப்பும், திண்மையும் மிகுந்த தலைவர் பத்ரஸ்வா மாளிகையின் உள் மண்டபத்தில் வந்து நின்றார். வெண் பட்டாடை யணிந்து நிற்கும் அவருடைய கம்பீரத் தோற்றமும், ஒளி வீசும் முகமும், வெள்ளியைப் போன்ற ஒளி வீசும் நரைத்த தலை மயிரும் அவரிடம் யாருமே மதிப்பும், மரியாதையும் கொடுக்கச் செய்தன. களியாட்டக்காரர்கள் அப்படியே பேச்சு மூச்சற்று நின்ற நிலையில் இருந்தார்கள்.

"மதிப்புக்குரிய குடி மக்களே! ஒரே ஆடலிலும் பாடலிலும், களியாட்டத்திலும் மூழ்கியிருக்கும் உங்களுக்கு இடையூறு விளைத்தமைக்கு மன்னிக்க வேண்டும்" என்றார் அவர்.

"என் அருமை மக்களே! உங்கள் பாட்டுக்கும் கூத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய சமயம் வந்திருக்கிறது. உடனே அவரவர் இல்லங்களுக்குச் சென்று உறையில் உறங்கிக் கிடக்கும் ஆயுதங்களின் மீதுள்ள தூசிகளைத் தட்டுங்கள். ஆம்! இது உங்களுக்குக் கடுமையாகத் தோன்றும். ஆனால் பேராபத்துக்கள் சூழ்ந்த இந்நேரத்தில் நாம் ஒவ்வொருவருடைய பொறுப்பையும் தெரிந்து கொள்ள வேண்டியது மிக அவசியம். யுத்த மேகங்கள் நம் குடியரசின் மீது மூடப் பார்க்கின்றன. நம் நாட்டுக்கு என்ன ஆபத்து நேர்ந்திருக்கிறது என்பதை இன்று நடு இரவுக்குப் பிறகு தெரிவிக்கிறேன். குடியரசின் சபை இன்றிரவு கூடுவதற்கு ஏற்பாடாகி யிருக்கிறது. அந்த நேரத்துக்குள் நம் மதிப்புக்குரிய மேக புத்தரின் ஆலோசனையைக் கேட்பதற்காகத் தவளகிரிக்குச் செல்கிறேன். அக்ர டோகா, காண்டில்யா, பித்ரு தாகா முதலிய அண்டையக் குடியரசு நாடுகளின் பிரதிநிதிகளை அழைத்து வர ஒட்டக தூதர்கள் விரைந்து சென்றிருக்கின்றனர்.

"கேளிக்கைக்கு இருப்பிடமாக இருக்கும் இந்த அன்ன மாளிகை இன்றிலிருந்து வீரர்கள் தங்கும் பாசறையாக மாற வேண்டும். யாதேய வாலிபர்கள் வீரப் போர் புரிய மார்தட்டி எழ வேண்டும். இளம் பெண்களுக்குக் கூட வில்வித்தையிலும் காயம்பட்ட வீரர்களுக்குப் பணிவிடை புரிவதற்கும் பயிற்சியளிக்க வேண்டும். இப்பொழுதே வில்லை நாணேற்றித் தயாரா யிருங்கள். மூலையில் கேட்பாரற்றுக் கிடக்கும் கிரீடங்களை இப்பொழுதே பள பளப்பாக மின்னச் செய்து அணியுங்கள். குதிரைகளுக்கு உணவு அளித்துப் போஷித்துப் போருக்குத் தயாராகுங்கள். யாதேய நாட்டார் கேளிக்கைகளில் மட்டுமல்ல; யுத்தக் கலையிலும் தேர்ந்தவர்கள் என்பதை நம் விரோதிகள் அறியும்படி செய்யுங்கள்!"

இவ்வாறு கூறிவிட்டுத் தலைவர் பத்ரஸ்வா விடுவிடென்று தம் மயில் பல்லக்குக்குச் சென்று ஏறிக் கொண்டார். பல்லக்கு தவளகிரியை நோக்கி விரைந்தது.

✶

தலைவர் பத்ரஸ்வா அங்கிருந்து போன பிறகும் அம்மாளிகையில் குழுமியிருந்த வாலிபர்களும் பெண்களும் பேசும் சக்தியிழந்து திகைத்துப் போய் நின்றனர். ஆம்! அவர்கள் நாட்டின் மீது தோன்றியுள்ள பேரபாயங்களே அவர்களைத் திகைத்துத் திக்கு முக்காடும்படி செய்து விட்டது.

யாதேயக் குடியரசின்மீது படை யெடுத்து வருபவர்கள் மண்ணாசை மிகுந்த குப்தர்கள்தான் என்று தளபதி சுபாஹு தீர்மானித்துக் கொண்டான். ஏனெனில் யாதேயர்களுக்கும் குப்தர்களுக்கும் நெடுங்காலமாகத் தகராறுகள் இருந்து வந்தன. நாட்டை விஸ்தரிக்க வேண்டும் என்ற பேராசை பிடித்து அலைந்தார்கள் குப்தர்கள்.

சுபாஹுவின் முகத்தில் பீதியும் கலக்கமும் தோன்றியது. நிலா மதியத்தை ஒத்த ஜயனந்தாவின் மலர்ந்த முகத்தில் கூட என்றும் கண்டிராத வியப்பும் ஐயமும் ஏற்பட்டன.

இதற்குள் தூரத்தில் முரசொலி கேட்டது. நகர அலுவலகத்தைச் சேர்ந்த ஒருவன்தான் முரசடித்துக் கொண்டே வந்தான். சிறிது நேரம் கழித்துக் கீழ்க்கண்ட செய்தியை அறிவித்தான்:

"இன்று நடு இரவு குடியரசு சபை சபா மண்டபத்தில் கூடப் போகிறது. அதனால் நகரத்திலுள்ள சபைப் பிரதிநிதிகள் ஒருவரும் தலைநகரத்தை விட்டுப் போக வேண்டாம்."

தலைவர் பத்ரஸ்வாவின் மயில் பல்லக்கு தவளகிரியின் மூங்கில் நந்தவனத்தில் நுழைந்தபோது மதிப்புக்குரிய மேகபுத்தரும் அவருடைய பௌத்த சீடர்களும் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்தார்கள். ஜனபதி பத்ரஸ்வா மேகபுத்தரின் வருகைக்காக புத்த விஹாரத்தின் வாசலிலேயே காத்துக்கொண்டிருந்தார்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மேகபுத்தர் புனித சந்நியாசிகளும், சங்கப் பெண்களும் 'பரி நிர்வாண—சுத்த' என்ற சூத்திரத்திலிருந்து சில பாடல்களைப் பாடிக்கொண்டு வர விஹாரத்தின் வாசலுக்கு வந்தார். அவர் யாதேய நாட்டின் தலைவருடைய பல்லக்கைப் பார்த்ததும் உடனே பேசத் தொடங்கினார்.

"ஓஹோ! பத்ரஸ்வாவா! தாங்கள் எவ்வளவு நேரமாக இங்கே காத்துக்கொண்டிருக்கிறீர்கள்! நீங்கள் ஏன் எங்களுடன் பிரார்த்தனையில் கலந்து கொள்ளவில்லை! அரசியல் வாழ்வில் புகுந்த உங்களுக்குப் பிரார்த்தனையில் சிறிதும் நம்பிக்கை யில்லையா! இல்லை, நம்பிக்கை உண்டா!" என்று கேட்டார் மேக புத்தர்.

"பிரார்த்தனை யில்லாமல் அரசியல் எங்கேயாவது நடத்த முடியுமா!" என்று பத்ரஸ்வா கேட்டுவிட்டுப் பின், "என் மனம் இன்று சோர்ந்து போய்ச் சரியான நிலையில் இல்லை. இந்நிலையில் எனது உள்ளத்தைப் 'பரி நிர்வாண-சுத்த'த்தில் ஈடுபடுத்த முடியவில்லை" என்றார்.

தலைவர் பத்ரஸ்வாவின் சுருக்கமான பேச்சு புத்தி கூர்மையும், அறிவும் மிகுந்த பௌத்த சந்நியாசி மேகபுத்தருக்குச் சகல விதமான பொருளையும் விளக்கி விட்டது.

"ஏன்! பாடலிபுரத்தின் பேரரசனு தங்கள் மனத்துக்கு இத்தகைய கவலையையும் துயரத்தையும் அளித்திருப்பவன்!" என்று மேக புத்தர் கேட்டுவிட்டுப் பின் பலகை ஒன்றில் அமர்ந்தார்.

"வணக்கத்துக்குரிய குருவே! எனது வருத்தத்துக்குக் காரணம் தங்களுக்கு எப்படித் தெரிந்தது!" என்று வியப்புடன் வினவினார் யாதேயக் குடியரசின் தலைவர்.

"வனத்திலே வாழும் சந்நியாசிகளாகிய நாங்கள் வேந்தர்களைப்போல் ஒற்றர்களை நாலா திசைகளிலும் அனுப்புவதில்லை என்று தங்களுக்குத் தெரியுமல்லவா! இருந்தாலும் நாங்கள் இந்த லௌகிக உலகிலேயே உண்மையையும், தர்மத்தையும், தெய்வ பக்தியையும் பரப்ப வேண்டியிருப்பதால் உலக விஷயங்களைப் பற்றியும் அறிய வேண்டியிருக்கிறது."

"ஆம்! தங்கள் பெருமையை என்னவென்று சொல்ல! தங்கள் பெருமையே என்னைத் தங்களிடம் வரும்படி பணித்தது. குடியரசு சபை இன்று நடு இரவு கூடுவதற்கு ஏற்பாடாகியிருக்கிறது. அதற்கு முன் தங்களுடைய ஆலோசனையைத் தெரிந்து கொள்ளுவதற்காகவே வந்தேன்."

"என்ன விஷயம்! கொஞ்சம் விவரமாகவே சொல்லுங்கள்" என்றார் மேகபுத்தர்.

"குருவே! குப்தர்களின் ஆசைக்கு எல்லையோ, வரம்போ இல்லை. அவர்கள் தங்களுடைய ஆயுத பலத்தினால் இராஜ்யத்தை விஸ்தரித்து விடலாம் என்று எண்ணுகிறார்கள். யமுனா தீரத்திலிருந்து பிரம்ம புத்ரா நதி வரையும், இமயமலையிலிருந்து கிருஷ்ணா நதி வரையும் அவர்களுடைய ராஜ்யம் விரிந்து பரந்து கிடக்கிறது. அப்படியிருந்தும் அவர்களுடைய மண்ணாசை இன்னும் தணியவில்லை" என்றார் யாதேய நாட்டின் ஜனாதிபதி.


"அதுதான் மண்ணாசையின் தன்மை. அவர்களைச் சும்மா யிருக்க விடாது. அது குப்தர்களின் தவறல்ல! ஆசைதான் அவர்களை அப்படி விடாமல் ஆட்டி வைக்கிறது!"

"ஆமாம்! அவர்களுடைய ஆசை இப்பொழுது யாதேயக் குடியரசின்மீது திரும்பியிருக்கிறது போலும்! இன்று பாடலிபுரத்திலிருந்து பூர்ச்ச இலையில் எழுதிய குப்த அரசரின் திருபம் நமக்கு வந்து சேர்ந்தது. அதில் 'ஐம்பது கோடி பொன் நாணயங்கள் திறையாகச் செலுத்த வேண்டும். அல்லது யாதேய வாலிபர்களின் தலைகளைச் செலுத்தத் தயாராயிருக்க வேண்டும்' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது."

"என்ன செய்வது! மண்ணாசை, பெண்ணாசை வலைகளில் வீழ்ந்த மக்கள் என்றும் மீள்வதில்லை" என்று கூறி லேசாகச் சிரித்து விட்டு, "அத்தகைய உலகப் பற்றுக்களை முற்றும் துறந்தாலன்றி, அதை வெல்வதென்பது இயலாத காரியம்" என்று முடித்தார் மேகபுத்தர்.

"குப்தர்களின் அந்த வேண்டுகோளுக்குப் பின்னாலும் மற்றொரு ஆசை ஒளிந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது குப்த அரசர் சந்திரகுப்தர் க்ஷத்திரபர்களைப் போரில் தோற்கடித்துத் துரத்த வேண்டும் என்று எண்ணுகிறார். குப்த ராஜ்யத்தை அவந்தி, லதா, சௌராஷ்டிரம் வரை விஸ்தரிக்க வேண்டும் என்பது அவருடைய அவா. க்ஷத்திரபர்களைத் தோற்கடிப்பதற்காக யாதேயர்களின் பொன் நாணயங்களையும், யானைப் படைகளையும் காலாள் படைகளையும் உபயோகிக்க நினைக்கிறார். ஆனால் இதே நம் பொன் நாணயங்கள் நமக்கெதிராகவே உபயோகப்படுத்தப்படலாம் அல்லவா!"

"ஆம்! முதலிலிருந்தே குப்தர்கள் விஷயத்தில் நாம் கடைப்பிடித்து வந்த கொள்கை தவறானது என்று கருதி வந்திருக்கிறேன்" என்று கூறினார் பௌத்த சந்நியாசியான மேகபுத்தர். சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பின், "குப்தர்களின் பேரரசனாக விளங்கிய சமுத்திர குப்தர்கூட இத்தகைய பயமுறுத்தலைத்தான் நம் மீது செலுத்தினார். நாமும் அதற்குத் தலை வணங்கினோம். பிறகு அதிலிருந்து விடுதலையடைய முயன்றோம். அந்தச் சமயத்திலேயே நம் குடியரசும் ஆட்டம் கொண்டது. குடியரசு நிலையிருப்பதற்கும் ஆபத்து வந்து விடும் போலத் தோன்றியது. இன்றைய பேராபத்துக்களுக்கும் விபரீதங்களுக்கும் அடிவேராக அமைந்தது எது



தெரியுமா! அன்று நாம் சமுத்திர குப்தருக்குத் தலைவணங்கியதுதான். ஒரு தவறுதலான காரியம் பல தவறுகளுக்கு இடமளித்து விட்டது!"

"ஆம், குரு! அந்தகைய தவறுகள் ஏற்பட்ட நிலையிலேயே தங்கள் உதவியை நாடி அவசரப்பட்டுக் கொண்டு வந்தேன். மறுபடியும் அதேவிதமான தவறைச் செய்ய நான் விரும்பவில்லை. அந்த நிருபம் சாணக்கியரின் தந்திரத்தின்படி சங்கேத முறையில் எழுதப்பட்டிருக்கிறதே யொழிய அது யுத்த முடிவைத் தெரிவிக்கும் செய்திதான்."

"போர் வெறியர்களின் வார்த்தைகளெல்லாம் அப்படித்தா னிருக்கும். குப்தர்களுடைய பலம் அவர்களுடைய படை பலத்தில் தானிருக்கிறது. ஆனால் நம்முடைய பலமோ இலட்சியங்களைப் போற்றுவதி லிருக்கிறது. நாம் பல நூற்றாண்டுகளாகக் குடியரசு இலட்சியத்தை மேற்கொண்டு வந்திருக்கிறோம். குப்தர்களின் மண்ணாசைக்கும் நம்முடைய சிறந்த குடியாட்சி தத்துவத்திற்கும் எவ்வளவோ வேறு பாடுகள் உண்டு. குடியரசு தத்துவத்தைப் போற்றும் நாம் போரை அறவே வெறுத்தோம். ஆனால் நாம் இன்று கௌரவமுடன் வாழ வேண்டுமானால் நாமும் போர் முறையில் தேர்ச்சி பெறவேண்டும். தேர்ச்சி பெறாவிட்டால் நம் குடியரசு நிலைத்து நிற்காது......"

"அப்படியானால் பாடலிபுத்திரத்திலிருந்து வந்திருக்கும் அந்த அழைப்புக்கு நாம் என்ன பதில் விடுக்க வேண்டும்!" என்று பத்ரஸ்வா கேட்டார்.

"முதலில் குடியரசு சபையின் தீர்மானத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். பிறகு நாம் அதைப்பற்றிச் சிந்திக்கலாம்" என்று கூறி நிறுத்தினார் பௌத்த சந்நியாசி. சிறிது நேர மௌனத்துக்குப் பிறகு ஏதோ ஒரு புதுவித சக்தி தோன்றியதைப் போலப் பேசத் தொடங்கினார். "குப்தர்கள் பொன்னாசை பிடித்தவர்கள் என்று தெரிந்தால் நாம் போர் புரிய வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவர்கள் பொன் நாணயங்களினால் மட்டும் திருப்தியடைபவர்களாகத் தோன்றவில்லை. நாட்டை விஸ்தரிப்பதற்காகவே அந்தகைய சூழ்ச்சியைக் கைக்கொண்டிருக்கிறார்கள்........."

"ஆம்! அதுவே நம் ஒற்றர்கள் கொண்டு வந்த செய்தியும். குப்தர்கள் யாதேயத்தையும் தங்களுடைய ராஜ்யத்துடன் சேர்த்துக் கொள்ளவே விரும்புகிறார்கள் என்று தெரிகிறது..."

"சாகேதத்தில் அவர்கள் மற்றொரு தலைநகரை ஏற்படுத்தியதும் நானும் அவ்வாறே சந்தேகப்பட்டேன். அவர்கள் அக்ரா நகரிலும் புரு கிராமத்திலும் மூன்றாவது அரசாங்கத்தை ஏற்படுத்தினால் கூட நான் சிறிதும் ஆச்சரியப்பட மாட்டேன்......"

"அப்படியானால் அவர்களுடைய போர் அழைப்பை...!"

"சபையின் அங்கத்தினர்கள் உடன்பட்டால் ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்...!"

"அதையே நான் சபை பிரதிநிதிகளுக்கு எனது முடிவு என்று அறிவித்து விடுகிறேன்" என்று கூறித் தலைவர் பத்ரஸ்வா ஒரு வறண்ட சிரிப்பொன்று சிரித்தார்.

"அப்படியே செய்யுங்கள். அஹிம்சா தர்மத்தைப் போதிக்கும் புத்தர் வழிவந்த மேக புத்தர் தன்னிலை இழந்து விட்டதாகப் பிரதிநிதிகள் ஆச்சரியப்படக் கூடும். ஆனால் புத்த பகவான், 'பகைமையைப் பகைமையினாலேயே வெல்ல முடியாது. சகிப்புத் தன்மையினால்தான் வெல்ல முடியும்' என்று போதித்திருக்கிறார். ஆனால் இங்கே சகிப்புத் தன்மை என்பது பயங்கொள்ளிகளின் கண்ஜாடையல்ல; வீரர்களின் பொறுமையைத்தான் குறிக்கிறது" என்றார் மேகபுத்தர்.

"என்னுடைய எண்ணமும் அதுதான். ஆனால் இவ்வளவு தெளிவாக என்னுடைய மனதில் புலப்படவில்லை" என்றார் பத்ரஸ்வா.

"போருக்காகவே போரைத் தொடங்க வேண்டும் என்று நான் ஆலோசனை கூறவில்லை. கிடைத்தற்கரிய மாணிக்கமாகிய குடியரசு நிலைத்திருக்குமா, நிற்காதா என்ற பிரச்னை வரும்பொழுது யாதேயர்கள் வாழ்வதா இறப்பதா என்பதைப் பற்றிச் சிந்திப்பது சரியல்ல. யுத்தத்துக்குத் தயாராக வேண்டியதுதான் முறை."

பௌத்தர் தலைவரான மேகபுத்தர் சிறிது இளைப்பாறி விட்டுக் கூறத் தொடங்கினார்: "ஆரியர்களாலும் மற்றும் பலராலும் போற்றப்பட்டு வந்த குடியாட்சி கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. குடியரசின் கீழ் வாழும் மக்கள் அழியக் கூடியவர்கள்தான். ஆனால் சுதந்திரக் குடியரசோ அமரத்துவம் வாய்ந்தது. இன்று யாதேயக் குடியரசு ஒன்றுதான் குடியாட்சி இலட்சியத்தைக் காத்துவருகிறது. யாதேயக் குடியரசு குப்தர்களின் கையில் சிக்கிவிட்டால் பாரத நாட்டில் நெடுங்காலமாக இருந்து வரும் குடியாட்சி முறை அறவே மறைந்து விடும்."

"அப்படியானால் குடியரசு சபை தீர்மானிக்கும் முடிவைக் குப்த அரசனுக்கு அறிவித்து விடலாமா!" என்று கேட்டுக்கொண்டே தலைவர் பத்ரஸ்வா எழுந்திருந்தார்.

"அப்படியே தயக்கமில்லாமல் செய்யுங்கள்" என்று கூறிப் பத்ரஸ்வாவின் தோளைப் பிடித்துக்கொண்டே எழுந்திருந்தார் மேகபுத்தர்.

(அடுத்த இதழில் முடியும்.)


# ஆங்கிலக் கல்வி

தத்தம் இல்லத்திலிருந்தே, பிறர் உதவியின்றி ஓரே வருடத்திற்குள் நான்காம் படிவத்திற் கொப்பான ஆங்கில அறிவைப் பெறலாம். ஆங்கில எழுத்துக்கள் அறியாதவர்களும், இடையில் கல்வியை நிறுத்தியவர்களும் கற்கலாம். 4 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

•

## கேம்பிரிட்ஜ் காலேஜ்

(K) கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B:—S. S. L. C. தேறி கல்லூரி படிப்பிற்கு சௌகரியமற்றிருப்பவர்க்கு, பிரைவேட்டாகவே Intermediate தேறலாம். 6 அணா ஸ்டாம்புடன் விண்ணப்பிக்கவும்.

# மனம் தெளிந்தது!

கே. ஆர். கௌசல்யா

ஆபீஸுக்குப் புறப்படுவதற்காகத் தயார் செய்து கொண்டிருந்தான் மகாதேவன்.

"இன்றைக்கு ஆபீஸிலேயிருந்து கொஞ்சம் சீக்கிரமாக வந்துவிடுகிறீர்களா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் விஜயா.

"ஏன்? என்ன விசேஷம்?"

"வந்து......பக்கத்து அகத்து மாமி ஒரு 'எவர் ஸில்வர்' 'குக்கர் செட்' வாங்கியிருக்கிறாள். ரொம்ப நன்றாயிருக்கிறது. சமையலுக்குச் சௌகரியமா இருக்கிறதாம். அதுமாதிரி எனக்கும் ஒன்று வாங்கவேண்டும் என்று ரொம்ப ஆசையாயிருக்கிறது!"

"எல்லாம் வாஸ்தவந்தான். ஆனால் இப்பொழுது பணத்துக்கு எங்கே போவது? அதுவும் மாசக் கடைசியிலே?"

"ஆமாம். என்னிக்குத்தான் நீங்கள் நான் சொன்னதற்கு உடனே சம்மதித்து வாங்கித் தந்திருக்கிறீர்கள்? எப்பொழுதுமே இதே 'இல்லை' பாட்டுத்தான்!" அலுத்துக் கொண்டாள் அவள்.

"இதோ பாரு விஜயா! அசடுமாதிரி பேசுகிறாயே! கையிலே பணத்தை வைத்துக் கொண்டே உன்னிடம் போய் சொல்லுகிறேனா? போன வாரம் ரேஷனுக்குக் கூட என்னிடம் பணமில்லாமற் போய் என் சிநேகிதன் ஒருவனிடமிருந்து கடன் வாங்கினேன். இன்னும் இந்த வார ரேஷனை வாங்கின பாட்டைக் காணோம். இந்தச் சமயத்திலே நமது நிலைமை தெரியாமல் கேட்கிறாயே? அடுத்தமாசம் வேண்டுமானால் பார்க்கலாம்!"

"ஆமாம். அடுத்த மாசம் மாத்திரம் எங்கேயிருந்து பணம் வந்து குதிக்கப் போகிறது? அப்பொழுதும் இந்த இல்லைப் பாட்டுத்தான்!" என்று விஜயா கடுமையாகச் சொன்னாள்.

அவளுடைய ஒவ்வொரு வார்த்தையும் மகாதேவனின் மனத்தை ஒவ்வொரு அம்பு போல் தாக்கியது. பதில் பேசாமல் கோட்டை எடுத்து மாட்டிக் கொண்டு குமுறும் உள்ளத்துடன் மௌனமாய் ஆபீஸுக்குக் கிளம்பினான்.

அவன் போவதையே பார்த்துக் கொண்டு நின்றிருந்த விஜயாவின் மனத்தில் பல எண்ணங்கள் வந்து அலைமோதின. கண்களில் நீர்முத்துக்கள் கோத்து நின்றன.

ஸ்ரீமான் சேஷகிரி அவர்களுக்கும் சங்கரி அம்மாளுக்கும் செல்வப் புதல்வியாய்ப் பிறந்தவள் விஜயா.

சேஷகிரி ரயில்வே ஆபீஸில் ஐந்நூறு ரூபாய் சம்பளத்தில் வேலையிலிருந்தார், சில புலன்களும் நிறைய இருந்ததால் உயர்ந்த அந்தஸ்திலிருந்தார் அவர். சங்கரியம்மாள் கொஞ்சம் பழைய கால சம்பிரதாயத்தில் ஊறினவள். தன் பெண் ஸ்கூல் பைனல் பாஸ் செய்ததும், மேற்கொண்டு காலேஜ் படிப்பை அனுமதிக்காமல் விவாக முயற்சியில் ஈடுபட்டாள். விஜயாவின் அழகுக்கும், அந்தஸ்துக்கும் ஆசைப்பட்டுப் பெரிய இடத்து வரன்கள் போட்டியிட்டன. ஆனால் சேஷகிரி தன்னுடைய பெண்ணை அயலிடத்தில் கொடுக்க விரும்பாமல் தன்னுடைய சகோதரி சீதாலக்ஷ்மியின் ஒரே புதல்வன் ஜெயராமனுக்கே அவளைக் கொடுத்துவிட வேண்டுமென்று நினைத்தார். ஆனால் உறவிலேயே சம்பந்தம் செய்து கொள்வதை விரும்பவில்லை சங்கரி அம்மாள். மேலும் ஜெயராமனின் டாம்பீகமும், கர்வம் நிறைந்த குணமும், அவன் மீது பெரிதும் வெறுப்புக் கொள்ளச் செய்தன. தங்களைவிட அந்தஸ்தில் குறைந்த பிள்ளையாயினும் நல்ல குணமுள்ள பிள்ளைக்கு விஜயாவைக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்தாள் அவள்.

மகாதேவன் சீதாலக்ஷ்மியின் பிறந்த ஊரைச் சேர்ந்தவன். அவளது தோழியின் பிள்ளை. அவனை அவளுக்கு ரொம்பப் பிடித்திருந்தது. அவன் பி. ஏ. பாஸ் பண்ணியிருந்தான். நல்ல குணசாலி. ஒரு கம்பெனியில் வேலையாயிருந்தான். மகாதேவனுக்கும் விஜயாவுக்கும் திருமணம் நடந்தேறியது.

கல்யாணம் முடிந்து புக்ககம் வந்த விஜயா கொஞ்சம் கொஞ்சமாகத் தன்னுடைய கணவனின் அந்தஸ்துக் குறைவை உணர ஆரம்பித்தாள். நினைத்ததைப் பெறும் செல்வ நிலையில் வளர்ந்து விட்ட விஜயாவுக்குத் தன் கணவனின் குறைந்த வருவாயில் தான் இஷ்டப்பட்டவைகளை வாங்கிக் கொள்ள முடியாமல் பெருத்த ஏமாற்றம் ஏற்பட்டது. எதைக் கேட்டாலும் பிறகு வாங்கித் தருவதாகக் கூறித் தட்டிக் கழித்துக் கொண்டு வரும் தன் கணவனை அவள் அலக்ஷ்யப்படுத்த ஆரம்பித்து விட்டாள். 'அப்பா சொற்படி அத்தானை மணந்திருந்தால் பங்களா வாசமும், கார் சவாரியும் குஷியாயிருக்கலாமே! குணத்திற்கு மதிப்புக் கொடுத்து நம் வாழ்க்கையை நாமே கெடுத்துக் கொண்டு விட்டோமே!' என்று எண்ணி ஏங்கினாள்.

தான் புக்ககம் வந்த பிறகு ஜெயராமனுக்கு ஒரு நல்ல இடத்தில் விவாகமாகியது என்று விஜயா கேள்விப்பட்டாள். ஆனால் பல காரணங்களால் அவளால் அந்த விவாகத்திற்குப் போக முடியவில்லை. ஜெயராமன் பெரிய கம்பெனி ஒன்றில் மானேஜராக இருப்பதாகவும் கேள்விப்பட்டாள். இரண்

டொரு சமயம் அவன் இருந்த தெரு வழியாய் அவன் மனைவியுடன் காரில் செல்வதையும் கண்ட விஜயா, அவன் அந்தஸ்தையும் தன் கணவனின் நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்த்து மனம் தளர்ந்து போனாள். பெரிய பணக்காரனின் ஏக புதல்வி என்ற கர்வத்தால் அவள் சொல்லக் கூடாத வார்த்தைகளைச் சொல்லிப் பல தடவைகள் மகாதேவனின் மனத்தைப் புண்படுத்தினாள். விஜயாவின் இத்தகைய மனப் பான்மையே அவர்களுடைய இல் வாழ்க்கையின் அமைதியைக் குலைத்து, மகாதேவனின் மனத்தில் ஒரு கசப்பை ஊட்டியது.

★

அன்று ஆபீஸிலிருந்து கொஞ்சம் சீக்கிரமாகவே வந்து விட்டான் மகாதேவன். விஜயா உள்ளே வேலையாக இருந்தாள்.

மகாதேவன் உடைகளை மாற்றிக் கொண்டு, சாப்பிட வந்து உட்கார்ந்தான். விஜயா அவனோடு ஒரு வார்த்தைகூடப் பேசாமல் பரிமாறினாள். அது மகாதேவனுக்கு என்னவோ போலிருந்தது. ஆகவே அவன் அவளுக்கு உற்சாக மூட்ட விரும்பினான்.

"விஜயா, காலையில் நான் சொன்னமாதிரி 'எவர் சில்வர் குக்கர் ஸெட்' ஒன்று அவசியம் வாங்கித் தருகிறேன். நீ அவ்வளவு ஆசைப்பட்டுக் கேட்ட சாமானை உடனே வாங்கித் தர முடியவில்லையே என்று எவ்வளவு வருத்தமா யிருக்கிறது, தெரியுமா? நான் எப்படியாவது கஷ்டப்பட்டு, சம்பளத்தில் மிச்சம் பிடித்துச் சீக்கிரத்தில் ஒரு குக்கர் வாங்கித் தருகிறேன்!" என்றான் மகாதேவன்.

"நீங்கள் கஷ்டப்படவும் வேண்டாம், சம்பளத்தில் மிச்சம் பிடித்து வாங்கித்தரவும் வேண்டாம்" என்று அலக்ஷ்யமாகப் பதிலளித்தாள் அவள்.

"ஏன் விஜயா! அதற்குள் என்ன மன மாற்றம்?" அவன் குரலில் வருத்தமும், ஏக்கமும் ஒருங்கே தொனித்தன.

"அப்படியாவது நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு எனக்காகக் கடனே வாங்கித்தர வேண்டாம். இப்பொழுதுகூட நான் மனசு வைத்து எங்கப்பாவைக் கேட்டேனானால் அதை வாங்கித் தந்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பார். நான்தான் அவரைக் கேட்டால் உங்கள் மதிப்புக்குக் குறைவாயிருக்குமே என்று பேசாமல் இருக்கிறேன். நீங்கள் வாங்கித் தராவிட்டால் என்னாலே வாங்க முடியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? சின்ன வயசிலே யெல்லாம் நான் எவ்வளவோ செல்லமா வளர்ந்து விட்டு இப்போது இப்படிக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது! என் தலைவிதி!"

எவ்வளவோ நல்லதனமாய் நிலைமையை எடுத்துக் கூறியும் அதைப் புரிந்து கொள்ளாமல் அவனுடைய மனத்தைப் புண்படுத்தும் விஜயாவின் ஒவ்வொரு வார்த்தையும் அவன் இருதயத்தைத் துளைத்தது. உண்மையான அன்பை அடிப்படையாகக் கொள்ளாமல் பணத்தையே பிரதானமாகக் கருதி நடத்தப் படும் தன்னுடைய தாம்பத்ய வாழ்க்கையின் மேலேயே அளவற்ற வெறுப்பு ஏற்பட்டது அவனுக்கு. இருந்தாலும் எப்படியாவது முயற்சி செய்து தன் மனைவியின் ஆசையைப் பூர்த்தி செய்யும் வழியைத் தேடி அலைந்தது அவன் மனம்.



நான்கு நாட்களாகவே மகாதேவனுக்கு உடம்பு சரி யில்லாமலிருந்தது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு ஆபீஸுக்குப் போய் வந்து கொண்டிருந்தான். அன்று காலை எழுந்தது முதல் நல்ல ஜுரம். வேறு வழியின்றி ஆபீஸுக்கு லீவு போட்டு விட்டு படுத்து விட்டான் மகாதேவன்.

மகாதேவனுக்குக் கஞ்சி போடுவதற்குக் கடைக்குச் சென்று பார்லி வாங்க வேண்டி யிருந்தது. அதற்காகச் சில்லறை எடுக்க அவன் அறைக்குச் சென்றாள் விஜயா. கோட்டுப் பாக்கெட்டில் கையை விட்ட அவள் ஒரு கணம் திடுக்கிட்டாள். பாக்கெட்டில் ஒரு சீட்டுக் கட்டும் கொஞ்சம் சில்லறையு மிருந்தது. ஒரு கணம் அவளுக்குத் தலை சுற்றுவது போன்ற பிரமை ஏற்பட்டது. கீழே விழுந்து விடாமல் பக்கத்திலுள்ள மேஜையைப் பிடித்துக் கொண்டாள். விஷயம் அவளுக்கு

விளங்க வெகு நேரமாக வில்லை. 'தன் கணவன் சீட்டாடும் துர்ப் பழக்கத்தைப் பழக்கிக் கொண்டிருக்கிறான், அதனால்தான் கொஞ்ச நாளாக இரவு வேளைகளில் தாமதித்து வீட்டுக்கு வருகிறான். அதோடு சீட்டாட்டத்தில் பண விரயம் செய்வதால் தான், தான் கேட்டவைகளை வாங்கித் தர முடியாமல் கையை விரிக்கிறான்; ரேஷன் வாங்கக் கூட முடியாமல் தடுமாறுகிறான்!' என்று நினைத்துக் கொண்டாள்.

விஜயாவுக்கு ஒரு நிமிஷம் என்ன செய்வதென்பே தோன்றவில்லை. பிறகு மெள்ளத் தன்னை ஒருவாறு சமாளித்துக் கொண்டு பரபர வென்று மகாதேவன் படுத்திருக்கு மிடத்துக்கு வந்தாள்.

அன்று மகாதேவனுக்கு உடம்பு அதிகமாக இருந்தது. ஜுர வேகத்தினால் கண்ணைக் கூடத் திறக்காமல் படுத்திருந்தான் அவன். அவனுக்கு மருந்து எடுத்து வந்து கொடுப்பதற்காக உள்ளே வந்த விஜயா வாசற் பக்கம் ஏதோ சத்தம் கேட்டு எட்டிப் பார்த்தாள். சுமார் நாற்பது வயது மதிக்கத் தக்க ஒரு பெரியவர் காரிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். அவர் யார் என்று விஜயாவுக்குத் தெரியவில்லை.

அடுத்த கணம் அவர் "மகாதேவன் இருக்கிறாரா?" என்று கேட்டார்.

"இருக்கிறார். உடம்பு சரியில்லாமல் படுத்திருக்கிறார். உள்ளே வாருங்கள்" என்றாள் விஜயா தன் படபடப்பு அடங்காமல். அவர் உள்ளே வந்து மகாதேவன் படுத்திருக்கும் கட்டிலருகில் நின்றார்.

மெள்ள மகாதேவன் கண்ணைத் திறந்து பார்த்தான்.

"யார்?...ஓ...நீங்களா?" என்று ஈனசுரத்தில் கேட்டுவிட்டு மெள்ள எழுந்திருக்க முயன்றான்.

"வீணாக உடம்பை அலட்டிக் கொள்ளாதீர்கள். படுத்துக் கொள்ளுங்கள். அடாடா! உங்களுக்கு ஜுரம் இவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று எங்களுக்குத் தகவலே தெரியப் படுத்தவில்லையே! நான்கு நாட்களாக நீங்கள் ஏன் வரவில்லை, என்ன விஷயம் என்று பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்!" என்றார் பெரியவர்.

"அன்றைக்கே...உங்களுக்குத் தெரியப் படுத்த வேண்டு மென்று நினைத்தேன். ஆனால் உடம்பு நாளுக்கு நாள் அதிகமாகி விடவே என்னால் வர முடியவில்லை" என்று தட்டுத்தடுமாறி பதில் சொன்னான்.

"அதனால் பரவாயில்லை. உடம்பு சொஸ்தமான பிறகு மெதுவாக வாருங்கள். நீங்கள் தான் அவர்களுக்குக் குரு. அன்று நீங்கள் சீட்டுக் கட்டையும் பிடுங்கிக் கொண்டு வந்து நல்ல அடியும் கொடுத்த பிறகு அவர்கள் சீட்டாடுவதில்லை. அவர்களுக்குப் புத்தி சொல்லித் திருத்திப் பாடம் கற்றுக் கொடுத்து



முன்னேறச் செய்ய வேண்டியது உங்கள் பொறுப்பு. உங்களைத் தவிர வேறு ஒருவரையும் டியூஷனுக்கு ஏற்பாடு செய்யவும் எங்களுக்குப் பிடிக்கவில்லை!" என்றார் வந்தவர்.

ஒரு நிமிஷம் மௌனம்.

விஜயாவின் தலை சுழன்றது. சீட்டுக் கட்டு...பையன்கள்...டியூஷன். விஷயம் ஒருவாறு புரிந்துவிட்டது அவளுக்கு. அவள் கணவன் சீட்டாடவில்லை. யாரோ பையன்களிடமிருந்து அவர்கள் சீட்டாடாமலிருக்கும் பொருட்டு சீட்டுக் கட்டைப் பிடுங்கிக் கொண்டு வந்திருக்கிறார்.

"ஆமாம். நீங்கள் எங்கே மருந்து சாப்பிடுகிறீர்கள்?" என்று பெரியவர் கேட்டார்.

"கார்ப்பொரேஷன் ஆஸ்பத்திரியில்தான்."

"இவ்வளவு பிரமாதமாக உடம்புக்கு வந்திருக்கும்போதா இவ்வளவு அசட்டையாய் வைத்தியம் செய்து கொள்வது? நான் வீட்டுக்குப் போய் எங்கள் 'குடும்ப' டாக்டரை அனுப்புகிறேன். பணத்தைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் கொடுத்துக் கொள்ளுகிறேன். எப்படியாவது உடம்பு சரியானால் போதும். நான் போய் வரட்டுமா?" என்று சொல்லிக் கொண்டே மணிபர்ஸிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் நீட்டினார் அப் பெரியவர்.

முதலில் மறுத்தபோதிலும் பிறகு அவர் கட்டாயப்படுத்தவே அதை வாங்கிக் கொண்டான் அவன். அவரை வாசல் வரையில் வழியனுப்பிவிட்டு உள்ளே வந்த விஜயாவின் மனம் அளவற்ற சங்கடத்தில் ஆழ்ந்தது.

அநியாயமாக விஷயம் முழுவதையும் ஆராயாமல் தன் கணவன் மேல் சந்தேகப்பட்டு விட்டோமே என்று உள்ளூறப் பச்சாதாபப் பட்டது அவள் மனம். தன் கணவனை அணுகிய அவள் "இந்தப் பெரியவர் யார்? எவ்வளவு நாட்களாக அவர்கள் வீட்டில் டியூஷன் சொல்லிக் கொடுக்கிறீர்கள்?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"போன மாதத்திலிருந்து தான் விஜயா, இந்த ஏற்பாடு. என்னுடைய சிநேகிதன் ஒருவனின் சிபார்சின் பேரில் இவர்கள் வீட்டில் டியூஷனுக்கு ஒத்துக் கொண்டிருக்கிறேன். அன்று நீ கேட்ட 'குக்கரை' வாங்கித் தர முடியாமல் உன் ஆசையைக் கெடுத்தோமே என்று நான் எவ்வளவு வருத்தப் பட்டேன் தெரியுமா? அதனால் தான் கடைசியாக இந்த வழியிலாவது பணம் சம்பாதித்து உன் ஆசையைப் பூர்த்தி செய்யலாம் என்று தோன்றிற்று. ஒரு மாதப் பணம் வாங்கிய பிறகு உன்னிடம் இதைப் பற்றிச் சொல்லி உன்னை ஆச்சரியப்படுத்த நினைத்திருந்தேன். ஆனால் அதற்குள் இந்த ஜுரம் வந்துவிட்டது. இந்தப் பெரியவரும் ரொம்ப நல்லவர்தான். நல்ல அந்தஸ்தில் இருப்பவர். ஆனால் என்ன இருக்கென்ன? அவருக்கும் ஒரு பெரிய குறையை வைத்திருக்கிறான் பகவான்" என்றான் மகாதேவன்.

"குறையா?"

"ஆமாம் விஜயா! இவருக்கு இருப்பது ஒரே ஒரு பெண். அவளை அருமையாக வளர்த்து ஒரு இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்தார். அவருடைய மாப்பிள்ளை ஜயராமன் ஒரு பெரிய கம்பெனியிலே மானேஜராக இருந்தான். கொஞ்ச நாள் வரையில் நல்லவன் போல் நடித்து விட்டுப் பிறகு ஒரு நாள் திடீரென்று கம்பெனிப் பணத்தையும் திருடிக்கொண்டு, அந்தப் பெண்ணிடமிருந்து பலவந்தமாக நகைகளெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு யாரோ ஒரு சினிமா ஸ்டாரை ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டு அவளோடு ஓடிவிட்டான். போலீஸார் வேறு அவனைக் கம்பெனிப் பணத்துக்காகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். பாவம்! அந்தப் பெண்ணும் இப்போது பிறந்தகத்திலேதான் இருக்கிறாள்!"

விஜயாவின் தேகத்தில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. "அவர் மாப்பிள்ளை எந்தக் கம்பெனியில் இருந்தான்?" என்று கேட்டாள்.

"'வியூ சைன் மார்ட்' என்ற கம்பெனி மானேஜராக இருந்தானாம்!" என்றான்.

பளிச்சென்று விளங்கி விட்டது விஜயாவுக்கு. தன் அத்தானே தான் அவன். வெளி வேஷத்தையும், டாம்பீகத்தையும் கண்டு மயங்கி அவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தால் அவள் கதி என்னவாகியிருக்கும்?


அவள் கண்களிலே நீர் ததும்பியது. அதைத் துடைத்துக் கொள்ள மெதுவாகச் சமையற்கட்டுக்குச் சென்றாள் அவள்.


மீண்டும் பாதி விலைக்கு குறைவான சலுகை!
15 நாட்களுக்கு மட்டும்
புகழ் வாய்ந்த ஸ்விஸ் பாக்டரியில் தயாரித்த கைக் கெடிகாரங்கள்.




ஒவ்வொன்றும் ஐந்து வருட உத்திரவாதம் கொண்டவை.

| | ஒரிஜனல் விலை | தற்போது விலை |
|---|---|---|
| ஜெர்மன் பாக்கெட் வாட்ச் | 24/- | 11/- |
| " உயர் ரகம் | 28/- | 13/- |
| இங்கிலீஷ் அலாரம் டைம்பீஸ் | 40/- | 19/- |

No. 525  Size 6¾'''

| | | |
|---|---|---|
| 15 ஜுவல் ரோல்டு கோல்டு | 96/- | 45/- |
| 15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ் | 100/- | 48/- |

No. 526  Size 10½'''

| | | |
|---|---|---|
| 15 ஜுவல் ரோல்டு கோல்டு | 98/- | 48/- |
| 15 ஜுவல் 20 மைக்ரோன்ஸ் | 110/- | 52/- |

No. 527  Size 5¼'''

பிராந் ஷேப்


| | | |
|---|---|---|
| 5 ஜுவல் க்ரோம் கேஸ் | 45/- | 22/- |
| 5 ஜுவல் ரோல்டு கோல்டு | 52/- | 25/- |

இரண்டு கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு தபால் செலவு இலவசம்.

PIONEER WATCH Co
POST BOX NO 11428 CALCUTTA


நாராயணன் கிப்ஸ் உபயோகிக்கிறான்—அவன் பற்கள்
வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன
நாராயணன் கிப்ஸ் டென்டிபிரிஸை விரும்புகிறான். அவன் சிறு வயதிலிருந்தே அதை உபயோகித்து வருகிறான்.
காலையிலும் மாலையிலும் எல்லா பற்களையும் கிப்ஸ் டென்டிபிரிஸினால் தேய்க்கிறான். மேலும்கீழுமாக—ஒரு பக்கமிருந்து மறுபக்கமாக அல்ல.
அவன் பற்கள் பிரகாசமாகவும் வெண்மையாகவும் ஒழுங்காகவும் இருக்கின்றன. அது கிப்ஸ் டென்டிபிரிஸினால்தான்!
நீங்களும் கிப்ஸ் உபயோகிக்கிறீர்களா?
சாம்பல், கரி, இவைபோன்ற இதர காரகரப்பான பல்துலக்கும் வஸ்துக்கள் பற்களுக்கும் ஈறுகளுக்கும் ஹானி விளைவிக்கக்கூடும். நுரைபோல் மிருதுவான கிப்ஸ் டென்டிபிரிஸ் பற்களுக்கோ அல்லது ஈறுகளின் மிருதுவான பாகங்களுக்கோ ஒருபொழுதும் கெடுதல் செய்வதில்லை. கிப்ஸ் நீங்கள் எப்பொழுதும் ஒழுங்கான பற்களைப்பெற உதவுகிறது. வாய்க்கும் சுவாசத்திற்கும் புதுமணத்தை அளிக்கின்றது. மேலும் அதன் 3 கவர்ச்சிகரமான வர்ணங்களிலுள்ள டப்பிகளில் எதை தேர்ந்தெடுத்தாலும் உபயோகிக்க மிகவும் சௌகரியமாயிருக்கும்.
Gibbs
கிப்ஸ் டென்டிபிரிஸ்
ஒழுங்கான முறையில் பற்களை
வெண்மையாக சுத்தம் செய்கிறது
GD. 24-172 TM

# B. I. S. N. கம்பெனி லிமிடெட்



# S. S. "ரஜுலா"

## சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு – சிங்கப்பூர்

## புறப்படும் தேதி

| மதராஸ் | நாகப்பட்டினம் |
|---|---|
| 1951 நவம்பர் 9 | 1951 நவம்பர் 10 |
| ,, நவம்பர் 30 | ,, டிஸம்பர் 1 |
| ,, டிஸம்பர் 24 | ,, டிஸம்பர் 25 |

### குறைக்கப்பட்ட முதல் வகுப்புக் கட்டணங்கள்

| | | |
|---|---|---|
| மதராஸ் — பினாங்கு | ... | ரூ. 360/– |
| மதராஸ் — சிங்கப்பூர் | ... | ரூ. 410/– |
| நாகப்பட்டினம் — பினாங்கு | ... | ரூ. 355/– |
| நாகப்பட்டினம் — சிங்கப்பூர் | ... | ரூ. 405/– |

### விசேஷ சுற்றுப் பிரயாணக் கட்டணம் — முதல் வகுப்பு மாத்திரம்

| | | |
|---|---|---|
| மதராஸ் — சிங்கப்பூர் — மதராஸ் | ... | ரூ. 850/– |
| நாகப்பட்டினம் — சிங்கப்பூர் — நாகப்பட்டினம் | | ரூ. 840/– |

சிங்கப்பூரில் பிரயாணிகள் கப்பலில் தங்கும்போது ஏற்படும் செலவுகளும், விசேஷ சுற்றுப் பிரயாணக் கட்டணத்தில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

நவம்பர் மாதம் 9-ந் தேதி புறப்படும் கப்பல் பிரயாணிகளுக்கு பர்த் இடவசதியில்லாத டிக்கட்டுகள் அக்டோபர் 20-ந் தேதி முதல் நமது காரியாலயத்தில் கொடுக்கப்படும்.

பினாங்கு, போர்ட் ஸ்வெட்டன்ஹாம், சிங்கப்பூருக்கு கார்கோ சாமான்களை நேரடியாக ஏற்றிச் செல்லவும், பாங்காக், ஹாங்காங், ஜப்பான் மற்றும் தூரக் கிழ் திசையிலுள்ள இதர ஊர்களுக்கு சிங்கப்பூரில் கப்பல் மாற்றி அனுப்பும்படியும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதர விவரங்களுக்கு தயவு செய்து விண்ணப்பிக்கவும் :

**பின்னி & கோ., (மதராஸ்) லிட்.**
7, அரண்மனைக்காரன் தெரு
மதராஸ்.

**மதுரா கம்பெனி லிமிடெட்**
முதல் லைன் பீச் ரோட்,
நாகப்பட்டினம்.

# கோடிக்கணக்கான மக்களுக்கு ஓர் நிவாரணி

## தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, தசை வலி, கீல்வாதம், நரம்புவலி, இவைகளிலிருந்து

இரண்டே அணாவுக்கு உங்களுக்கு அனஸின் மாத்திரைகளைக் கொண்ட முதல் சிகிச்சை பாக்கெட் கிடைக்கும். எந்த அவசரகாலத்திலும் திருப்திகரமாயும், விலை குறைவாகவும், அபாயமின்றியும் எல்லோருக்கும் எப்பொழுதும் உதவக் கூடியது அனஸினே! நோயை எதிர்க்கும் அனஸின் ரசாயன முறைப்படி பினஸிடின், கொயினா, காப்பீன், அஸிடில்ஸாலிஸிலிக் ஆஸிட், ஆகிய பொருள்களைச் சேர்த்துச் செய்யப்பட்டது நோயாளிகளுக்கு அதி சீக்கிரமாயும், அபாயமில்லாமலும், உத்தரவாதத்துடனும் குணத்தைக் கொடுக்கக் கூடியது இன்றே அனஸினை உபயோகித்து உங்கள் நோயை போக்கிக் கொள்ளுங்கள்.

2 கொண்ட பாக்கட்டுகள்
14 கொண்ட ட்யூபுகள்
50 கொண்ட ஜாடிகள்





**அனஸின்**

TRADE MARK REGISTERED

**வில்லைகள்**

இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கம்பெனி லிமிடெட், பம்பாய் 1.
டிரேட் மார்க்கின் உரிமையாளர்: ஒயிட்ஹால் பார்மக்கல் கம்பெனி, நியூ யார்க், யூ. எஸ். ஏ.

LAS. (B)


7 O'CLOCK
SLOTTED
BLADE
7 O'CLOCK
SLOTTED BLADE
7 o'clock
செவன் ஓ'கிளாக் பிளேடுகள்

# நீங்கள் இன்று உங்கள் பற்களை மக்ளீன் செய்தீர்களா?



"மிகவும் ஆரோக்கியம் வாய்ந்த பற்களை உடையவள் நான் என்று எனது பல் வைத்தியர் சொல்லுகிறார். இது மக்ளீன்ஸுக்கு பெருமை தருகிறதல்லவா?"

உங்கள் பல் பிரஷ்வின் மீது மக்ளீன் பெராக்ஸைட் பற்பசையை அமுக்கிப்படியவையுங்கள். உங்கள் பற்களை சுத்தம் செய்த பிறகு உங்கள் வாயில் உண்டாகும் புது மணத்தையும், சுவையையும் உணருங்கள். மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை உடனடியாக வாயில் ஊறும் அபாயகரமான புளிப்பு நீர்களைக் குறைத்து பல் சொத்தை பிடிப்பதைத் தடுத்து விடுகிறது. விகாரமளிக்கும் கறைகளை பற்களிலிருந்து அகற்றுகிறது.

ஆரோக்கியமானவாயும், வெண்மையும் வசீகரமும் கொண்ட பற்களும் வேண்டுமானால் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையை தினமும் இரண்டு தடவை உபயோகியுங்கள். அதன் சுத்தத்திற்கு உத்தரவாதம்.

## இன்றே மக்ளீன்ஸ் வாங்குக!




MTY-6 TAM.

வியாபார விவரங்களுக்கு: ஜே.எல்.மாரிசன், ஸன் அண்ட் ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட் மஹாலக்ஷ்மி கோவிலுக்கு எதிரில், வார்டன் ரோட், பம்பாய் 26.

# இரட்டிப்பு ஆகாரம்



குழந்தையின் வளர்ச்சி அவனுடைய ஆயுட்காலம் பூராவும் இருக்கும் சரீரகத்தின் அமைப்பை ஸ்தாபிக்கின்றது. அதனால்தான் ஓர் தாயானவள், எந்த ஆகாரங்கள் குழந்தை பிறப்பதற்கு முன்னும் மற்றும் அவனுக்குப் பாலூட்டி வரும்பொழுதும் குழந்தைக்குத் திடகாத்திர வளர்ச்சியைக் கொடுக்குமோ அந்த ஆகாரங்களை முக்கியமாகச் சாப்பிடவேண்டும். தற்சமயம் கிடைக்கும் உணவுப்பொருள்களில், உடல்வளர்ச்சிக்கு அத்தியாவசியமான விடமின்கள் விசேஷமாகக் குறைந்திருக்கின்றன. ஆதலால், ஓர் தாய் அதிகப்படியான* விடமின்களை உட்கொள்ளாவிடில், அவளுடைய குழந்தை நோஞ்சானாகப் பிறந்து அதைப் பராமரிப்பதற்கு மிகச் சிரமமாக இருக்கும். எம். ஜி. பி. (மெட்ராஸ் கவர்மெண்ட் பிராண்ட்) ஷார்க் லிவர் ஆயிலில் ஓர் ஆளின் நித்திய தேவைக்கு அத்தியாவசியமான பூர்ண அளவு A & D* விடமின்கள் நாளொன்றுக்கு ½ அணா செலவில் கிடைக்கும். ஓர் குழந்தைக்கு ¼ அணா செலவில் நித்தியமும் தேவையாயுள்ள இந்தப் பாதுகாப்புச் சத்துப்பொருள்கள் கிடைக்கும்.

## மெட்ராஸ் கவர்மெண்ட் பிராண்ட்

MADRAS GOVERNMENT BRAND

MGB

## ஷார்க் லிவர் ஆயில்

ஒரு ஆளுக்குச் செலவு : நாளொன்றுக்கு ½ அணா.

* விடமின் 'A' :— உடல் வளர்ச்சிக்கும் வலிமைக்கும் சாதகமானது. ஜலதோஷம், சின்னம்மை, நீர்க்கோளுவான், கக்கை நீக்கட்டு முதலிய நோய்களைத் தடுத்து— வெட்டுக்காயம் பிளவுபட்டாலும் இவை நுரையீரல் விஷம் பரவாமல் பாதுகாக்கின்றது.

* விடமின் 'D' :— கணைச்சூட்டைத் தவிர்க்கிறது. உறுதியான எலும்பு, பற்கள் வளர்ச்சிக்கும் ரணைக்கும் இன்றியமையாதது.

கொழுப்புகள் :—விடமின்களை பூர்ணமாய் ஜீரணிக்கத் தேவையானதும், அதிகப்படி சக்தியை கொடுப்பதற்காகவும் வேண்டிய அளவு கடலெண்ணெய் உள்ளது.

| அடமின் |
| --- |
| மெட்ராஸ் கவர்மெண்ட் பிராண்ட் ஷார்க் லிவர் ஆயிலிலுள்ள கொழுப்புகள், மென்மையான ஜீரண சக்தியுடைய சமீபத்தில் பிறந்த சிசுக்களின் ஜீரணத்தைச் சிறிது பாதிக்கலாம். அப்படியானால், முழு சாரமுள்ள அடமின் கொடுக்கவும். தினம் சில துளிகளே தேவை; அது சுவையானதாய் நோக்கும் தரவும் கொடுக்காது. |

தயாரிப்பாளர்கள் :—

## கவர்மெண்ட் ஆயில் பாக்டரி, கள்ளிக்கோட்டை

டிபார்ட்மெண்ட் ஆப் இண்டஸ்ட்ரீஸ் & காமெர்ஸ்

## கவர்மெண்ட் ஆப் மெட்ராஸ்

தென் இந்தியாவுக்கு விநியோகஸ்தர்கள்

பார் & கோ., லிட்., மெட்ராஸ்.

SISTA'S-GO 1 a—TAMIL


தொல்லைப்படுத்தும் பூச்சிகளைக் கொல்லுங்கள்
....அவை மலேரியா, டைபாய்ட், வயிற்றுக் கடுப்பு, காலரா மற்றும் அநேக வியாதிகளைப் பரப்புகின்றன!
ஈ, கொசு, கரப்பு, மூட்டைப்பூச்சி இவை அசுத்தமாக விருத்தியாகின்றன. சேற்றில் வாழும் இந்த ஜந்துக்கள் உங்கள் வீட்டிற்கு நோய்க் கிருமிகளைக் கொண்டுவந்து உங்கள் உயிருக்கே உலைவைக்கக் கூடும். ஒரே ஈயில் 60,00,000க்கு மதிகமான கிருமிகள் காணப்பட்டுள்ளன!
பூச்சி சிறியதாயும் சாதுபோலவும் தோற்றமளித்தபோதிலும், அது உங்கள் உயிருக்கு ஆபத்து விளைவிக்கலாம்.
எல்லாப் பூச்சிகளையும், அவை உங்களிடையே நோயைப் பரப்புமுன் கொல்லுங்கள்! ப்ளிட்டிலிருக்கும் 5 கொடிய டோக்ஸின்கள் எல்லாப் பூச்சிகளையும் துரிதமாகவும் நிச்சயமாகவும் கொல்லுகின்றன.
FLIT
ப்ளிட்
அதிக பூச்சிகளைக் கொல்கிறது—
அதற்குச் செலவழிக்கும் காசு
வீண்போகிறதில்லை
ஸ்டாண்டர்ட்-வாக்குவம் ஆயில் கம்பெனி
(கம்பெனி அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)



அந்த

**தலைவலியை**

குணப்படுத்திக்கொள்ள




3 வில்லைகள் அணா 1½.
30 வில்லைகள் அணா 15.





கவியரசர் டாகூர் காந்தி மகாத்மாவின் பெருமையையும் அவர் இந்தியாவுக்கு ஆற்றி யிருக்கும் அருந்தொண்டையும்

# மகாத்மா காந்தி

என்ற நூலில் அழகாக விளக்கி யிருக்கிறர்
விலை அணா எட்டு
(தபால் செலவு தனி)

●

சசிதேவி எழுதிய

# விஜயா

முதலிய கதைகள்
விலை ரூ. 2-8-0
(தபால் செலவு தனி)

●

கிடைக்குமிடம்

**கல்கி காரியாலயம்**

கீழ்ப்பாக்கம் :: சென்னை



## அரிந்து, எரிந்து கோப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது

நிக்ஸோடெர்ம் கண்டு பிடிக்கப் பட்டதி லிருந்து இனி யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டிகள் ஆகிய சரும வியாதிகளால் அவதி யுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடெர்மினால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அனுயாசமாக வைத்துக் கொண்டு, பிறர் உங்களை வியாதியஸ்தரெனக் கருத இடம் கொடுக்காதீர்கள்.

### ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடெர்ம் ஒரு புதிய களிமபு. ஆனால் நீங்கள் கண்டு உபயோகித்த இதர களிம் பைப் போன்றதன்று. பிசுக்கற்றது. மேலே தடவிக் கொள்ளும்போது ஒரு பவுடரைப் போல உணருவீர்கள். சருமத் துவாரங்களி னூடே சென்று வியாதிக்கு மூலமான இடத் தைத் தாக்குகிறது. நிக்ஸோடெர்ம் மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைத் தாக்கிக் கொல்லுகிறது. (2) அரிந்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷங்களில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற் கையாகவே ஆற்றி, சுத்தமாக மிருதுவாகப் பட்டுப்போல வழவழப்பாகவும் ஆக்குகிறது.

### விரைவில் பலனளிக்கிறது


சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடெர்ம் வேறெதையும்விட சீக்கிரமாக வேலை செய் கிறது. நமைச்சல், எரிச்சல் ஆகியவற்றை சில நிமிஷங்களில் நிறுத்தி விரைவில் சரு மத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழ வழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங் களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி — நாடிய வைத்தியம் கிடைத் ததை உணருவீர்கள். நிக்ஸோடெர்ம் ஆயிரக் கணக்கானவர்களுடைய சருமத்தைச் சுத்த மாக்கி புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவ ரான மிஸ்டர் R. K. கூறுகிறார்: "பன்னிரண்டு வருஷங்களாக நமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்து களுக்குப் பிறகு நிக்ஸோடெர்ம் உபயோகித் தேன். 10 நிமிஷங்களில் நமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற் றத்தில் ஏற்பட்ட மாறுதலைக்கண்ட என் நண் பர்கள் ஆச்சரிய மடைந்தனர்."



BEFORE AFTER

### திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாக சுத்தமாகாதவரை நிக்ஸோடெர்ம் மதிப்பை இழக்கிறது. இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். தோற்றத் தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரி யப் படுவீர்கள். மேலும் ஒரு வாரத்திற்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் அதன் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, நீங்கள் கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே ஒரு நிக்ஸோடெர்ம் வாங்குங்கள். அதற் களித்த உத்தரவாதமே உங்களுக்கு உறுதி.



for Luxuriant growth of Hair
எப்பொழுதும்
உபயோகியுங்கள்
காஸ்ட்ரால்
பரிசுத்தமான
ஆமணக்கெண்ணையில்
தயாரித்தது.
நறுமணத்துடன் கூடி
யது. கவர்ச்சிகரமான
பாட்டில்களில் உள்ளது
CASTOROL
A Calchemico
Product
மதராஸ் ஆபீஸ்:
5/149, பிராட்வே
ஜி. டி., மதராஸ்




'கோலினாஸ்'
புன்னகையில்
அழகு
மிளிர்கிறது!
நுரைதான் இந்த
வித்தியாசத்திற்குக் காரணம்!
இந்தியாவில் தயாரிப்பாளர்கள்:
ஜியாப்ரே மானர்ஸ் & கோ. லிட்.,
பம்பாய் 1
கிளைகள்: கல்கத்தா-மதராஸ்-டில்லி

# பத்து வருஷங்கள்

## இளையவராகத் தோன்றினார்

### ஊளைச் சதை குறைந்ததினால்




வயதுக்கு மீறின விருத்தாப்பியத் தோற்றமளிக்கிறீர்களா? வாழ் நாட்களைப் பெருமூச்சுடன் கழிக்கின்றீர்களா? அவ்வாறாயின், "க்ருஷனால்" வெற்றிகரமாகச் "சுய சிகிச்சை" செய்து கொண்ட இம் மனிதரின் நிரூபணத்தைக் கவனியுங்கள். அவர் கடிதம் வருமாறு:

"எனது வயது 33, நிறை 206 ராத்தல்; இருந்தும் எனது உயரம் 5 அடி 6 அங்குலம்தான். வயதுக்கு மேற்பட்ட கிழத் தோற்றமுடையவனாயும் இருந்தேன். சுமார் ஐந்து மாதங்களுக்குத் தினந்தோறும் ஒரு சிறிது க்ருஷன் உண்டு, ஒவ்வொரு வாரமும் தேக நிலையில் நல்ல மாறுதலையும் கண்டேன். நான் செய்வது இன்னதென்று உணராத எனது நண்பர்களும் எனது தோற்றத்தில் உண்டான மாறுதலைக் கண்டனர். காலக்கிரமத்தில் எனது ஊளைச் சதையிலிருந்து 35 ராத்தல் இவ்வளவு அனாயாசமாகக் குறைந்தது என்பது ஆச்சரியகரமாக இருந்தது. வயதில் பத்து வருடங்கள் குறைந்த தோற்றத்துடன் உடலமைப்பும் தேறியிருக்கும் தோற்றத்தையும் அளிக்கிறது. வேறு ஒருவித பத்தியமும் இருக்கவில்லை—ப்ரத்யேகமாக உடற் பயிற்சியும் செய்யவில்லை. A. A. D."

இரத்தத்திலிருந்து ஊறி வரும் விஷப் பொருள்களையும், ஜீரணத்தின் பின்னுள்ள கழிவு பதார்த்தங்களையும் தவறாமலும், சுத்தமாகவும் வெளித் தள்ளுவதற்கு "க்ருஷன்" தேகத்தின் உட்புற அவயவங்களுக்கு உதவுவதன் மூலம் அதிகக் கொழுப்பின் மூல காரணத்தையும் தாக்குகிறது. கழிவு பதார்த்தங்களும், விஷப் பொருள்களும் உடலில் சேரும்படி விடுவதால் அவை தேகத்திலுள்ள ரசாயனச் சேர்க்கையால் கொழுப்பாக மாறுகின்றன. நிரந்தரமாகச் சில காலம் க்ருஷன் உட்கொண்டால், அது ஊளைச் சதையைக் கரைத்து தேகத்தையும் முன்பிருந்தது போலாக்கும்.

இன்றே ஒரு பாட்டில் வாங்குங்கள். எல்லா மருந்துக் கடைகளிலும் வியாபாரிகளிடமும் கிடைக்கும்.





KSID. 12

Edited Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press 116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras


"வாங்க மிகச் சிறந்தவை
Platignum"
MADE IN ENGLAND
பிளாட்டினம்
பேனாக்கள் பால்பாயின்டுகள்

LAS (8)


இருமல்களுக்கு
ஸிரோலின்
உட்கொள்ளுங்கள்!
SIROLIN
ரோஷ்
தயாரிப்பு

REGD NO M 4302

*Registered as a newspaper in Ceylo*



நாளுக்கு நாள்
அதிக தெளிவுள்ள
அழகான சருமம்

ரெக்ஸோனா சோப்பை தினமும் உபயோகியுங்கள். இதில் அடங்கி யிருக்கும் 'கேடில்' உங்கள் சரு மத்திற்கு புது ஆரோக்கியமும் தெளிவும் தரும்.




ரெக்ஸோனா

'கேடில்' கலந்த சோப் இது ஒன்றே

சருமத்தை மிருதுவாக்கும் எண்ணெய்களின் பிரத்தியேகக் கலவையின் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட பெயர் இது.

RP. 73-X80 TM

ரெக்ஸோனா ப்ரொப்ரைட்டரி லிமிடெடுக்காக இந்தியாவில் தயாரிக்கப்பட்டது